உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஐப்பசி 06 ஞாயிற்றுக்கிழமை (23.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 331


# சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி

# திருமலையில் தமிழர்கள் திரள்வு!

## சர்வதேச அங்கீகாரத்தைக் கோரி உரிமை முழக்கம்! பிரகடனம் வெளியீடு!!

திருகோணமலை,ஒக்ரோபர்23

**தமிழர் தேசத்தில் நடைமுறையில் உள்ள அரசையும் தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீரிக்குமாறு சர்வதேச சமூகத்தை வலியுறுத்தும் மாபெரும் எழுச்சி நிகழ்வில் திருகோணமலை தமிழர்கள் அணிதிரண்டு பங்கேற்றிருக்கின்றனர். திருமலை உள்துறைமுக வீதியில் இளையோர் விளையாட்டுத் திடலில் நேற்று நடத்தப்பட்ட எழுச்சி நிகழ்வில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் உணர்வெழுச்சியுடன் பங்குகொண்டு உரிமைக் கோஷம் முழங்கினர்.**

எழுச்சி நிகழ்வுக்காக இளையோர் விளையாட்டுத்திடலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களும் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தன.

காலைவேளையில் இருந்தே ஆயிரக்கணக்கான மக்கள் வந்து அரங்கை நிறைத்தனர். காலை 9.30 மணிக்கு அகவணக்கத்துடன் எழுச்சி நிகழ்வு தொடங்கியது.

மங்கள விளக்கு ஏற்றப்பட்டதை தொடர்ந்து தேசியக் கொடியை மாவீரர் மேஜர் கஜேந்திரனின் தந்தையான எஸ்.சிங்காரவேலு ஏற்றினார்.

இளைப்பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர் கே.தங்கராசா தலைமையில் மேடை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. முதலில் சர்வ மதத் தலைவர்களின் ஆசியுரைகள் இடம் பெற்றன.

பிரமஸ்ரீ சோ.ரவிச்சந்திரக் குருக்கள், வண.நந்தரத்னதேரர், எஸ்.எஸ்.சாகுல் ஹமீட், அன்னதாஸ் அடிகள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கினர்.

தொடர்ந்து அரங்க செயற்பாட்டுக் குழுவினர் எழுச்சிப் பாடல்களை இசைத்தனர். அரங்கில் திரண்டிருந்த மக்களும் எழுந்து நின்று பாடல்களைப் பாடி ஆர்ப்பரித்தனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் விபத்தில் இளைஞர் பலி!

ஆனையிறவு,ஒக்.23

ஆனையிறவு மற்றும் பரந்தன் பகுதிகளில் நேற்று இடம்பெற்ற இருவேறு வீதி விபத்துக்களில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்; மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நீர்வேலியைச் சேர்ந்த கந்தசாமி வினோத்ராம் (வயது 23) என்ற இளைஞரே விபத்தில் உயிரிழந்தவராவார்.

நேற்று நண்பகல் பரந்தனுக்கும் உமையாள்புரத்திற்குமிடையே தனது நண்பர் ஒருவரின் மோட்டார் சைக்களில் அமர்ந்திருந்து பயணம் செய்துகொண்டிருந்த வேளை, பின்புறமாக வந்த வாகனமொன்று மோதியதால் இந்த இளைஞர் உயிரிழந்தார் என்றும்-

மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த அவரது நண்பர் படுகாயமடைந்தார் எனவும் - தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை -

(20ஆம் பக்கம் பார்க்க)

எழுச்சி நிகழ்வில் பங்கேற்ற மக்கள் கூட்டம்.



## திருமலை எழுச்சி நிகழ்வுக்கு இங்கிருந்து சைக்கிளில் சென்றடைந்த இளைஞர்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.23



திருமலையில் நேற்று நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஐந்து இளைஞர்கள் வல்வெட்டித்துறையில் இருந்து சைக்கிள் பயணமாக திருமலை சென்றிருந்தனர்.

நீண்ட சைக்கிள் பயணமாகச் சென்று அரங்கை அடைந்தபோது இவர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

தேசியப் பற்றுதலின் காரணமாகவே தாங்கள் இவ்வாறு சைக்கிள் பயணம் செய்து எழுச்சி நிகழ்வில் கலந்துகொள்ளத் தீர்மானித்தனர் என்று இளைஞர்கள் ஐவரும் தெரிவித்தனர். அவர்கள் கூறியதாவது:-

எமது தேசியத் தலைவர் பிறந்த மண்ணில் இருந்து எமது தலைநகரம் திருமலையில் இடம்பெறும் இந்த எழுச்சி நிகழ்வைக் கண்களால் காணவேண்டும் என்ற பேரவாவினாலேயே நாங்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டோம். நாம் நேற்று முன்தினம் காலை வல்வை ஊரில் இருந்து ஆறுபேராக திருமலை நோக்கிய எமது

(20ஆம் பக்கம் பார்க்க)

## நேற்றைய திருமலை எழுச்சி நிகழ்வில் தமிழீழக் கொடி ஏற்றியதற்கு ஆட்சேபம்

திருகோணமலை,ஒக் 23

திருகோணமலையில் நேற்று இடம் பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சிமாநாட்டில் புலிக் கொடி ஏற்றப்பட்டது யுத்த நிறுத்த மீறலாகும்.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் அந்த மாவட்டத்தின் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டிருக்கிறார்.

திருகோணமலையில் தமிழ்த்தேசிய எழுச்சி மாநாடு இடம்பெற்ற இளையோர் விளையாட்டரங்கு அரசிற்குச் சொந்தமான காணி. அதற்குள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடி ஏற்றப்பட்டது யுத்தநிறுத்த மீறலாகும் என்று தெரிவித்த பொலீஸ் அத்தியட்சகர் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பாக கண்காணிப்பு குழுவின் திருகோணமலை மாவட்டத் தலைவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனிடம் தொடர்புகொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-13)

## மீனவருக்கான 'பாஸ்' நடைமுறையை நீக்குவதற்கு படை அதிகாரிகள் மறுப்பு

### கடற்றொழிலாளர்களுடனான சந்திப்பு பயனின்றி முடிவு

யாழ்ப்பாணம்,ஒக்.23

வடமராட்சிப் பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்களின் 'பாஸ்' நடைமுறையினை ரத்துச் செய்வதற்குப் படையினர் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். எனினும் கட்டுப்பாடுகளில் சில தளர்வுகளைச் செய்வதற்குப் படை அதிகாரிகள் இணக்கம் தெரிவித்தனர்.

ஆழிப்பேரலை அனர்த்தத்துக்குப் பின்னர் மீன்பிடித் தொழிலில் ஈடுபடும் வடமராட்சி வடக்குப் பிரதேச (பருத்தித்துறைத் தொடக்கம் தொண்டைமானாறு வரை) மீனவர்கள் படையினரின் கட்டுப்பாடுகளால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக மீனவர் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகளுக்கும் படை அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுப் பிற்பகல் போர்நிறுத்தக் கண்

(20ஆம் பக்கம் பார்க்க)

## வேவு விமானத்தின் சிதைவுகளை பரிசோதிக்க இஸ்ரேலில் இருந்து குழு

கொழும்பு,ஒக்.23

கடந்த புதன்கிழமை நெடுங்கேணிப் பகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வீழ்ந்த விமானப்படையின் ஆளில்லா வேவுவிமானத்தின் சிதைவுகளைப் பார்வையிட இஸ்ரேல் நிபுணர் குழு ஒன்று அடுத்த வாரம் இலங்கை வரவிருக்கின்றது.

இத்தகவலை விமானப்படைத்தளபதி டொனால்ட் பெரேரா தெரி வித்தார்.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விமானம் வீழ்ந்தது என விமானப்படையினர் தெரிவித்திருந்தனர்.

விமானத்தின் சிதைவுகளை நேரில் பார்வையிட்டு, விபத்துக்கான காரணத்தை அறியவே இஸ்ரேல் நிபுணர்கள் குழு இங்கு வருகின்றது எனக் கூறப்பட்டது. (ஐ-3)

## தேர்தலுக்குப் பின் பட்ஜெட்டை சமர்ப்பிக்கக் கோருகிறது ஐ.தே.க.

கொழும்பு,ஒக்.23

வரவு - செலவுத்திட்டத்தை ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரியிருக்கிறது ஐ.தே.கட்சி.

ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியா இது விடயமாக விரிவான கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளார்.


வரவு - செலவுத்திட்டத்தை எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு முடிவுசெய்துள்ளது.


ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் வரவு - செலவுத்திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவது உகந்ததல்ல. தேர்தல் முடிவடைந்த பின்னர் வரவு - செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கரு ஜெயசூரிய கடிதத்தில் கேட்டுள்ளார். (ஐ-3)

## திருகோணமலை எழுச்சி நிகழ்வுக் காட்சிகள்....
















# சமாதானத்துக்கு எதிரான சூழலைத் தவிர்ப்பதற்கு ஐரோப்பிய ஒன்றிய நிலைப்பாடு மாறவேண்டும்

## திருகோணமலைப் பிரகடனத்தில் தெரிவிப்பு

திருகோணமலை,ஒக்.23

தற்போது உருவாகியுள்ள சமாதானத்துக்கு எதிரான சூழல் மாற்றப்படவேண்டியதாயின் ஐரோப்பிய ஒன்றியம் யதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு தனது அங்கத்துவ நாட்டு அரசுகளினால் விடுதலைப் புலிகளின் குழுக்கள் வரவேற்கப்படமாட்டார்கள் என்ற நிலைப்பாட்டை மாற்றவேண்டும் என்று கோருகின்றோம்.

திருகோணமலையில் நேற்று நடந்த எழுச்சி நிகழ்வின் முடிவில் வெளியிடப்பட்ட எழுச்சிப் பிரகடனத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடு சுதந்திரம் பெற்று அரை நூற்றாண்டுக்குப் பின்னும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ள சிங்களப்பௌத்த பேரினவாதம், தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு அமைதி வழியில் நியாயமான அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான அனைத்து பாதைகளையும் முற்றாக மூடியுள்ளது.

வரலாற்று ரீதியான பாரம்பரிய பூமியில் வாழ்ந்து வரும் தமிழ்பேசும் மக்களாகிய நாம் ஒருங்கிணைந்து, எமது அவலமானதும் ஆபத்தானதுமான நிலையை சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிப்படுத்தவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம்.

வெளிநாடுகள் ஆக்கிரமிப்புச் செய்வதற்கு முன்னர் தமிழ் பேசும் இனம் இலங்கை நாட்டில் தனியரசாக இருந்துள்ளது. ஆங்கிலேயர் ஒற்றையாட்சி அரசமைப்பினைத் திணித்தனர். அதன் மூலம் தமிழர் தாயகம் சிங்கள தேசத்துடன் இணைக்கப்பட்டது.

1948இல் ஆங்கிலேயர் தாம் வெளியேறியபோது நாட்டின் ஆட்சிமுறையை முழுமையாக எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம்கையளித்துவிட்டுச் சென்றார்கள்.

இவ்வாறு முறையற்ற வகையில் தாம் பெற்றுக்கொண்டு ஆட்சிமுறைமையினைப் பயன்படுத்தி அதன் மூலம் நாடாளுமன்றத்தில் கிடைத்த பெரும்பான்மையைப் பிரயோகித்து தமிழ் பேசும் மக்களின் மொழி, நிலம் ஏனைய சகல உரிமைகளையும் சிங்கள இனம் பறித்துக்கொண்டது.

எமது பாரம்பரிய வாழ்விடங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் சின்னாபின்னமாக்கப்பட்டன. மொழி உரிமை, கல்வி உரிமை ஆகியன மறுக்கப்பட்டதுடன் தமிழ் பேசும் இனத்தின் வாழ்வுரிமையும் நில ஆக்கிரமிப்பினால் பறிக்கப்பட்டது.

தமிழர் தாயகத்தில் தமிழ் பேசும் மக்களைச் சிறுபான்மையினராக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எங்கள் பிரதேசத்தின் இன விகிதாசாரம் திட்டமிட்டு மாற்றப்பட்டிருக்கின்றது.

தமிழர் தாயகத்தின் தலைநகர் என்று தமிழ் பேசும் மக்களால் தீர்மானிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டத்தில் நாடு சுதந்திரமடைந்த பின்னர் ஏற்படுத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள், பாரம்பரிய பூமியில் தமிழ் பேசும் மக்கள் நிம்மதியாக அடிப்படைச் சுதந்திரங்களுடன் வாழமுடியா நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

நாடு சுதந்திரமடைந்த பின்பு பதவிக்கு வந்த பேரினவாத அரசாங்கங்களினால் பெரும்பான்மையினத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் நாடாளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 1972 குடியரசு அரசமைப்புச் சட்டம், 1978 நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்திய அரசமைப்புச் சட்டம் ஆகியன தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றலோ அங்கீகாரமோ பெறப்படாமல் நிறைவேற்றப்பட்டவையாகும். தமிழ்த்தேசிய இனத்தை ஒடுக்கி, இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்களையும் அவர்களது சகல உரிமைகளையும் பறிக்கும் அரசமைப்புச் சட்டங்களாவே இவை தமிழ் பேசும் மக்களால் அடையாளம் காணப்பட்டன.


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு


ஆட்சியுரிமையிலிருந்து தூக்கி வீசப்பட்ட தமிழ்த்தேசிய இனம், தனது இழந்த உரிமையை மீளப்பெறுவதற்காக ஜனநாயக, சாத்வீக வழியில் போராட்டம் நடத்தியது. இப்போராட்டத்தின் ஓர் அங்கமாக பண்டா - செல்வா ஒப்பந்தம் (1957) டட்லி - செல்வா ஒப்பந்தம்(1965) போன்ற உடன்படிக்கைகள் செய்யப்பட்ட போதிலும்கூட அவை ஒரு தலைப்பட்சமாக சிங்கள பேரினவாத அரசுகளினால் நிராகரிக்கப்பட்டன. மிதவாத தமிழரசியல் தலைமையினால் மேற்கொள்ளப்பட்ட சகல அரசியல், ஜனநாயக சாத்வீக முயற்சிகள் தோல்விகண்டதன் காரணமாக, 1976 மே மாதம் 14ஆம் திகதி 'தமிழீழப் பிரகடனத்தை' நிறைவேற்றும் நிலைக்கு தமிழ் பேசும் மக்கள் தள்ளப்பட்டார்கள்.

1977 நாடாளுமன்றத் தேர்தலில் இப்பிரகடனம் வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் அங்கீகாரத்தினைப் பெற்றது. தமிழ் பேசும் மக்களினால் தொடரப்பட்ட எல்லாவிதமான போராட்டங்களையும் தொடர்ந்தும் பேரினவாத அரசுகள் முற்றுமுழுதாக பெரும்பான்மையினத்தைக் கொண்ட தங்களின் ஆயுதபடைகளினால் நசுக்கி தமிழ் பேசும் மக்களின் எழுச்சியை வன்முறையைப் பாவித்து ஒடுக்கின. அரசினதும், அரச படையினரினதும் வன்முறைகளுக்குப் பதிலடி கொடுக்கவே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர். தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தின் ஆணிவேராக அமைந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள், தேசிய தலைவரின் வழிகாட்டலின் கீழ் நடத்திவந்த ஆயுத விடுதலைப் போராட்டத்தின் விளைவாகவே அரசு பணிந்து நோர்வே அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது.

மூன்றரை ஆண்டுகளாக நீடித்துவரும் யுத்தநிறுத்தம், தமிழ்பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஏற்ப தீர்வு காண உதவுவதற்குப் பதிலாக சிங்களப் பேரினவாத அரசியல் சக்திகள் தமிழ் பேசும் மக்களின் நியாயமான நிலைப்பாட்டைப் பலவீனப்படுத்துவதற்கும் தங்களின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த நெருக்கடி மிக்க சூழலில் திருகோணமலையில் தமிழ்த்தேசிய எழுச்சி விழா நடைபெறுகின்றது. நில ஆக்கிரமிப்புடன் ஏனைய சகலஉரிமைகளும் பறிக்கப்பட்டு இன ஒழிப்பு தொடர்கின்ற வேளையில் தமிழர் தாயகத்தில் தமிழ் பேசும் மக்கள் தங்களின் உணர்வினை வெளிப்படுத்தும் முகமாக ஒன்றுகூடுகின்றோம்.

அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ்தேசிய இனத்தின் விடுதலை வேட்கையை சர்வதேச சமூகத்திற்கு உணரவைப்பதே திருகோணமலை தமிழ்த்தேசிய எழுச்சி நாளின் முக்கிய நோக்காக அமையும்.

பேரினவாத அரசுகள் மற்றும் தீய சக்திகளின் பசப்பு வார்த்தைகளுக்கு சர்வதேச சமூகம் மசிந்துபோகக்கூடாது என்பதனையும் திருகோணமலை தமிழ்த்தேசிய எழுச்சி விழா வலியுறுத்தும்.

சட்ட ஆட்சியின் கூறுகளான குற்றப்பத்திரிகை விசாரணை, தீர்ப்பு என்பன எதுவுமின்றி ஒரு தலைப்பட்சமாக விடுதலைப் புலிகளுக்கு எதிராக திருகோணமலையில் கடல்தளம் அமைத்து பல்லாண்டுகளாகப் பயன்பெற்ற பிரித்தானியாவின் தலைமையில் ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துள்ள நடவடிக்கைக்கு தமிழ்பேசும் மக்களாகிய நாம் முற்றுமுழுதான எமது எதிர்ப்பினைத் தெரிவிக்கின்றோம்.

எனவே, தற்போது உருவாகியுள்ள சமானத்திற்கு எதிரான சூழல் மாற்றப்படவேண்டிய தாயின், ஐரோப்பிய ஒன்றியம் யதார்த்த நிலைமைகளைப் புரிந்துகொண்டு, தனது அங்கத்துவ நாட்டு அரசுகளால் விடுதலைப் புலிகளின் குழுக்கள் வரவேற்கப்படமாட்டார்கள் என்ற நிலைப்பாட்டினை மாற்றக் கோருவதுடன்,

எமது தாயக நிலைத்தையும் கடலையும் யுத்தநோக்குடன் ஆக்கிரமித்து நிற்கும் ஸ்ரீலங்கா அரச படையினர் அவற்றினை விட்டு உடன்வெளியேறவேண்டும் என்றும் -

எமது நிலத்தில் எமது பலத்தில் எமது தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சூழ்நிலை உருவாகவேண்டும் என்றும்- அந்த உன்னதமான உயரிய சுதந்திர வாழ்வை நோக்கி தமிழ்மக்கள் அணிதிரண்டுள்ளோம் என்பதையும் இந்த எழுச்சிப்பிரகடனத்தின் மூலம் முன்வைக்கும் அதேவேளை, தமிழ் பேசும் மக்களாகிய எமது அடிப்படை வாழ்வுரிமையையும் சுதந்திர வாழ்வையும் ஏற்றுக்கொண்டு எமது மரபுவழித் தாயகம், தேசிய இனம், தன்னாட்சி என்பனவற்றின் அடிப்படையில் எம்மையும் எமது இறைமைக்கான போராட்டத்தையும் அங்கீகரிக்க வேண்டுமென்றும் சர்வதேச சமூகத்தை நாம் கோரி நிற்கின்றோம் (3-151)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# பண்டாரநாயக்காக்களின் தவறுகளுக்கு பிராயச்சித்தம் செய்வாரா சந்திரிகா?

தந்தை விட்ட தவறை மகள் ஒப்புக்கொள்கின்றார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியில் இருந்து வெளியேறும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, தமது ஆட்சியின் அந்தத்தில் 'சுடலை ஞானம்' பிறந்தவராக, ஆற்றும் உரைகளின் ஊடாக இவ்வாறு தந்தையின் சார்பில் மகள் அளிக்கும் 'குற்ற ஒப்புதல் வாக்குமூலம்' வெளிப்படுகின்றது.

கடந்த வியாழனன்று இரவு மாகாணசபை முதல்வர்கள் மற்றும் உறுப்பினர்கள் மத்தியில் அவர் ஆற்றிய உரையில் இந்த ஒப்புதலும் இடம்பெற்றது.

*"பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் செய்யப்பட்ட அந்த நாள் முதல் - அதாவது சிறுவயது முதல் (அப்போது சந்திரிகாவுக்கு வயது பதின்மூன்று) அதிகாரப்பகிர்வு குறித்து எனக்கும் தெரியும். அந்த ஒப்பந்தத் தீர்வில் நம்பிக்கையில்லாமல் அந்த ஒப்பந்தத்தை எனது தந்தை கிழித்தெறியவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் அவருக்கு (அரசு நிலைத்திருப்பதற்கு) ஒத்துழைப்பு வழங்கிய ஒரு சிறு குழுவினரான அடிப்படைவாதிகளின் வற்புறுத்தலுக்காக அவர் அவ்வாறு செய்தார் (ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்தார்). அன்று அந்த விவகாரத்தை அவர் சரிவரக் கையாண்டிருந்தால் (அதாவது, அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறியாமல் அதை அவர் நடைமுறைப்படுத்தியிருந்தால்), அதைச் செய்வதற்கு அவரது அமைச்சரவை அவருக்கு சக்தியை (ஆதரவை) வழங்கியிருந்தால், இன்று இனப்பிரச்சினையோ, யுத்தமோ இருந்திருக்காது. இலங்கை உலகத்திலேயே அபிவிருத்தி அடைந்த நாடாக இருந்திருக்கும்".*

- இப்படித் தமது பதினொரு வருட ஆட்சிக்காலத்தின் முடிவில் 'தத்துவம்' உரைக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

இப்போது தாம் உரைக்கும் இந்தத் தத்துவத்தின் தாற்பாரியம் அவர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சமயத்தில் அவருக்கு உறைத்திருக்குமானால் அவர் எவ்வளவோ செய்திருக்கலாம். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கண்ட 'மகராசி' என்று புகழப்படும் நிலைக்கு அவர் உயர்ந்திருக்கலாம். ஆனால், ஆட்சி அதிகாரத்தின் இறுதிக்காலம்வரை, இனவாதிகளையும் கூட்டிணைத்துக் கொண்டு, தனது அதிகாரத்தையும், ஆட்சியையும் உறுதிப்படுத்திக்கொள்ளும் சுயநல நோக்குக்காகக் கொடூரப் போரைத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டு, ஆட்சி அதிகார சுகபோகங்களை அனுபவித்து, சிறுபான்மையினருக்கு எதிரான பெரும்பான்மையினரின் கொடூர அடக்குமுறையைத் தனது தலைமையிலான அரசினால் ஒரு தசாப்தகாலத்துக்கு மேல் திணித்த பின்னர், இப்போது அதிகாரம் கையைவிட்டுப் பறிபோகும் சமயத்தில், அதிகாரப் பகிர்வு குறித்துத் 'தத்துவம்' பேசுகிறார் அம்மணி.

பண்டாரநாயக்காக்களை அரசியலில் இருந்து ஒழிக்கும் சதித் திட்டமும் அரங்கேறுவதாக அவர் புலம்புகிறார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுவது போல பண்டாரநாயக்காக்களின் குடும்ப சந்ததியை அரசியலில் இருந்து ஒழிக்க முயற்சி நடக்கின்றதோ என்னவோ தெரியவில்லை. ஆனால், தென்னிலங்கை அரசியலில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா விதைத்த பேரினவாத அரசியலை - பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்குடைய இனவாதத்தைக் கிளப்பி, சிங்கள வெறியை ஊட்டி, அதன் மூலம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் 'பண்டாரநாயக்காயிஸம், கொள்கையை - அழிய விடாமல், மறைய விடாமல், நிலைநாட்டும் முயற்சி மட்டும் முழு மூச்சாக முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவை அடுத்து, அவரது அரசியல் அணியால் ஜனாதிபதி பதவிக்கு வேட்பாளராக நிறுத்தப்பட்டிருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இனவெறி மூலம் ஆட்சியைப் பிடிக்கும் பண்டாரநாயக்கா கொள்கையை, பண்டாரநாயக்காவின் மகளான சந்திரிகாவை விட, செம்மையாக நிலைநிறுத்துவதில் உறுதியாக இருக்கிறார் என்பது தெளிவு.

தந்தையார் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தலைமை தாங்கிய - பேரினவாத வெறியுடன் கூடிய - 'சிங்களம் மட்டும்' என்ற இயக்கமே 1956 இல் அவரை அரசியல் அதிகாரத்துக்குக் கொண்டுவந்தது. சரியாக ஐம்பது ஆண்டுகள் கழித்து, அவரது மகள் அரசியல் அதிகாரத்திலிருந்து வெளியேறும் போதுதான் தந்தையின் போக்கு ஏற்படுத்திய பேரழிவுகளையும், பின்னடைவுகளையும் கணக்கிட்டு, பண்டாரநாயக்காக்களின் குடும்பம் விசனம் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அரசியல் அதிகாரத்தில் இருப்பதற்காக பண்டாரநாயக்காக்கள் செய்த 'தகிடுதத்தங்கள்' மற்றும் ஊட்டிய இனவெறி ஆகியவற்றின் மிகமோசமான விளைவுகளைத்தான் நாடு இன்று இப்படி அனுபவித்துக்கொண்டிருக்கின்றது.

இந்தத் தவறுகளை உணர்ந்து இந்த நேரத்தில் - பண்டாரநாயக்காக்களின் குடும்ப சந்ததி அரசியலிலும் அதிகாரத்திலும் இருந்து ஒதுங்குவது குறித்து பண்டாரநாயக்காவின் சந்ததியைச் சேர்ந்த - ஜனாதிபதி குமாரதுங்காவே 'சுடலை ஞானம்' பேசும் இந்த வேளையில் கூட அந்தச் சந்ததி விட்ட தவறுகளுக்குப் 'பிராயச்சித்தம்' செய்ய வழியுண்டு.

இந்த இலங்கைத் தீவுக்கு பெரும் சாபக்கேடாக வந்தமைந்த பேரினவாத ஒடுக்குமுறையை - அதன் குரூர பரிமாணங்களை - இலங்கைத் தீவிலிருந்தே அடியோடு அகற்றுவதற்கு சூளுரைத்து, நீதி, நியாயத்தை நிலை நாட்டுவதற்குக் கங்கணம் கட்டி, உறுதியோடும், உத்வேகத்தோடும், நேர்மைத்திறனோடும் பணியாற்றவும், அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுள்ள சிறுபான்மையினருக்கு அவர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுத்து, அவர்களுடைய நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யவும் ஜனாதிபதி சந்திரிகா திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

அந்தத் திடசங்கற்பத்தைச் செயற்படுத்துவதற்கு அதில் பற்றுறுதி கொண்டு முழுமூச்சாக காரியமாற்ற அவர் முன்வரவேண்டும்.

ஜனாதிபதிப் பதவியில் எஞ்சியிருக்கப் போகும் 25 நாள்களின் போதும் அதன் பின்னரும், இதுவரை அடக்கி, ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களின் நலனுக்காகப் பணியாற்றி அவர்களுக்கு உரியதை - உரிமையை - பெற்றுக்கொடுக்க உழைப்பதே தனது தலையாயப் பணி என்று உளப்பிரதிக்ஞை செய்து, அதன்படி செயலாற்ற ஜனாதிபதி சந்திரிகா உறுதிகொள்வாராயின், இந்த நாட்டில் அவரும் அவரது தாயும், தந்தையும் இன ஒடுக்குமுறை மூலம் புரிந்த 'பாவங்களுக்கு' அது 'பிராயச்சித்தம்' செய்ததாக அமையும். செய்வாரா அவர்?

## போட்டிப் பரீட்சையில் குறைந்த புள்ளிபெற்ற

# சுமார் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்க ஆட்சேபனை

கொழும்பு,ஒக்.23

பட்டதாரிகள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சேர்த்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளில் ஆசிரிய நியமனத்துக்கான போட்டிப் பரீட்சையில் குறைந்த புள்ளிபெற்ற சுமார் 10 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதில்லை என கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்களாகச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் சுமார் 10 ஆயிரம் பட்டதாரிகள் குறைவான புள்ளிகளையே பெற்றுள்ளனர். அதனால் அவர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்க இயலாதுள்ளதாகவும் - அதற்குப் பதிலாக அபிவிருத்தி உதவியாளர்களாக நியமனம் வழங்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது என்றும் - அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய சேவைகள் விதிமுறைகளுக்கு அமைய போட்டிப்பரீட்சையில் தகுதிபெறாதோருக்கு நியமனம் வழங்கப்படுவது சட்டவிதிகளுக்கு முரணானது என்பதால் பாடசாலைகளின் அலுவலகங்கள், நூலகங்கள், இரசாயனக் கூடங்கள் போன்றவற்றில் அபிவிருத்தி உதவியாளர் பதவிகளை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

தகுதிபெற்றுள்ள சுமார் 8 ஆயிரம் பட்டதாரிகள் ஏற்கனவே ஆசிரிய சேவைகளில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். அபிவிருத்தி உதவியாளர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ள பட்டதாரிகளுக்கு இம்மாத இறுதிக்குள் நியமனக் கடிதம் அனுப்பப்படும். ஆசிரிய சேவையில் 20 ஆயிரம் பட்டதாரிகள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களென அரசு அறிவித்துள்ள போதிலும் தற்போது நிலவும் ஆசிரிய வெற்றிடங்களுக்கு அமைய 8 ஆயிரம் பேர் மாத்திரமே சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ஒ-206)

# தமிழ், முஸ்லிம் திரைப்படக் கலைஞர்களுக்கு தொழில்சார் பயிற்சிகளை வழங்கத்திட்டம்

## 'ஸ்கிறிப்ற்நெற்' நிறுவனம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஒக்.23

தமிழ், முஸ்லிம் மக்களிடையே வாழும் திரைப்படப் படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் 'ஸ்கிறிப்ற்நெற்' எஸ்.எல். நிறுவனம் திரைப்படம் தொடர்பான இலவச தொழில் முறைப் பயிற்சி ஒன்றை வழங்கவுள்ளது.

திரைக்கதை எழுத்து, இயக்கம், தயாரிப்பு முகாமைத்துவம், படப்பிடிப்பு, ஒளியமைப்பு, ஒலிப்பதிவு, ஒப்பனை, காட்சி விதானிப்பு, வேடவுடை, படத்தொகுப்பு ஆகிய துறைகளில் பயிற்சியளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக நிறுவன இயக்குநர் பிரசன்ன ரட்னாயக்க வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிப்பட்டுள்ளதாவது:-

திரைக்குப்பின் இருந்து இயங்கக் கூடிய துறைசார் வல்லுநர்களை உள்ளடக்கிய முழுமையான தயாரிப்பு அணிகளை உருவாக்குவதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

இப்பயிற்சியை நிறைவு செய்பவர்களுக்கு தெற்கில் இயங்கும் பல திரைப்படத்தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் ஆகியோருடன் திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களும் தற்காலிக வேலை வாய்ப்பை வழங்க முன்வந்துள்ளன. இரண்டு வருடங்களுக்கு நடத் தப்படவிருக்கும் இப்பயிற்சித் திட்டம் 6 பிரிவுகளைக் கொண்டதாக வெவ்வேறு காலகட்டங்களில் நடைபெறும். இத்திட்டத்தின் மூலம் 2 வருடங்களில் மொத்தம் 72 திரைப்படத்தயாரிப்புக் கலைஞர்கள் உருவாக்கப்படவுள்ளனர். அத்துடன், தமது துறைசார் வேலையையும் பெறுவர். இப்பயிற்சி நெறிக்கு 20 முதல் 40 வயதுக்கு இடைப்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

ஆர்வலர்கள் சுயவிவரக்கோவை அடங்கிய விண்ணப்பப்படிவத்தை (Reel Peace Apprentice Ship Scheme, Script Net SL, 46, Vaverset Place, Colombo-6 என்ற முகவிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பிவைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (9-202)

# மருந்துவகைச் சட்ட மூலத்துக்கு அமைச்சரவையின் அங்கீகாரம்

கொழும்பு,ஒக்.23

தரமான மருந்து வகைகளை பொது மக்களுக்கு நியாயமான விலையில் வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட தேசிய மருந்து வகைச்சட்ட மூலத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் சுககாதார அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

விரிவான வகையில் உருவாக்கப்பட்ட இச்சட்டமூலம் கடந்த ஜூலை மாதம் சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. வெளிநாடுகளில் இருந்து தற்போது இறக்குமதி செய்யப்படும் 9 ஆயிரம் வகையான மருந்து வகைகளில் அத்தியாவசியமான 350 மருந்து வகைகளை மட்டும் இறக்குமதி செய்வதற்கு இச்சட்டமூலம் வகை செய்கின்றது.

இதன்மூலம் மருந்து வகைகளின் இறக்குமதிக்காக வருடாந்தம் செலவிடப்படும் அந்நியச் செலாவணியில் கோடிக் கணக்கான ரூபா நிதியை மீதப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புக் கிட்டும். (ஒ-205)

# வவுனியா தேசிய எழுச்சி நிகழ்வுக்கு வடமராட்சியிலிருந்து சைக்கிள் பேரணி

வவுனியாவில் இடம்பெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் பங்கேற்க வடமராட்சியில் இருந்துசெல்பவர்கள் சைக்கிள் பேரணியாகச் செல்லத் தீர்மானித்துள்ளனர்.

எதிர்வரும் 28 ஆம் திகதி வவுனியாவில் தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வு இடம்பெறவுள்ளது. நாட்டின் பலபகுதிகளையும் சேர்ந்த பொதுமக்கள் இந்த நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

வடமராட்சியிலிருந்து இந்த எழுச்சி நிகழ்வில் பங்கேற்கச் செல்பவர்கள் சைக்கிள் பேரணியாகச்செல்வதற்குத் தீர்மானித்துள்ளனர். இப்பேரணியில் தமிழ் எழுச்சியை எடுத்தியம்பும் அலங்கார ஊர்தியும் உடன் செல்லவுள்ளது.

வடமராட்சி பொதுசன ஒன்றியம் மற்றும் கடற்றொழிலாளர் சங்கங்கள் இணைந்து இதற்கான ஏற்பாட்டை முன்னெடுத்துவருகின்றன. (ஒ-70)

# காரை.சுந்தரம்பிள்ளையின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.23

கவிஞர் கலாநிதி காரை. செ.சுந்தரம்பிள்ளையின் நினைவு அஞ்சலி நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி க.குணராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கிறிஸ்தவ இறையியல் கல்லூரி முதல்வர் கலாநிதி சு.ஜெபநேசன் அடிகளார், வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், முன்னாள் அதிபர் ஆ.சபாரத் தினம், சோ.பத்மநாதன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, வே.யுகபால சிங்கம், இ.சங்கர், நவாலியூர் நா.செல்லத்துரை, வேல்ஆனந்தன்ஆகியோர் அஞ்சலிஉரைகளை நிகழ்த்துவர்.

தொடர்ந்து கவிதாஞ்சலி நிகழ்வும் இடம்பெறும். (8-204)

# கட்டாயக் கல்வி ஊட்டும் திட்டத்தில் பாடசாலை அதிபர்கள் அசட்டை!

## உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆதங்கம்

கரவெட்டி,ஒக்.23

கட்டாயக் கல்வி ஊட்டல் திட்டத்தை முன்னெடுப்பதில் பாடசாலை அதிபர்களில் பெரும்பாலானவர்கள் அசட்டையாக உள்ளனர் என்று வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.சிறீபதி ஆதங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:-

பாடசாலைகளில் மாணவர் வரவை அதிகரிக்கக் கல்விக் குழுக்கள் ஊடாகக் கட்டாயக் கல்வி ஊட்டல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இக்குழுக்களை வலுப்படுத்தப் பாடசாலைகளில் தனித்தனியே கலந்துரையாடல் நடத்தும்படி வடமராட்சியில் உள்ள 22 பாடசாலைகளுக்குச் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. ஆனால், இரு பாடசாலை அதிபர்கள் மட்டுமே அதற்குப் பெறுப்பேற்றுப் பதிலளித்துள்ளனர். இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிபர்கள் பலரும் அக்கறை காட்டாமை கவலையளிக்கிறது. இளம் தலைமுறையினர் [illegible] கல்வி கிட்டாது தவறான வழிகளு[illegible] னைத் தடுக்க [illegible] கட்டாயக் கல்வித் [illegible] முன்னெடுக்கப் பாடசாலை அதிபர்கள்அதிக அக்கறை காட்டவேண்டும் - இவ்வாறு உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ-70)

# துணைப்படை பயிற்சி நிறைவு

கரவெட்டி,ஒக்.23

வடமராட்சி வடக்கு, கடற்புலிகளின் துணைப்படைப் பயிற்சியை மேற்கொண்ட 3ஆம் கட்ட அணியினர் இன்று ஞாயிற்றுக்கிழமை தமது பயிற்சியினை முடித்து வெளியேறுகின்றனர்.

இதனையொட்டிய நிகழ்வு இன்று மாலை 5 மணிக்கு மருதங்கேணிப் பிரதேச அலுவலகப் பிரிவில் நடைபெறவுள்ளது. (ஒ-70)

## நாளை

ஐப்பசி 07
திங்கட்கிழமை
24.10.2005
திதி: சப்தமி
முன்னிரவு : 07.36 வரை
நட்சத்திரம்: புனர்பூஷம்
பின்னிரவு 12.09 வரை
சுபநேரம்: 12.02 - 01.32
ராகுகாலம்: 07.32 - 09.02
(யாவும் பழைய நேரப்படி)

## உதாவாக்கு

சந்தோசம் இறைவனால் உண்டாக்கப்பட்டது; சஞ்சலம் மனிதனால் தேடிக்கொள்ளப்பட்டது.

- ஸ்ரீ ஜெயன்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதியில் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: S. சித்ராரூபி, இல.31, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (41790)

நல்ல இன, பூச்சி அகற்றிய, முதலாவது தடுப்பூசி போடப்பட்ட அல்ஷேசியன் (ஜேர்மன் செப்பேட்) குட்டிகளும் வீட்டுப்பாதுகாப்புக்குரிய டோமர் கிறேடேன் குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு செல்லையா - உருத்திரா, கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (41766)

LX 48 -G வகையுடைய (LONCIN) லொன்சன் மோட்டார் சைக்கிள் (புதியது) காப்புறுதி வரி என்பன செலுத்தியதுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 699787, 0773 107716. (41736)

ஒட்டோமற்றிக் வாஷிங்மிஷின், ஒட்டோமற்றிக் ஒவின் (Oven) என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி உருத்திரமூர்த்தி நிர்மலா, புளியடி அருகில், வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை. (41789)

தரமான மெசின் மூலம் அரிந்த கொங்கிறீற் கற்கள், கொங்கிறீற் வேலித் தூண்கள், கட்டடத் தூண்கள், அலங்காரத் தூண்கள், அலங்கார பூக்கற்கள், பூச்சாடிகள் என்பன வேண்டிய அளவுகளில் விற்பனைக்குண்டு. தொடர்பு: அகிலன், 17, ஐயனார் கோயில் வீதி (கெங்காதரன் வைத்தியசாலை அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 0773144884. (40603)

சார்ப் புறொஜெக்ட் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. ஸ்ரீஸ்கந்தராசா, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு (கல்வாரிச் சேர்ச்சுக்கு அருகில்). (41799)

ரொயாட்டா ரொயாஸ் கன்ரர் வான் சிங்கிள் வீல் 43-XXXX விற்பனைக்குண்டு. தொடர்பு: 35, வைமன் றோட், யாழ்ப்பாணம். T.P.: 0776284313. (41851)

59-XXXX தொடரிலக்கமுடைய டொல்பின் வான் 12 AC றொட்டேசன் சீற் உடையது விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777739883. (41860)

### காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு, பிறவுண் வீதியில் உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: S. ஸ்ரீஸ்கந்தராசா, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு (கல்வாரிச் சேர்ச்சுக்கு அருகில்). (41800)

கல்வியங்காடு, இராச வீதி, கோப்பாய் தெற்கில் 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இருந்து ¼km தூரத்தில்). வீடு கட்டுவதற்கும் தோட்டம் செய்வதற்கும் உகந்தது. பகுதியாகவும் கொடுக்கப்படும். தொடர்பு: தயாளன்,மே/பா. தயா ஸ்ரோர்ஸ், G.P.S. வீதி, கல்வியங்காடு. T.P.No.0779506884, 03-95600784. (41853)

மானிப்பாய், கனகசபை முதலியார் ஒழுங்கையில் 3பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி இராஜகுலேந்திரன். T.P.: 024 222 3543. (சி-45888)

### வீடும் காணியும் விற்பனைக்கு

மானிப்பாய், சங்குவேலி தெற்கில் 1½ பரப்புக் காணியும் 6 அறைகளும் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0112543549. (41354)

### நாய்க்குட்டிகள் விற்பனை

45 நாள்கள் நிரம்பிய கிறேட்டேன் (Great Dane) ஆண் நாய்க்குட்டிகளும் வளர்ந்த பெண் நாயும் ஜேர்மன் செப்பேட் பெண் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 9, பினைசர் ஒழுங்கை, கண்டிக்குளி மகளிர் கல்லூரி அருகில், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (41678)

2மாதம் நிரம்பிய Dachshund நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தன பாலசிங்கம், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41856)

### மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33 வயதுடைய, நல்லநிறமுடைய, பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியைக்கு, 39 வயதுக்குட்பட்ட, அரசாங்கம்/வங்கி/கூட்டுத்தாபனம்/பட்டதாரி ஆசிரியர் தேவை. சீதனம் உண்டு. தொடர்புகளுக்கு சண்முகராஜா, மதிப்பீட்டாளர், 387, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (41742)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச சேவையில் பணிபுரியும் உத்தராட நட்சத்திரத்தில் 1977இல் பிறந்த 5' உயரமுள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. ஜாதகத்துடனும் குடும்ப விவரத்துடனும் தொடர்பு கொள்ளவும். தொடர்: இல. 2724. (41752)

### மணமகள் தேவை

இங்கிலாந்தில் நிரந்தர வதியுடமையுள்ள, கணனி ஆலோசகராகத் தொழில்புரியும், 28 வயதுடைய, திருவோண நட்சத்திரமுடைய மணமகனுக்கு பல்வைத்தியர் அல்லது வைத்தியத் தொழில் புரியும் மணமகள் தேவை. தொடர்பு: K.P.S.நாதன் (இளைப்பாறிய அரச நில அளவையாளர்), இராச வீதி, தோப்பு, அச்சுவேலி.T.P.: 0779613050. (41719)

### மணமக்கள் தேவை

சிவாலயாவின் உறவுப் பாலமூடாக பயணம் செய்து, சொந்தங்களை ஏற்படுத்த விரும்பும் இந்து, கிறிஸ்தவ மணமக்களை அன்புடன் வரவேற்கின்றோம். நீங்களும் சொந்தங்களைத் தேடுகிறீர்களா எமது நிலையத்தை நாடுங்கள். S.K. சிவகரன் அமைப்பாளர் SHIVAA LAYA INTERNATIONAL MARRIAGE BUREAU, No-11, YAMUNA STREET, NALLUR, JAFFNA. T.P.: 0776528641. (41797)

### திருமணசேவை

தங்கள் பிரியத்திற்குரிய தேடல் உள்நாட்டு மணமகனா? பிரபல திருமண ஆற்றுப்படுத்துநர் சயதெரிவுமுறை முன்னோடி குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனிடம் நூற்றிமுப்பது இலங்கை மணமகன்மாரின் கடிதக் கோப்புக்கள் இன்று கைவசமுண்டு. மேலதிக விவரங்களுக்கு கிழமை நாள்களில் மாலை 4.30 இற்கு மேல் வேல் அமுதனிடம் தொடர்புகொண்டு விசாரித்து அறிய தொலைபேசி: 2360488, 4514396, சந்திப்பு முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில் முகவரி 8/3/3 Metro Aportmint, 55, Lane, Colombo - 06. (சி-45836)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்துபோடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 31.10.2005, 4.11.2005 திங்கட்கிழமை, பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் காரன் - உடுவில் பாம், ஆலடி- உடுவில், நல்லூர் - பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41855)

### இறைச்சிக் கோழி விற்பனை

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (41857)

### சமஸ்கிருத நூல்கள்

திரவிய சூடாமணி மீண்டும் வெளிவந்து விட்டது. லஷ்மி, மஹாமாரி, சாஸ்தா, தட்சனாமூர்த்தி, சண்டேஸ்வரர், துர்க்காமண்டப பூஜைகள் தனித்தனியே ஸ்பர்சாகுதிப் புத்தகங்கள், ஸ்வரங்களுடன் வேதமந்திரங்கள், சிவன் யந்திர பூஜை முதலியன வெளிவந்து விட்டன. தொடர்புகளுக்கு கோப்பாய் சிவம், கந்தசாமி கோயிலடி, இணுவில்.
T.P.: 021 222 6004. (41605)

### தவறிவிட்டது

முகமாலை - யாழ்ப்பாணம் வந்த 414 இலக்கமுடைய C.T.B. பஸ்ஸில் முக்கியமான ஆவணங்கள், ஒரு தொகை நகை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: சு.தனிநாயகம், பரமேஸ்வரன் இல்லம், தாவடி.
T.P.: 077-9231468. (41798)

### BRIDEGROOM WANTED

For my niece, Hindu, Age 33, English Trained Teacher, Fair, Presentable looks. A state Service, Local Government, Bank, Corporation, Graduate teacher, within 39 years age. Dowry available.
**Sanmugarajah, Valuer,**
387, Temple Road, Nallur, Jaffna.


## பெக் லோடட் பவர் ஸ்ப்ரேயர்



**General Equipments Limited**
400, Sri Sangaraja Mawatha, Colombo 12.
Tel: 2345046, 2327264, 2343822, 2343823, 2430799
Fax: 2434637


### விற்பனைக்கு

தென்மராட்சியின் முன்னணி கணனி நிறுவனம் இயக்கநிலையில் முழுமையாக விற்பனைக்கு.
தொடர்பு இல. (41862)
**021 222 2715** (6-8 a.m.)

### எவரெஸ்ட் கருவேலன் பற்பொடி

முரசுகரைதல், வாய்நாற்றம், பல்வேதனை, பல்லரணை, பல்கூச்சம் ஆகியவற்றை நிவர்த்திப்பதுடன் பற்களையும் நன்கு மினிரச் செய்யும். சகல வியாபார நிலையங்களிலும் 25 கிராம், 15 கிராம் அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். (41316)(42-19-13)

### வான் சாரதி தேவை

நிறுவனம் ஒன்றுக்கு குடாநாட்டிலும் கொழும்பிலும் வியாபார முயற்சிகளை மேற்கொள்ள வான் சாரதி தேவை.
**தொடர்பு:- 0777 393827**
(சி/45869)(46-19-13-42)

### மணப்பெண் அலங்கார வகுப்புகள்

வெள்ளவத்தை Nature Way இல் மணப்பெண் அலங்கார Facials, Wedding Structures, Rich Cakes, B'day Cakes தையல், Flower Decorations என்பவற்றிற்கான Orders ஏற்றுக்கொள்ளப்படும். இவற்றுக்கான வகுப்புகள் சான்றிதழுடன் நடைபெறுகின்றன. T.Luxmy, 18/B, Station Road, Wellawatte. Tel.: 2505325. (41027)

## நாதோபாஸன ஆராதனை

யாழ்ப்பாணம்,ஒக்.23

இணுவையூர் மா.த.ந.வீரமணிஐயரின் நினைவாக நடத்தப்படும் பௌர்ணமி தின நாதோபாசன ஆராதனை இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இணுவிலிலுள்ள மஹாவித்துவான் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கமலாம்பிகை சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நியந்திரி உறுப்பினர் ஆ. விஸ்வநாதசர்மா ஆசியுரை நிகழ்த்துவார்.

திருமதி சா.விஜயகுமாரின் பாட்டுக் கச்சேரி நடைபெறும். வயலின்- ம.நந்தினி, மிருதங்கம் - வி.ரமணன், முகர்சிங் - கே. நந்தகுமார் ஆகியோர் அணிசெய் கலைஞர்களாகப் பங்கேற்பர்.

வளரும் இளங் கலைஞர்களின் பாட்டுக் கச்சேரியும் இடம் பெறும். (204)

## தென்னை மரத்திலிருந்து வீழ்ந்தவர் காயம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

தென்னை மரத்தில் இருந்து தவறி வீழ்ந்த ஒருவர் படுகாயமடைந்தார்.

அளவெட்டிப் பகுதியில் இடம் பெற்ற இச் சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த மாணிக்கம் ஜீவநாதன் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-15)

**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
83, Palaly Road,
Kantharmadam,
Jaffna
Phone- 021 222 8093
E.Mail-afjsl@hotmail.com

யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
பிரெஞ்சு மொழி வகுப்புகள்

### புதிய பிரிவு

சிறுவருக்கான
கல்லூரி மாணவருக்கான
வேலைசெய்வோருக்கான
மொழியயிலும் ஆர்வமுள்ளோருக்கான
தொடக்கநிலை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

### பதிவுசெய்தலுக்கு நேரில் வரவும்

23 ஒக்ரோபர் இலிருந்து தினமும் பி.ப. 4மணிமுதல் 7 மணிவரை பிரிவுகள் பிற்பகல்/மாலை/வாரஇறுதி வகுப்புகள். (41747)(42.19.13)

## திருமணக் கார் (குளிரூட்டியது)

### வாடகைக்கு




+ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
+ விசேட வைபவங்கள் + சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உரித்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467. (38657)

தொடர்பு: ரமணன், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| ஆண்டவன் படைப்பில் | ஆண்டவன் அழைப்பில் |
|---|---|
| 1940 - 04 - 06 | 2005 - 09 - 23 |

### அமரர் சதாசிவம் லாசரஸ் இரத்தினசிங்கம்

(முன்னாள் ஊழியர், யாழ்.போதனா வைத்தியசாலை)

"என்விட்டத்தில் விசுவாசமாய் இருக்கின்றவனுக்கு நித்தியஜீவன் உண்டு" யோவான் 6:47

கருணை உள்ளம் கொண்டவரே!
நித்திய ஒளி விளக்கே!
எம்மை இதயத்தில் சுமந்தவரே
இவ்வுலகில் நாம் சிரிக்க
மீண்டும் நீங்கள் வேண்டுமப்பா!
எம்முடன் நீங்கள் சேர்ந்தே சிரித்திடும்
அந்த இனிய நன்நாள் எம்வாழ்வில்
மீண்டும் வருமோ? அப்பா!

86/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 5473.
உங்கள் நினைவுகளில்
குடும்பத்தினர்.
(41788)(42.19.13)

## நெஞ்சை விட்டு அகலாத மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 31 - 07 - 1914 | 27 - 10 - 2002 |

### திருமதி நாகபூரணி நவரட்ணம்

திதி: 23.10.2005

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்த் திகழ்ந்து வாழ்வில் நாம் நலமுடன் வாழ உம்மையே அர்ப்பணித்தீர் இன்று நீங்கள் எம்முடன் இல்லாவிடினும் உங்களின் நினைவுகளை இப்பூவுலகில் நாங்கள் வாழுகின்றோம்.

ந.சர்வகுணசீலன்,
14/2, பலாலி வீதி,
திருநெல்வேலி.

பிள்ளைகள் , மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(41779)(18.19.13.42)

# தேர்தலைப் பகிஷ்கரித்து ஒதுக்க தமிழர் தேசம் தயாராகின்றது



வாக்களிக்க வந்தவரிடம் சோதனை....

ஸ்ரீலங்காவின் ஐந்தாவது ஜனாதிபதியாகத் தமக்கு நம்பிக்கைக்கு உரியவரைத் தெரிவுசெய்யச் சிங்கள தேசம் தயாராகிவிட்டது.

தத்தமது வேட்பாளரின் படங்களுடன் வீடு வீடாக நேரில் பிரசாரம். வாக்குறுதிகளை அள்ளி வீசும் பிரசாரக் கூட்டங்கள். இப்படியாகக் களைகட்டி நிற்கின்றது சிங்கள தேசம்.

நாட்டின் தேசியப் பிரச்சினையான தமிழர் பிரச்சினையைக் கையில் தூக்கி அதற்கான தீர்வைக் காணுவோம். யுத்தம் ஒன்று இந்நாட்டில் இடம்பெற அனுமதியோம். பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம். இப்படி உரத்த குரலில் பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி வாக்கு வங்கிகளைப் பலப்படுத்தப் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நாட்டை அமைதியான வழியில் இட்டுச் செல்வதற்கான ஆக்கபூர்வமான வாக்குறுதிகளை முன்னிறுத்தாது, ஒருவரை ஒருவர் சாடுவதும் கழுத்தறுப்பதும்தான் நடக்கின்றன.



இவற்றையெல்லாம் உற்று நோக்கிக் கொண்டு அமைதியாக இருக்கின்றது தமிழர் தேசம். இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன? எமக்கு விடிவு கிட்டாது என்று கருதும் நிலையே தமிழ் மக்கள் மனங்களில் பதிந்துள்ளது.

'எங்கள் முடிவை நாமே எடுப்போம்' என்ற தீர்மானத்துடன் - இலக்குடன் - தமிழர் பிரதேசம் தயாராகிக்கொண்டிருக்கின்றது.

தேர்தலில் பிரதான வேட்பாளர்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்க, பிரதான கட்சிகளை இணைத்து சமஷ்டி முறையான தீர்வு ஒன்றைக் கொண்டுவர முயற்சி எடுப்பேன் - என்ற கருத்தைத் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்னிறுத்தி, போரா? சமாதானமா? என்ற முடிவை எடுங்கள் எனச் சிங்கள மக்களிடம் விண்ணப்பித்துவிட்டுப் பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றார்.

சமாதான விரோத சக்திகளான ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமயவுடன் உடன்பாடு கண்டு, அதன் அடிப்படையில் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை 'மஹிந்தவின் சிந்தனை' என்று மகுடமிட்டு வெளியிட்டு வைத்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு. எந்தத்

## வாராந்த அரசியல் அலசல்

**குகா**

தரப்புக்கும் தனியான தாயகமோ, சுயநிர்ணய உரிமையோ எதுவும் கிடையாது - என்று அடித்துக்கூறும் தனது கொள்கையைத் தனது விஞ்ஞாபனம் மூலம் அவர் வெளியிட்டுள்ளார்.

அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நோக்கப்படவேண்டிய முக்கிய சில அம்சங்கள் வருமாறு:-

✱ ஐ.தே.க. கட்சியால் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. அரச படைகள் பலவீனமாகியுள்ளன. ஜனநாயக வழியில் இருப்போரும் ஆயுதம் தூக்கும் நிலைமை வந்துள்ளது. இந்த உடன்பாடு உரிய முறையில் மீளாய்வு செய்யப்பட்டு சீரமைக்கப்படும். கண்காணிப்பு முறையும் மீள ஒழுங்குபடுத்தப்படும்.

✱ ஜனநாயகக் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள், மதத்தலைவர்கள், வடக்கு - கிழக்கில் உள்ள மூவின மக்களின் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடி, மூன்று மாதத்தில் தேசியக் கொள்கை தயாரிக்கப்படும்.

✱ அதற்கு மக்களின் அனுமதி பெற சர்வ ஜன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

✱ தேசியக் கொள்கையைத் தயாரிக்கும் பணி ஒருபுறம் நடக்க, மறுபுறம் புலிகளுடன் நேரடியாகப் பேசுவேன். சர்வஜன வாக்கெடுப்பு அங்கீகாரத்துடன் தேசியக் கொள்கையைப் புலிகள்முன் வைப்பேன்.

✱ புலிகளுக்குக் காலவரையறை, கால அட்டவணை ஒன்றை வழங்குவேன்.

✱ பிரிவினைவாதத்தைக் கைவிடுதல், ஆயுதக்களைவு, ஜனநாயகத்துக்குள் பிரவேசித்தல், இறுதித்தீர்வு, அவற்றை நடைமுறைப்படுத்தல் ஆகியவை தொடர்பில் திட்டவட்டமான வரையறை செய்யப்படும்.

✱ இந்தியாவுடனும் பேசப்படும். சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடனும் ஆசிய நாடுகளுடனும் ஒத்துழைப்பு கட்டியெழுப்பப்படும்.

✱ அமைதி முயற்சிகளுக்கு இணைத் தலைமை வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், அமெரிக்கா, நோர்வே ஆகிய நாடுகளுடன் இந்த ஏனைய நாடுகளின் பிரவேசம் குறித்துப் பேசப்படும்.

மஹிந்த முன்வைத்துள்ள யோசனைகளை ஆராயுமிடத்து, அவர் பதவிக்கு வந்தவுடன் சமாதான சூழலுக்கு விடை கொடுக்கும் நிலைதான் ஏற்படும் என்றே தோன்றுகின்றது. இது தமிழ் மக்களின் கருத்தாக உள்ளது.

தமிழ்மக்களுக்குத் தாயகம் ஒன்று இருக்கின்றது. அந்தத் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் வாழவேண்டும் என்ற இலக்குடன் தமிழ் மக்கள் பல்வேறுபட்ட சாத்வீகப் போராட்டங்களைக் கடந்த காலங்களில் முன்னெடுத்தனர். அந்தப் போராட்டங்கள் எல்லாம் சிங்களக் காடையர்களால் அடக்கப்பட்டன. இனக்கலவரங்கள் தூண்டப்பட்டு தமிழ் மக்கள் அழிக்கப்பட்டனர். மாறிமாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் தமிழ் மக்களின் உரிமைகளைப் பறித்தன.

இக்காலகட்டத்தில்தான் தமது தாயகப் பிரதேசத்தைப் பாதுகாத்து, சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்காகத் தமிழ் மக்களின் போராட்டம் ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்தது.

ஆரம்பத்தில் கெரில்லா யுத்தமாக ஆரம்பித்து மரபு வழிப் போராக மாற்றம் அடைந்து இன்று ஸ்ரீலங்கா அரசின் படைப்பலத்துக்குச் சமமான படைப்பலத்துடன் தமிழர் படை வளர்ந்துள்ளது.

தமிழர் தாயகப் பகுதியில் 60 வீதமான நிலப்பரப்பைத் தன்னகத்தே கொண்டு - இராணுவ, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் பரிணாமத்துடன் காவல்துறை, நீதி நிர்வாகம் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புகளுடன் நிமிர்ந்து நிற்கின்றது தமிழர் தேசம்.

இராணுவ மற்றும் அரசியல் சமநிலையில் உள்ள தமிழர் தரப்புடன் ஸ்ரீலங்காத் தரப்பு பேசுவதாக இருந்தால், தமிழர் தரப்பின் படைப் பலம் தொடர்ந்து பேணப்படவேண்டியது அவசியமாகின்றது.

## தமிழர் பலத்தைக் குன்றச் செய்யும் பேராசை தெற்கில் வலுக்கிறது

தமிழர் தரப்பின் படைப் பலத்தைக் குன்றச் செய்யும் பேராசை தெற்கில் தீவிரமாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் மூலம் சிங்கள மக்களிடம் ஆணையைப் பெற்று வரப்போகும் புதிய தலைவர், ரணிலாக இருக்கட்டும் மஹிந்தவாக இருக்கட்டும். அவர் இந்தச் சிந்தனைகளுக்கு உரமூட்டி வளர்க்கப் போகின்றார் என்பது மட்டும் உண்மை.

யுத்த நிறுத்த சூழலுக்கு அச்சுறுத்தல் விடுத்து, சமாதான சூழலைக் குழப்பி, தமிழர் தரப்புக்கு எதிராக புதிய ஜனாதிபதி செயற்படுவார் என்பது தெற்கின் நடப்புகளை உற்று நோக்கும்போது உணரக் கூடியதாக இருக்கின்றது.

ரணில் ஜனாதிபதியானால், 'சமாதான முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடர்வேன்' என்று கூறிவருகின்றார். இடைக்கால ஏற்பாடாகத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான வரைபை விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த நிலையில் பேச்சுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அவர் ஆட்சிக்கு வந்தால் அந்த வரைவு தொடர்பான பேச்சை மீண்டும் ஆரம்பிப்பார் என நம்பமுடியாது.

## தெற்குத் தலைமைகளுக்குப் பாடம் புகட்ட தமிழர் தரப்பு மும்முரம்.....

மஹிந்த ஆட்சிக்கு வந்தால், அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி செயற்பட, இந்த விவகாரத்தில் அகரத்தில் இருந்து ஆரம்பித்து முடிவு ஒன்றை எட்ட பத்து வருடங்கள் கூட ஆகலாம்.

தற்சமயம் நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்ய வேண்டும் என்ற அவரது சிந்தனையே சமாதான முயற்சிகளுக்கு ஆப்பு வைத்துவிடும். ஆட்சியைப் பிடிப்பதற்காகக் கூட்டு வைத்துள்ள பேரினவாதக் கட்சிகளின் சொல் கேட்டு நடக்கவேண்டிய அவரால் சமாதான முயற்சியில் ஓர் அடிகூட எடுத்துவைக்க முடியுமா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.



'சுதந்திர' வாக்களிப்பு

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது இருவராலும் சமாதான முயற்சியை நகர்த்தக் கூடிய புறநிலையை உருவாக்கமுடியாது. அப்படி உருவாக்க முனைந்தாலும் அதில் வெற்றிகிட்டுமா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.



இத்தகைய சூழலில் தமிழ்மக்கள் என்ன செய்யப்போகின்றார்கள் என்பதுதான் இன்று எழுந்துள்ள கேள்வியாகும். தமிழ் மக்களின் இருப்புக்கு எதிராகச் செயற்படும் முழு நோக்குடன் களம் இறங்கியுள்ள இரு வேட்பாளர்களையும் புறக்கணிக்கும் - பகிஷ்கரிக்கும் - போக்கே மக்கள் மனங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தமிழர் தாயகத்தில் சுயநிர்ணய உரிமையுடன் மக்கள் வாழும் நிலையை உருவாக்க முனையாத வேட்பாளர்களுக்கு ஏன் வாக்களிக்கவேண்டும் என்ற சிந்தனை தீவிரமாகியுள்ளது.

தமிழ் மக்களின் உணர்வுகளை, அபிலாசைகளை இந்தத் தேர்தலில் பங்குகொள்ளது இருப்பதன் மூலம் சர்வதேசத்துக்கு எடுத்துக்கூற தமிழ்மக்கள் தயாராகின்றனர்.

வடக்கு - கிழக்கில் தமது பிரசாரக் கூட்டங்களை நடத்தவும் ஆதரவு திரட்டவும் அனுமதிக்குமாறு கோரி பிரதான வேட்பாளர்கள் இருவரும் விடுதலைப் புலிகளின் தலைமையைக் கோரியிருக்கின்றனர். இந்தக் கோரிக்கைக்கு விடுதலைப் புலிகள் பதில் அளிக்கக்கூடாது என்பதுவே மக்களின் விருப்பமாகும்.

மக்கள் மீது இந்த விடயத்தில் எதையும் திணிக்கமாட்டோம். அவர்கள் சுதந்திரமாகச் செயற்படலாம் என விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக்கியுள்ளனர்.

மக்கள் விருப்புக்கு எதிராக நிற்கமாட்டோம் என்ற கருத்துப்பட விடுதலைப் புலிகள் விடுத்துள்ள இந்த அறிவிப்பை, மக்களைத் தமது விருப்பப்படி செயற்பட அனுமதித்ததாகக் கருதலாம்.

தமிழ் மக்கள் தமது விருப்பை - பகிஷ்கரிப்பு மூலம் - தெற்குத் தலைமைகளுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் வெளிப்படுத்த இந்தத் தேர்தலைப் பயன்படுத்தப் போகின்றார்கள்.

கடந்த மூன்றரை வருடகாலமாக ஏமாந்த நிலை மீண்டும் வரக்கூடாது என்பதில் மக்கள் திடமாக இருக்கின்றார்கள். மக்கள் எழுச்சி நிகழ்வுகள் மூலம் வெளிப்படுத்தி வரும் தமது சிந்தனையை நிஜமாக்கும் செயற்பாட்டில் மேலும் தீவிரம் காட்டும் நிலையே தென்படுகிறது. இந்தத் தேர்தலைக் கண்டும்காணாத போக்கில் செயற்படவுள்ளதை வெளிப்படையாக உணரமுடிகிறது.

தமது செயற்பாடுகள் மூலம் தெற்குத் தலைமைகளுக்கு நல்ல பாடம் புகட்டப் போகின்றார்கள் எமது மக்கள். அவர்களின் போராட்ட உணர்வு தீவிரமாகப் போகின்றது. அதற்கே அவர்கள் தயாராகின்றனர். ✱



கடந்த பொதுத் தேர்தலில் முகமாலை கொத்தணி வாக்களிப்பு நிலையத்தில்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



26.08.1953

23.09.2005

### அமரர் மாணிக்கவாசகர் சிற்சபேசன்

(பதவிநிலை உத்தியோகத்தர், இலங்கைவங்கி, 2 ஆம்கிளை)

அன்பின் திருவுருவமாய் பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய் எம்மையெல்லாம்
ஆளாக்கி நல்வழிகாட்டி
எங்களை வளர்த்தெடுத்த அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து நாள்கள் 31 சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலா.
உங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இன்று (23.10.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

7, செட்டித்தெரு, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி; பிள்ளைகள், மருமகன்.

(47745) [39-18-24]


## விசேட கருமபீடம்

மக்கள் வங்கியின் சங்கானைக் கிளையின் விசேட கருமபீடம் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9 மணிமுதல் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இச்சேவையில் மக்கள் வங்கியின் கடன் திட்டங்களைப் பெறுவது தொடர்பான விளக்கங்கள் வழங்கப்படவுள்ளன. சங்கானைக் கிளை முகாமையாளர் எஸ்.அச்சுதம்பிள்ளை இதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளார். (202-28)


**40%** ரேடியோ மார்க்கோனியின் நினைவு தினத்தை முன்னிட்டு அனைத்து தபால்மூல கற்கை நெறிகளுக்கும் பூரண 40 வீத கழிவு வழங்கப்படுகிறது. இச்சலுகை இம்மாதம் 31 ஆம் திகதிவரை மட்டுமே!!!

தபால்மூல கற்கைநெறிப் பகுதிகள்

**A. Dip. in Electronics (For Repairing)**
Basic Electronics, Digital Meters, Tr & IC Circuit Designing, Wireless Remote controlling & Transmitting, Radio Technology, TV Technology, VCD & DVD Technologies & Servicing. 5 months, Full Fee 1500/= (750 + 750)

**B. Dip. in Cellular (For Repairing)**
Cellular Batteries, Analog & Digital, AF & RF, G.S.M Networks, Service Softwares, Service Diagrams, Professional Tools & Cables, Introduction of Computer Hardware, Total Phone Service. 3 month, Full Fee 900/= (500 + 400)



**இலவசம்**

கட்டணத்தினை நேரடியாக அல்லது வங்கியூடாக அல்லது மணியோடர் மூலமாக செலுத்தலாம். HNB Bank - 0090651986, Commercial Bank - 8100025135. Name - Marconi Technical Institute, Branch - Wellawatte, Account Type - Saving Account. மணிஓடர் பத்திரமாயின் பணம் கொடுபடவேண்டிய இடம் - Wellawatte Post office, பெறுபவரின் பெயர் - Manager, Marconi Technical Institute. Bank இல் அல்லது Post office இல் பெற்ற ஒரிஜினல் பற்றுச் சீட்டையும், தெளிவாக எழுதப்பட்ட உங்கள் முகவரியையும் பதிவுத் தபாலில் உடன் அனுப்புதல் வேண்டும்.

**MARCONI TECHNICAL INSTITUTE**
410, 2nd Floor, Galle Road; Wellawatta. TP: 2361362



சோர்வுத்தன்மை அகற்ற
மிதமிஞ்சிய சக்தி தரவல்ல
கடின உழைப்பாளிகளுக்கு
உடல் இயக்கத்தை துரிதப்படுத்த
ஆரோக்கியத்தை மேன்மைப்படுத்த
சோர்வையும் களைப்பையும் போக்கி மேலதிக சுறுசுறுப்பையும் சக்தியையும் கொடுக்க



இயற்கை மூலிகைகளான19 அமினோ அமிலங்களில்
10 அத்தியவசியமான அமிலங்கள் உள்ளடக்கிய

**BODY TONE**
**PROTEIN COMPLEX TABLETS**

Importers & Distributors
K.S.P. International Pharmacy, Col- 11. Tel : 2449766
யாழ்மாவட்டத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறக்கூடிய ஒரேஇடம்
**Wesco Pharmacy**
470, Hospital Road, Jaffna. Tel: 2223188, 22233335
CCS


## தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,ஒக்.23

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். அலுவலகம் விரைவில் புதிய கட்டடத்திற்கு இடம் மாற்றப்படவுள்ளது.

தற்போது யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தனியார் கட்டடத்தில் இயங்கும் இந்த வங்கி யாழ். போதனா வைத்தியசாலையின் நோயாளர் பிரிவுக்கு எதிர்ப்புறமாக அமைக்கப் பட்ட புதிய கட்டடப் பணிகள் யாவும் பூர்த்தியாகியுள்ள நிலையில் அங்கு விரைவில் தனது பணிகளை ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அநேகமாக இம்மாத இறுதிப் பகுதியில் இந்த இடம்மாற்றம் இடம்பெறலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இடம் மாற்றத்தின் பின்னர் தேசிய சேமிப்பு வங்கியின் செயற்பாடுகள் அனைத்தும் விஸ்தரிக்கப்பட்டு அதன் சேவைகள் சிறப்பாக நடைபெறும் எனவும் -

வாடிக்கை யாளர்கள் பெரிதும் நன்மை அடைவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (8-12)

## சிறுவர் , முதியோர் தினவிழா

கரவெட்டி,ஒக்.23

கரவெட்டிப் பிரதேச செயலக சிறுவர், முதியோர் தின விழா எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குக் கரவெட்டிப் பிரதேச சபைக்கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமை யில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிர தம விருந்தினராகப் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். செயலக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். மாவட்டப் பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.அம்பலவாணர், வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வி.சிவகுமாரன் ஆயோரும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் செ.சேதுராசா 'சிறுவர் எமது சொத்துகள்' என்ற தலைப்பிலும் -

சாவகச்சேரிப் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் ஆ.இரகுநாதன் 'முதியோர் எமக்குச் சுமையல்ல' என்ற தலைப்பிலும் சிறப்புரைகள் நிகழ்த்துவர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (8-70-203)


# வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்கு அல்லது உடனடித் தொழில் வாய்ப்பொன்றிற்கு...

## Foundation Degree Programme

UK, Canada போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடர விரும்பும் மாணவர்கள் இப்பாடநெறியைப் பயில்வதன் மூலம் எந்தவிதத் தடைகளுமின்றி வெளிநாட்டு உயர்கல்விக்கான Student Visa க்களை இலகுவாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

இக்கற்கை நெறியின் மூலம், நவீன தொழிற் சந்தையில் எந்தத் துறை சார்ந்த தொழில் வாய்ப்புகளுக்கும் தகைமை கொண்டோராக உங்களை மாற்றிக்கொள்ள முடியும்.

பிரித்தானியாவின் முன்னணி கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரமும் சான்றிதழ்களும் இப்பாடநெறிக்கு வழங்கப்படுவதால் உங்கள் உயர்கல்வி அல்லது உடனடித் தொழில்வாய்ப்பிற்கான இலக்குகள் வெற்றியளிக்கின்றன.

வெளிநாட்டில் (UK,Canada) உயர்கல்விக்கான Student Visa க்களைப் பெற்றுக்கொள்வதற்கு பூரண வழிகாட்டுதல்கள் London Institute இனால் மேற்கொள்ளப்படும்.

COURSE STRUCTURE
- Information Technology
- English (Reading, Writing, Listening & Speaking - Leading to IELTS)
- Personality Development

CERTIFICATES TO BE AWARDED
- International Computer Driving Licence (ICDL Asia Pacific, UK)
- First Certificate in English (UK)
- Diploma in Information Technology
- Certificate in Programming
- Certificate in Website Development
- Diploma in English Proficiency

COURSE LENGTH
- 3 Months - Full Time (Week Days)



LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
25A, Hospital Road, Dehiwela. Tel: 011 5518866, 0777 735788
Fax: 011 5513587 E-mail: edulife@sltnet.lk

THE UNIVERSITY OF BUCKINGHAM · Cornwall College · St James's Park College · Carmel College of Excellence - London



எமது அதிகாரம் பெற்ற யாழ்ப்பாண விநியோகஸ்தர்களாக நியமிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

# LAVANIYA SUPER MARKET

783, Hospital Road, Jaffna. Tel: 021 – 222 2841

**MAX**

சுற்றாடல் நட்பிற்குரிய பொருட்களின் உற்பத்தியாளர்கள்




*Dish Wash
*Guard
*Toilet Bowl Cleaner
*Vip Powder
*Cool Breeze
*Bleach
*Air freshener
*Tile cleaner
*Sanitol
*Hand Wash
*Glass Cleaner
*Washing Powder

**LA CEYKEM INTERNATIONAL (PVT) LTD**
P.O. BOX 22, MOUNTLAVINIYA.
TELEPHONE - 0714 - 260027

# ஈராக் நீதிமன்றில் சதாம் ஹுசேய்ன் நடத்திய எதிர்ப்பு நாடகம்



*"குடை நிழலிருந்து*
*குஞ்சர மூர்ந்தோர்*
*நடை மெலிந்தோரூர்*
*நண்ணினு நண்ணுவர்"*

ஈராக் நாட்டின் தன்னிகர் இல்லா சர்வாதிகாரியாக 35 ஆண்டுகள் ஆட்சி புரிந்தவரான சதாம் ஹுசேய்ன் ஒரு சாதாரண கைதியாக இன்று நீதிமன்றில் நிறுத்தப்பட்டிருக்கிறார்.

அதிகாரத்தின் உச்சியில் இருந்த காலத்தில் இப்படியான ஒரு நிலை தனக்கு வரும் என்று அவர் நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார்.

சதாம் ஹுசேய்னின் ஆட்சி எவ்வாறு வீழ்த்தப்பட்டது என்பது சர்ச்சைக்குரிய விடயம். அதற்காகக் கூறப்பட்ட காரணம் எதுவும் இன்னமும் ஆக்கிரமிப்பாளர்களால் தெளிவாக விளக்கப்படவில்லை. ஆக்கிரமிப்பாளர்கள் அறிவித்திருந்ததுபோல் பெரும் எண்ணிக்கையில் மனித உயிர்களைக் கொன்றொழிக்கக்கூடிய ஆயுதம் எதுவும் கண்டுபிடிக்கப்படவுமில்லை. ஆனால், சதாமின் ஆட்சி ஒரு கொடுங்கோல் ஆட்சியாக, அவரது நாட்டு மக்களில் பெரும்பகுதியினராலேயே வெறுக்கப்பட்டதாக இருந்தது என்பது பல வகையிலும் வெளிப்படுத்தப்பட்ட விடயம்.

அதன் விளைவாக இன்று அவரது நாட்டு நீதிபதிகளையே கொண்ட நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படும் நிலைக்கு அவர் உள்ளாகியிருக்கிறார்.

**உலக வலம்**
மேனா

சதாம் ஹுசேய்ன் மீது பல இனப் படுகொலைகள் பற்றிய வழக்குகள் விசாரிக்கப்படவிருக்கின்றன. அதில் முதலாவதாக துஜெயில் நகரில் ஷியா பிரிவு முஸ்லிம்கள் 143 பேர் கொல்லப்பட்ட வழக்கு முதலில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. குர்திஷ் இன மக்கள் 5 ஆயிரம்பேரை விஷ வாயு செலுத்திக்கொன்றது, குவைத் மீது படையெடுத்து ஆக்கிரமிப்புச் செய்தது போன்ற வழக்குகளும் இருக்கின்றன.

### மரண தண்டனை விதிக்கப்படலாம்

துஜெயில் நகரப் படுகொலை வழக்கு நிரூபிக்கப்பட்டால் அதில் சதாம் ஹுசேய்னுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். இதை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்து அதுவும் நிராகரிக்கப்பட்டால், அடுத்த 30 நாளில் சதாம் தூக்கிலிடப்படுவார். இதன் மூலம் அவர் மீதுள்ள மற்ற வழக்குகளின் விசாரணை நடக்காமலேயே போய்விடலாம் என்று ஈராக் சட்டவல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

### துஜெயிலில் சதாம் நடத்திய படுகொலை

பாக்தாத்தில் இருந்து 60 கி.மீ. தூரத்தில் துஜெயில் நகரம் இருக்கின்றது. இங்கு ஷியா பிரிவு முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கின்றனர். கடந்த 1982ஆம் ஆண்டு ஜூலை 8ஆம் திதகி இந்த நகர் வழியாக கார் மூலம் அப்போதைய அதிபர் சதாம் ஹுசேய்ன் பயணம் செய்தார். ஷியா பிரிவின் தாவா கட்சியைச் சேர்ந்த சிலர் சதாம் ஹுசேய்னைக் கொல்லத் திடீர்த் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதல் முயற்சி இராணுவ வீரர்களால் முறியடிக்கப்பட்டது. இதன் பின்னர் துஜெயில் நகர மக்களைச் சதாம் பல வழிகளிலும் பழி வாங்கினார். இராணுவ வீரர்களால் அந்த நகரம் சூறையாடப்பட்டது. பலர் கொல்லப்பட்டனர். விசாரணை என்ற பெயரில் பெண்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு அபுகிரைப் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். பின்னர் அவர்கள் பாலைவனத்தின் நடுவே அமைக்கப்பட்டிருந்த தடுப்புக் காவல் முகாமுக்கு அழைத்துச் செலலப்பட்டனர். இதன் பின்னர் அவர்கள் நிலை என்ன ஆனது என்பது தெரியாமற்போனது. இது போல் நூற்றுக்கணக்கான ஷியா பிரிவு முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

### சிறப்பு நீதிமன்றில் விசாரணை

உலகமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசேய்ன் மீதான விசாரணை அவர் கைதுசெய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்குப் பின்னர் பக்தாத் நகரில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு நீதிமன்றில் கடந்த புதனன்று ஆரம்பமாகியது. துஜெயில் நகரில் 143 ஷியா பிரிவு முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட வழக்கு முதலில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில், சதாம் மற்றும் ஏழு பேர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. சதாம் உட்பட அனைவரும் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டனர்.

பக்தாத் நகரில் 'கிரீன் சோன்' என அழைக்கப்படும் பாதுகாப்பு நிறைந்த இடத்தில் முதலாவது சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. கிரீன் சோன் பகுதியில்தான் ஈராக் நாடாளுமன்றம், அமெரிக்க மற்றும் பிரிட்டன் தூதரகங்கள் அமைந்துள்ளன. ஒரு காலத்தில் இந்தப் பகுதி சதாமின் பாத் கட்சி அலுவலகமாக செயற்பட்டு வந்தது. சதாமின் பரிசுப் பொருள்களும் இங்குதான் வைக்கப்பட்டிருந்தன. சதாம் ஹுசேய்ன் மீதான விசாரணை ஆரம்பமாவதையொட்டி பாக்தாத் நகர் முழுவதும் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. அனைத்துத் தெருக்களிலும் மக்களின் நடமாட்டம் தடுத்து நிறுத்தப்பட்டு 'சீல்' வைக்கப்பட்டது. இதனால் நகரின் பல பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. சதாம் ஹுசேய்ன் மற்றும் ஏழு பேர் சிறையிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டனர்.


## ஒரு காலத்தில் சர்வாதிகாரி இன்று சாதாரண கைதி

### விசாரணை நீதியாக நடக்குமா?

சதாம் ஹுசேய்ன் மீது குர்திஷ் இன மக்கள் வெகுகாலமாக வெறுப்புடன் இருந்து வந்துள்ளனர். இந்நிலையில், அவர்களில் ஒருவர் தலைமை நீதிபதியாக அறிவிக்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சதாம் ஹுசேய்ன் மீதான விசாரணையை தற்போதுள்ள ஈராக் அரசுதான் நடத்திவருகிறது. இருப்பினும், இந்த விஷயத்தில் ஈராக் அரசு பாரபட்சமின்றி நேர்மையாகச் செயல்படுமா என்ற கேள்வி சர்வதேச அளவில் எழுந்துள்ளது. இதற்காக விசாரணை முழுவதும் தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யப்படும் என்று முன்னதாகவே அறிவிக்கப்பட்டது. அமெரிக்க தலையீடு இல்லாமல் சதாம் ஹுசேய்ன் மீதான குற்றச்சாட்டுகள் முறையாக விசாரிக்கப்பட்டது என்பதை வெளிப்படையாக நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் ஈராக் அரசு உள்ளது. இருப்பினும் மனித உரிமைக் கழகங்கள் இந்த விசாரணைக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அமெரிக்க தலையீடு இல்லாமல் இந்த விசாரணை நடக்க வாய்ப்பு இல்லை என்று அவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். ஆனால், அவர்களின் குற்றச்சாட்டை ஈராக் பிரதமர் இப்ராகிம் அல்-ஜபாரி அடியோடு மறுத்துவிட்டார். "நாங்கள் அதிகப்படியான விஷயங்களுக்கு ஆசைப்படவில்லை. துஜெயில் மற்றும் சில பகுதிகளில் நடந்த படுகொலை குறித்து முறையாக விசாரணை நடந்து தண்டனை அளித்தால் போதும்" - என்றார் பிரதமர்.

பாக்தாத்தில் முதலாவது சிறப்பு நீதிமன்றில்தான் சதாம் ஹுசேய்ன் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்தான விசாரணை ஆரம்பமாகிறது. பளிங்கு கற்கள் மற்றும் மரவேலைபாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ள இந்த பகுதி ஒரு காலத்தில் சதாம் ஹுசேய்னின் பரிசுப் பொருள்கள் வைக்கப்படும் இடமாக இருந்துள்ளது.

அறையில் தலைமை நீதிபதி அமீன் நடுவில் அமர்ந்திருக்க அவரது இருபக்கங்களிலும் மற்ற நான்கு நீதிபதிகள் அமர்ந்து இருந்



தனர். இவர்களுக்கு நேராக சற்றுத் தூரம் தள்ளி சதாம் ஹுசேய்ன் இறுகிய முகத்துடன் அமர்ந்து இருந்தார். சதாம் ஹுசேய்ன் மற்றும் ஏழுபேர் மீது குற்றச்சாட்டுக்கள் படிக்கப்பட்டது. ஈராக்கின் முன்னாள் துணை அதிபர் யாசின் ரமதான், சதாமின் ஒன்று விட்ட தம்பி பர்சான் - அல்-திக்ரிதி, ஷியா மக்களுக்கு மரண தண்டனை விதித்த அப்போதைய நீதிபதி அவாத் அல்பந்தார். சதாமின் பாத் கட்சியைச் சேர்ந்த அப்துல்லா அல்-ரோவித், மிஸ்ஹெர் அல்-ரோவித், அலி தயீத் அலி, முகமது அஸ்வி அலி ஆகியோர் இதர ஏழு பேர்.

நீதிமன்ற அறையில் நீதிபதிகளுக்கு எதிர் திசையில் மூன்று தடுப்புகளுக்கு நடுவே நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. முதல் தடுப்பில் சதாம் மட்டும் அமர வைக்கப்பட்டார். மற்றவர்கள் மற்ற இரண்டு தடுப்புகளில் அமர வைக்கப்பட்டனர். சாட்சிகள் அமர்ந்து இருந்த இடம் பெரியதிரை மூலம் மறைக்கப்பட்டு இருந்தது. சதாம் மற்றும் ஏழு பேரின் சட்டதரணிகள் அவர்களிடம் நேரிடையாக கேள்விகள் கேட்க அனுமதிக்கப்படாமல் நீதிபதிகள் மூலம் கேள்விகளைக் கேட்டனர்.

### கெந்தஹரில் ஆர்ப்பாட்டம்

முன்னாள் அதிபர் சதாம் ஹுசேய்னின் சொந்த ஊரான திக்ரிட்டில் ஆதரவாளர்கள் பதாகைகளைத் தாங்கிக்கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர். "சதாம் உமக்காக எமது இரத்தம் மற்றும் ஆத்மாவைத் தியாகம் செய்வோம்" என்று பதாகைகளில் எழுதப்பட்டிருந்தது. சதாம் ஹுசேய்ன் விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பதை ஈராக் அரசின் பேச்சாளர் ஒருவர் பின்வருமாறு வர்ணித்தார். இன்று ஈராக் ஏன் இந்தச் சீரழிந்த நிலைக்கு வந்தது என்பதை மக்கள் அறிவார்கள். ஒரு தனிமனிதன் இரண்டு கோடி 70 லட்சம் மக்களின் எண்ணங்களை அபகரித்துக் கொண்டு 35 வருடகாலம் அவர்களை யுத்தங்களிலும் துன்பங்களிலும் சிக்க வைத்து வந்துள்ளார்- என்று அவர் கூறினார்.

சதாம் ஹுசேய்ன் நீதிமன்றத்தின் தகுதியைக் குறித்து கேள்வி எழும்பினார். பிரதம நீதியரசர் சதாமிடம் நீங்கள் யார் என்று அடையாளப்படுத்திக் கூறுங்கள் என்று கேட்ட போது, 'நீங்கள் யார், இதுஎல்லாம் என்ன?' என்று திருப்பிக் கேட்டார் சதாம். ஈராக்கின் அதிபராக இப்பொழுதும் இருப்பதாகக் கூறிய அவர் குற்றங்களை மறுத்தார். ஏனையவர்களும் குற்றவாளிகள் அல்லவென்று கூறினார்கள். விசாரணை நவம்பர் 28 ஆம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது. 68 வயதான முன்னாள் ஈராக்கியத் தலை வர் கழுத்துத் திறந்த சட்டையுடன் கறுப்பு உடையில் காணப்பட்டார். கையில் 'குர்ஆன்' பிரதியொன்றை வைத்திருந்தார்.

நீதிபதிகளுடன் வாக்குவாதம்செய்த சதாம், ஈராக்கின் அதிபர் என்ற அரசியல் யாப்பின் உரிமை எனக்கிருக்கிறது. உங்களை நியமித்துள்ள அமைப்பை நான் அங்கீகரிக்கவில்லை. அநீதியை அடிப்படையாகக் கொண்டது அநீதிதான். நீதிமன்றம் என்று சொல்லப்படும் இந்த மன்றத்துக்கு முழு மரியாதையுடன் நான் பதில் சொல்லப் போவதில்லை" என்று மறுத்துக் கூறினார்.

### பத்திரிகையாளர் கடத்தல்

பிரிட்டிஷ் பத்திரிகையான 'த கார்டியன்' நிருபர் ஒருவர் ஈராக்கில் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுள்ளார்.

ஐரிஷ்காரரான றொரிகரொல் என்ற இப்பத்திரிகையாளர் கார்டியன் பத்திரிகைக்காக முன்னாள் அதிபர் சதாம் ஹுசேய்னினால் பாதிக்கப்பட்ட ஈராக்கியர்ஒருவரைப் பேட்டி காண்பதில் ஈடுபட்டிருந்தார். சதாம் ஹுசேய்ன் மீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அந்தப் பின்னணியில் கட்டுரையொன்றைப் பத்திரிகைக்கு எழுதுவதற்கு தரவுகள் சேகரிப்பதில் அவர் முனைந்திருந்த போது கடத்தப்பட்டுள்ளார்.

*பறவைக் காய்ச்சல் ஒருவர் மரணம்*

தாய்லாந்தில் பறவைக் காய்ச்சலுக்கு மேலும் ஒருவர் பலியாகியுள்ளார். இவருடன் தாய்லாந்தில் இந்நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது. பென் பாத் என்ற விவசாயி நோய்க்கோழிஒன்றை அடித்துச் சாப்பிட்டதன் மூலம் அந்நோய் அவருக்கு ஏற்பட்டதாக தாய்லாந்துப் பிரதமர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

* * *

*எல்லை கடந்த தொடர்பு*

பூகம்பம் பாதித்துள்ள காஷ்மீர் பகுதிகளில் வாழும் மக்கள் பாக்-இந்திய பகுதிகளில் எல்லையைத் தாண்டி தொலைபேசிகளால் பேசிக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. 15 வருடங்களில் முதல் தடவையாக இந்திய பகுதியிலுள்ள காஷ்மீர் பிரஜையொருவர் பாகிஸ்தான் பகுதியிலுள்ள தனது மாமனுடன் தொடர்பு கொண்டு பேசினார். ஆனால், ஜம்முவிலுள்ள முக்தியார் அகமட் என்பவர் முஸபராத்திலுள்ள தனது குடும்பத்தாருடன் தொடர்புகொள்ள முயன்று தோல்வியுற்றார். அவரது குடும்பத்தினர் 17 பேர் அந்த நகரில் கொல்லப்பட்டுவிட்டதாக அவர் கூறினார்.

ஜம்மு பகுதியில் நான்கு தொலைபேசி நிலையங்களை இந்திய அதிகாரிகள் அமைத்துள்ளார்கள்.

* * *

*பிரிட்டிஷ் பண்டங்களுக்கு ஈரான் தடை*

ஈராக்கின் எல்லையில் ஈரானின் தென் பகுதியில் தொடர் குண்டுவெடிப்புகள் நடைபெற்றிருப்பதையொட்டி பிரிட்டன் இதற்கு பின்னணியில் இருப்பதாகக் கூறி பிரிட்டிஷ் பண்டங்களை ஈரான் உத்தியோகப் பற்றற்ற முறையில் தடைசெய்துள்ளது.

ஒக்டோபர் – வாசிப்பு மாதம்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!

பாடசாலை மட்டக் கணிப்பீடு
ஆசிரியர்களுக்கு சுமையா?
வருடச் சந்தா ரூ.300 மட்டுமே
தொடர்புகளுக்கு: இல.3, டொறிங்ரன் அவனியு, கொழும்பு 07. தொலைபேசி:011 2506272

வாசியுங்கள்
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...



# 102 ஆம் நாள் நீங்காத நினைவுச் சுடர்

# இராஜேந்திரம் பாக்கியம்

**தோற்றம்**
**29-07-1939**

**மறைவு**
**14-07-2005**

அன்புக்கோர் அணிகலனாய்ப் பண்புக்கோர்
இருப்பிடமாய்
அவனியது புகழும் அன்னையாய் மிளிர்ந்தீர்!
இன்பவாழ்வு நாம் வாழ தன்னையே அர்ப்பணித்த
தாயே!
இன்றைய நாளில் நெஞ்சமதில் நினைந்துருகியே
துன்பசாகரத்தில் துவண்டு நாம் துடிதுடிக்கின்றோம்
நூற்றொரு நாள் போனாலும் மாறாது உம்
நினைவு!
என்றுமே எங்கள் இதயங்களில் நினைவுச் சுடராய்
ஒளிவீசி
நீங்காது நிலைத்திருக்கும் தாயே உம் திருமுகந்தான்

ஓம் சாந்தி!

நினைவில் நிறைந்திருக்கும்:
**குடும்பத்தினர்.**
830,கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தொ.பே.5036.

(41768)(50,11-17)

# நாளை உலகம் நம் கையில்.....!

கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சமீபத்தில் வெளியாகின. அந்தப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். மாவட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெற்றுக் கொண்ட சிறார்களிடம் பேச்சுக்கொடுத்துப் பார்த்தோம். அவர்கள் கூறியவற்றை இங்கு தொடராகத் தரவிருக்கிறோம். தங்களுடைய முதல் வெற்றி குறித்து அந்தச் சுட்டிகள் என்ன சொல்கிறார்கள் என்று நீங்களும் கொஞ்சம் கேளுங்களேன்...! **1**



பேரானந்தராஜா டினேஷன்
யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
175 புள்ளிகள்
யாழ்.மாவட்ட நிலை - 1
அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழியில் பரீட்சை எழுதிய மாணவர்களுள் முதலிடம்

### எதிர்பார்த்தே படித்தேன்...!

*கேள்வி:* உங்களைப் பற்றி கூறுங்கள்?

*பதில்:* நான் 1995-09-23 அன்று கொழும்பில் பிறந் தேன். எனது அப்பா தம்பிப்பிள்ளை பேரானந்தராஜா. யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றுகிறார். அம்மா யமுனாமலர். எனக்கு ஒரு தம்பி மட் டும் உள்ளார். அவரது பெயர் யுதீஸ்திரன். வயது இரண்டரை. நான் எனது ஆரம்பக்கல்வியை பொறளையில் ஆங்கில மொழியில் ஆரம்பித்தேன். பின்னர் காலியில் சிங்கள மொழியில் தொடர்ந்தேன். அப்போது நாங்கள் பொரளையில் இருந்தோம். அப்பா கொழும்பு பொது வைத்தியசாலையில் கடமையாற்றினார்.

பின்னர் அப்பா கடமை நிமித்தம் ஆஸ்திரேலியா சென்று விட்டார். அப்போது பாதுகாபபிற்காக எம்மை வவுனியா, பண்டாரிக்குளம் எனும் இடத்தில் விட்டுச்சென்றார். வவு னியா மகாவித்தியாலயத்தில் தரம் 1 இல் இணைந்து கொண்டேன். அங்கு தரம் 2 இரண்டாம் தவணை வரை கல்வியைத் தொடர்ந்தேன். ஒரு வருடத்தின் பின்னர் தனது பயணத்தை முடித்துக்கொண்டு அப்பா வந்துவிட்டார்.

அப்பாவுடன் நாங்கள் யாழ்ப்பாணம் வந்துவிட்டோம். அன்றுமுதல் திருநெல்வேலி, பனிக்கர் ஒழுங்கையில் வசித்து வருகின்றோம். 2002ஆம் ஆண்டில் தரம் 2 மூன் றாம் தவணையில் யாழ்.புனித ஜோன் பொஸ்கோவில் சேர்ந்து தற்போது தரம் 5 வரை எனது கல்வியைத் தொடர் கிறேன்.

*கேள்வி:* உங்கள் பெற்றோர் எவ்வாறு ஊக்கம் அளித்தனர்?

*பதில்:* எனது பெற்றோர் தொடர்ந்து படிக்கும்படி கூற மாட்டார்கள். விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடவும் சொன்னார்கள். படி.... படி.... என்று திணிக்கமாட்டார் கள். எனக்கு நல்ல ஒத்துழைப்புத் தந்தார்கள். எனக்கு வேண்டியவற்றை வாங்கித் தந்தார்கள். எந்தக் குறையையும் வைக்கவில்லை.

*கேள்வி:* தொலைக்காட்சி பார்ப்பதுண்டா?

*பதில்:* நான் தரம் 4 வரை சிறுவர் நிகழ்ச்சிகள் நிறையப் பார்ப்பேன். பின்னர் 5ஆம் தரத்துக்கு வந்ததும் புலமைப் பரிசில் பரீட்சையைக் காரணம்காட்டி எனது அப்பா தொலைக் காட்சிப் பெட்டியை மூடிவைத்துவிட்டார். நான் பரீட்சை எழுதி முடிக் கும் வரை 9 மாதங்களாக எமது வீட்டில் தொலைக்காட்சி போடுவதில்லை.

*கேள்வி:* தொலைக்காட்சிப் பெட்டியை மூடிவைத்தவு டன் சிறுவர் தொடர்பார்க்க முடியவில்லையே என நீங்கள் மனம் நோக வில்லையா?

*பதில்:* இல்லை எனது நன்மைக்காகத் தானே அப்பா இவ்வாறு செய்கிறார் என நான் எண்ணிக்கொண்டு படிப் பைத் தொடர்ந்தேன். அது எனக்கு ஒரு நல்ல பலனைத் தந்தது என்றே சொல்லலாம்.

*கேள்வி:* நீங்கள் தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்றதுண்டா?

*பதில்:* இல்லை. நான் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றுக்கும் செல்லவில்லை. பாடசாலையில் தான் எனது புலமைப் பரிசில் பயிற்சியைப் பெற்றேன். அங்கு போதியளவு பயிற்சியும் பரீட்சையும் எனக்கு வழங்கப்பட்டன. வீட்டில் 'உத யன்', 'தினக்குரல்' போன்ற பத்திரிகைகளில் வந்த புலமைப் பரிசில் பரீட்சை வினாப்பத்திரங்களைத் தவறாது செய்து வந்தேன். அப்பா அதனைத் திருத்தி அதற்குரிய புள்ளி களைப் போட்டுத் தருவார் அனைத்துப் பரீட்சைகளுக்கும் 170 புள்ளிகளுக்கு மேலாக எடுத்துவருவேன். அதனைப் பார்த்த எனது பெற்றோர் என்னை உற்சாகப்படுத்துவர் ''எப்படியும் அதிகூடிய புள்ளி உனக்குத்தான்'' என. அதுவே எனக்கு ஆர்வத்தை உண்டு பண்ணியது.

பரீட்சை நடப்பதற்கு இரண்டு கிழமைகளுக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஆசிரியை ஒருவரிடம் சென்று சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டேன். அந்த ஆசிரியை எனது உற்சாகத்தை மேலும் வலுப்படுத்தினார்.

*கேள்வி:* பாடசாலையில் உங்கள் திறமைகள் பற்றி...?

*பதில்:* பாடசாலையில் நடைபெறும் போட்டிகள் அனைத்திலும் கலந்துகொள்வேன். பாட்டு, அழகெழல், பா ஓதல், ஓவியம், அபிநயம் போன்ற போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களுக்குள்ளே வருவேன். ஒவ்வொரு போட்டியில் பங்குபற்றும் போதும் நம்பிக்கையுடன்தான் செல்வேன். எனது நம்பிக்கையே என்னை வெல்லவைக்கிறது.

*கேள்வி:* உங்களுக்கு ஆர்வமான துறைகள் பற்றி...?

*பதில்:* சங்கீதம், இசை, ஓவியம் போன்ற துறைகளில் நான் ஆர்வங்காட்டி வருகிறேன். இசைத்துறை எனும் போது வீணை வாசிப்பதில் மிகவும் ஆவல் இருக்கிறது வீட்டிலும் வீணை ஒன்று வைத்திருக்கிறேன்.

*கேள்வி:* விளையாட்டுத்துறையில் பங்குபற்றியதுண்டா?

*பதில்:* பாடசாலை விளையாட்டுப் போட்டியில் நீளம் பாய்தல், அஞ்சல் ஓட்டம் போன்ற போட்டிகளில் மட்டும் பங்குபற்றி பரிசு பெற்றுள்ளேன். விளையாட்டுத்துறையில் பெரிதாக ஆர்வம் இல்லை என்றே கூறலாம்.

*கேள்வி:* நாடகங்கள் நடித்த அனுபவம் ஏதாவது உண்டா?

*பதில்:* பாடசாலை நாடகங்களில் நடித்து பாராட்டு பெற்றுள்ளேன்.

*கேள்வி:* வகுப்பில் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?

*பதில்:* ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களைக் கவன மாகக் கேட்டு, அவர்கள் தரும் விடயங்களையும் குறிப்புக் களையும் ஒழுங்கான முறையில் எழுதிவைப்பேன். விளங் காத விடயங்களை உடனுக்குடன் கேட்டுத் தெரிந்து கொள் வேன். விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் எல்லோரு டனும் அன்பாகப் பழகுவேன். ஓய்வுநேரங்களில் புத்தகங் கள் வாசிப்பேன். மற்றவர்களுடன் சண்டைக்குப் போவது கிடையாது.

*கேள்வி:* எவ்வாறான புத்தகங்களை வாசிப்பீர்கள்?

*பதில்:* விஞ்ஞானக் கண்டுபிடிப்பு, ஆங்கிலப் புத்தகங் கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் என எல்லாவற்றையும் தேர்ந்தெடுத்து வாசிப்பேன். எனக்குத் தேவையான புத்தகங்களை அப்பா வாங்கித் தருவார்.

*கேள்வி:* உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?

*பதில்:* எனக்கு கடவுள் நம்பிக்கை நிறையவே உண்டு. வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் தவறாமல் கோயிலுக்குச் செல்வேன். எனது அப்பாவும் தெய்வ நம்பிக்கை மிக்கவர். அப்பாவுடன்தான் கோயிலுக்குப்போவது வழமை. வேட்டியுடன்தான் செல்வேன்.

*கேள்வி:* அகில இலங்கை ரீதியில் தமிழ்மொழி மூலத்தில் பரீட்சை எழுதிய மாணவர்களிலும் யாழ்.மாவட்டத்திலும் முதலிடம் பெற்றமை பற்றி...?

*பதில்:* எதிர்பார்ப்புடனேயே பரீட்சையை எதிர்கொண்டேன். இந்த முடிவு என்னை மிக்க மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. எனது பெற்றோர், அதிபர், ஆசிரியர்கள் என எல்லோருக்குமே மகிழ்வான விடயம்தான்.

*கேள்வி:* உங்களை ஒத்த நாளைய தலைமுறையின ருக்கு கூறும் அறிவுரை என்ன?

*பதில்:* முயற்சியுடன் கடவுள் நம்பிக்கை யும் இருந்தால் உயர்வடைய முடியும். அவ்வாறு செயலாற்றினால் தடைகளைத் தாண்டி வெற்றிபெறமுடியும் என்பதே எனது எண்ணம்.

**செவ்வி: கங்கைவேந்தன்**

★ ★ ★



ரதிமோகன் தேனுஷன்
மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
169 புள்ளிகள்
யாழ்.மாவட்ட நிலை - 2

### பரீட்சைக்குப் பயந்ததில்லை!

*கேள்வி:* உங்களுடைய ஆரம்பக்கல்வியை எங்கு ஆரம்பித்தீர்கள்?

*பதில்:* மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் எனது ஆரம்பக்கல்வியை ஆரம்பித்து இன்று வரை அங்கு கல்விகற்று வருகிறேன். எனது அப்பா மார்கண்டு ரதி மோகன் வரணி தபாலகத்தில் தபால் விநியோகஸ்தராகக் கடமையாற்றுகிறார். எனது அம்மா தேன்மொழி 1997 ஆம் ஆண்டு இறந்து விட்டார். அப்போது எனக்கு இரண்டரை வயது. பின்னர் எனது சிறியதாயருடனேயே வசித்துவருகிறேன்.

*கேள்வி:* உங்களுடைய முயற்சிக்குக் காரணமாக உள்ளவர்கள் பற்றி...?

*கேள்வி:* ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் எனது பெற்றோரும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் அனைவரையும் குறிப்பிடலாம். எனது பாடசாலை அதிபரும் என்னைத் தட்டிக் கொடுத்து ஊக்கமளிப்பார்.

*கேள்வி:* நீங்கள் எவ்வளவு நேரம் உங்கள் பாடங்களைப் படிப் பீர்கள்?

*பதில்:* இரவு 7 மணிமுதல் - இரவு 9.30 மணிவரையும் காலையில் 5.30 மணிக்கு எழுந்து படிப்பேன். இதனை தினமும் கடைப்பிடித்துவருகிறேன். பரீட்சை வினாத் தாள்களை மீட்டுப் படிப்பேன். இவ்வாறு செய்யும்படி எனது ஆசிரியர்கள் அடிக்கடி கூறுவர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# பரீட்சைக்காகப் பட்டபாடுகளை பகிர்கின்றனர் சாதனையாளர்கள்

**கடந்த மாதம் வெளியான ஜி.சீ.ஈ. உயர்தர பெறுபேறுகளில் வடபகுதியில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித்திபெற்ற மாணவர்கள் எத்தகைய வழிகளைக் கையாண்டு இத்தகைய பெறுபேற்றினைப் பெற்றார்கள் என்பதை இனிவரும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டும் முகமாக சாதனை படைத்த மாணவர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துகளைத் தருகின்றோம்.**

**இந்த மாணவர்கள் எத்தகைய இலக்கினை நோக்கிச் செல்கிறார்களோ அத்தகைய இலக்கினை வெற்றிகரமாக அடைந்து எமது தாயக மண்ணில் சேவையாற்ற வேண்டு மென்று ஊக்கமளிக்கும் வகையில் உதயனின் இந்தத் தொடர் அமைகிறது.** **6**

### வளங்கள் போதாது முயற்சியுடன் படித்தேன்!



பாலசுப்பிரமணியம் மஞ்சுதன்
*உயிரியல் பிரிவு*
*முல்லைத்தீவு மாவட்டத்தில் 2ஆம் நிலை*

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமம் பழம்பாசி, மிகவும் பின் தங்கிய பிரதேசமான இக்கிராமத்தில் விவசாயம் பிரதான தொழில்.

எவ்வித வசதிகளும் அற்ற நிலையில் இப்பிரதேச பாடசாலைகள் இயங்கிவருகின்றன.

நான் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றேன். சிறுவயது முதல் டாக்டராக வரவேண்டும் என்ற எண்ணம் எனக்கிருந்தது. என்னைக் கற்பித்த ஆசிரியர்களும் பெற்றோரும் அளித்த ஊக்கம்தான் உயர் தரத்தில் உயிரியல்துறையைக் கற்கத் தூண்டியது. அதில் வெற்றியும் கண்டுள்ளேன்.

யுத்தம் காரணமாகப் பல தடவைகள் இடம் பெயரவேண்டி ஏற்பட்டது. இதனால், பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டன. இதனையும் தாண்டி எனக்குக் கல்வியில் ஊக்கம் அளிக்கப்பட்டது.

தரம் 6 முதல் 8 வரை கற்சிலைமடு அ.த.க. பாடசாலையிலும் பின்னர் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தேன்.

எனது கல்விக்குக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், தனியார் கல்வி நிலைய ஆசிரியர்கள் எனப் பலரும் ஊக்கம் அளித்தனர்.

இந்த மாவட்டத்தில் ஏனைய மாவட்டங்களைப் போன்று கல்வித்துறைக்கான முன்னேற்றங்கள் பெற வசதிகள் கிடைப்பதில்லை.

கிடைக்கும் வளங்களைக் கொண்டு ஆசிரியர், அதிபர் ஆகியோரின் கவனிப்பில், தரும் பாடக்குறிப்பைக் கவனமாகப் படித்து பரீட்சை எழுதினேன்.

***

### தேடிக்கற்றேன்...!



இலிங்கராசா நிருஷா
*வர்த்தகப் பிரிவு*
*முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி*

நான் விவசாயக் குடும்பத்தில் பிறந்தாலும் என் பெற்றோர் எனது கல்விக்கு அளித்த ஊக்கமும், அக்கறையும்தான் என்னை 3A எடுக்க வைத்தன.

வளங்கள் மிகவும் குறைந்த இந்தப் பிரதேச பாடசாலையில் பாடம் சார்ந்த நூல்கள் கிடைப்பது மிகவும் அரிதாக இருந்தது. நான் பாடசாலையின் நூலகத்தையே பெரிதும் சார்ந்து இருந்தேன்.

சிறந்தவற்றைத் தேடிப் படிப்பதன் மூலம் தான் நிறைந்த பெறுபேறுகளைப் பெறமுடியும்.

தவணைப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுவேன்,- அதனால் 3A எடுபபேன் என்ற நம்பிக்கை இருந்தது. எனது நம்பிக்கை வீண் போகவில்லை. எனக்கு பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள், மாண வர்கள் பெரும் ஊக்கத்தையும் உற்சாகத் தையும் தந்தார்கள்.

***

### பாடசாலையை நம்பிப் படித்தேன்!




இரத்தினராசா மிரியோ மஸ்னற்தீபன்
*உயிரியல் பிரிவு*
*புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி*

இந்தத்துறையில் சித்திபெறுவேன் என்ற நம்பிக்கை இருந்தது. தரம் 5 படிக்கும் போது இடப்பெயர்வு ஏற்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து முல்லைத்தீவுக்குச் சென்றேன். அங்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தேன். கஷ்டமான சூழல், அப்போது புலமைப் பரிசில் பரீட்சை வந்தது. மூன்று மாதங்கள்தான் கவனமெடுத்துப் படித்து புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்டமட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றேன். இதற்குப் பாடசாலை ஆசிரியர்கள் கொடுத்த ஊக்கமும் கவனிப்பும் மறக்கமுடியாதது.

தரம் 6 தொடக்கம் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். க.பொ.த. சாதாரண தரப் பரீட் சையில் 10 பாடங்களிலும் ஏ சித்தி பெற்றேன். எனது அதிபர், ஆசிரியர்கள் நான் செய்ததவறு களைச் சுட்டிக்காட்டி நல்ல மாணவனாக வளர்த்தமை தான் என் வெற்றிக்குக் காரணம்.

நான் பாடசாலைக் கல்வியையே நம்பி இருந்தேன், நேரகாலம் பாராது பாடசாலை நேரம் முடிய அங்கு மாலை நேர வகுப்புகள் நடைபெறும். அதில் தவறாது கலந்து கொண்டு கற்றுக்கொள்வேன். பெற்றோரின் அதிகளவான நம்பிக்கை, சகோதரர்கள், சகமாணவர்கள் வழங்கிய ஊக்கம், ஒத்துழைப்பு இவைதான் உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றினைப் பெறமுடிந்தது. என் கல்விக்கு எனது பெரியம்மா செய்த உதவியும் மறக்கமுடியாதது.

**சந்திப்பு: விக்னேஸ்வரன்**
**(புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)**




# கைநழுவும் சமாதானம்

இந்த நாட்டிற்கு மிகவும் அவசியமான சமாதானமானது சகலராலும் வசதியாக மறக்கப்பட்டுள்ளது என்றே தோன்றுகிறது. மிக நீண்டகால இழுத்தடிப்புகளின் பின்னர் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி 22ம் திகதி துணிந்து மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கையானது சமாதானத்துக்காக ஏங்கிய மக்களின் மனங்களில் பெரும் நம்பிக்கையை ஊட்டியது. இந்த விடயத்தில் கடந்தகால அரசியல்வாதிகளைப் போல் அல்லாது அன்றைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்ட இவ்வொப்பந்தமானது இன்று வரை போரை தடுத்து ஆயிரக்கணக்கான உயிர்களை பாதுகாத்துள்ளது என்பதை மறுக்க முடியாது. எனினும் அதன் பின்னர் ஏற்பட்ட முன்னேற்றங்கள் எவை என பார்க்கின்ற போது எதுவும் இல்லையென்றே கூறமுடியும். பல்வேறு நாடுகளில் பேச்சுக்கள் இடம்பெற்ற போதும், ஒஸ்லோவில் பிரகடனம் ஒன்றை வெளியிட்டதைத் தவிர வேறு எதனையும் சாதிக்க முடியவில்லை. குறிப்பாக இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளது அமர்வுகளின் புலிகளை அரவணைத்து செல்ல முடியாத காரணத்தினால் நிலமைகள் மோசமானது. அதன் காரணமாக பேச்சுக்கள் இடைநடுவில் முடிந்து போயின அதன் பின்னர் இன்றுவரையில் எவ்வித முன்னேற்றமும் இல்லாமை ஒருபுறமிருக்க நிலமை, பின்னோக்கி நகரத் தொடங்கியுள்ளது. வன்முறைகள் தலைதூக்கியுள்ளன. இரு தரப்பிலும் மாறிமாறி படுகொலைகள் இடம் பெறுவதன் மூலம் போர் அண்மிப்பதுபோல் தெரிகிறது.



விஷேடமாக தற்போதைய அரசாங்கமானது போர் நிறுத்த உடன்படிக்கையின் மூலம் ஏற்பட்ட தற்காலிக சமாதான சூழலை மேலும் பலப்படுத்தி நம்பிக்கையை மேலும் வளர்க்கத் தவறியுள்ளது. இதன் மூலம் தற்போது அச்சமும் அவநம்பிக்கையும் கலந்த சூழல் ஏற்பட்டுள்ளது. சர்வதேச அழுத்தம் மாத்திரம் இல்லையானால் இலங்கையில் மீண்டும் போர் எப்போதோ தோன்றியிருக்கும்.

- என். ஜீவேந்திரன்

போர் நிறுத்த உடன்படிக்கையானது புலிகளுக்கு தன் நாட்டை வழங்கப்போவதாக கூறி சந்திரிக்கா அம்மையார் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தினை கலைத்தார். ஜே.வி.பி. யினுடன் அம்மையாரின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கூட்டினை ஏற்படுத்தி, நாடு முழுவதும் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக மக்களின் உணர்வுகளை தூண்டிவிடும் பிரச்சாரங்கள் இடம்பெற்றன. ஜே.வி.பியானது மிக மோசமான இனவாத நச்சு விதைகளை நாடு முழுவதும் விதைத்தது. இறுதியில் எதிர்பார்த்ததை போலவே அவர்களால் ஆட்சியை பிடிக்க முடிந்தது.

எனினும், இந்த அரசாங்கமானது தேர்தல் பிரசாரத்தில் கூறியபடி போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. மாறாக, சந்திரிக்கா அம்மையாரும் அவரது அரசாங்கத்தின் சரத் அமுனுகம போன்ற அமைச்சர்களும் புரிந்துணர்வு உடன்படிக்கையை வரவேற்றதுடன் அதைத் தொடர்ந்து பேணுவதனை உறுதிப்படுத்தினர்.

போர் நிறுத்த உடன்படிக்கை ஓரளவு பேணப்பட்டாலும் கூட அதிலிருந்து எவ்வித முன்னேற்றத்தையும் அவர்களால் காண முடியவில்லை. இந்த ஒன்றரை வருட கால ஆட்சியில் நிலமை மேலும் மேலும் மோசமாகியதன் விளைவாக பல உயிரகள் பலிகொள்ளப்பட்டன.

இன்று சமாதானம் குறித்து சிந்திக்கக் கூட ஆட்சியாளர்களுக்கும் அரசியல் வாதிகளுக்கும் நேரமில்லை. காரணம் ஜனாதிபதி தேர்தல். இந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இரு பிரதான கட்சிகளும் களத்தில் இறங்கியுள்ளன.

தாம் ஆட்சிக்கு வந்தால் என்ன செய்வோம் என்பதை மேடைக்கு மேடை வாக்குறுதிகளாக முழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். ஏட்டிக்குப் போட்டியான பிரச்சாரங்கள் சூடுபிடித்துள்ளன. ஆளுக்கு ஆள் சேறு பூசுகிறார்கள் ஊடகங்களும், தமக்கு தமக்கு ' சார்பான வேற்பாளர்களுக்கு வக்காளத்து வாங்கிக்கொண்டிருக்கின்றன.

இவர்கள் அனைவருமே இந்த நாட்டிற்கு அவசியமான சமாதானத்தை வசதியாக மறந்துள்ளனர். நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களை மறந்துள்ளனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்தியினை மறந்துள்ளனர். மீண்டுமொரு போரை தவிர்ப்பதற்கு அவசரமாக மேற்கொள்ளப்பட வேண்டிய பேச்சுக்களின் அவசியத்தை மறந்துள்ளனர்.

இதன் காரணமாக 60 வருடங்களுக்கு மேலான இனப்பிரச்சினைக்கும், சுமார் 20 வருடங்களுக்கும் மேலான கொடிய யுத்தத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க கைகூடிய வந்த வாய்ப்பும் நழுவி செல்லக்கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களிலும் கூட இது போன்ற அரிய வாய்ப்புகள் கைநழுவவிடப்பட்டுள்ளன. இதன் விளைவாக நாடு பாரிய அழிவை சந்தித்தது. நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துள்ளது. மக்கள் மேலும் மேலும் வறுமைக்குள் சிக்கியுள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக சமாதான தீர்வுக்கான வாய்ப்புகளை உதாசீனம் செய்கின்ற அரசியல் வாதிகள் மீண்டும் மீண்டும் அந்த தவறை செய்வதானது இந்த நாட்டிற்கு அவர்கள் செய்கின்ற தேசத்துரோகமாகவே வரலாறு கூறப்போகிறது. எனவே, இம்முறையும் அத்தகைய துரோகம் இழைக்கப்படக்கூடாது என்பதே பாதிக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளாகும்.

# சுதந்திரமிழந்து வரும் ஊடகத்துறை...

ஊடகமானது ஒரு நாட்டின் ஆட்சியைக்கூட தீர்மானிக்க கூடிய வலிமை கொண்டது. அவை சுதந்திரமான இயங்குவதே அந்த நாட்டில் ஜனநாயகம் சிறப்பாக நடைபெறுகிறது என்பதற்கு அத்தாட்சியாகும். தற்போது நடை முறையிலுள்ள இலங்கை சோஷலிச குடியரசு அரசியல் யாப்பும் கூட ஊடகங்களின் சுதந்திரத்தினை உறுதிப் படுத்தியுள்ளது. எனினும் அவை தமது கடமையை சுதந்திரமாக செய்ய முடியாத சூழலே இன்று காணப்படுகிறது. உண்மை நிலையினை மக்களுக்கு தெரிவிக்க வேண்டிய தார்மீக பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள ஊடகத்துறையானது பல சவால்களுக்கு காலங்காலமாக முகங் கொடுத்து வருகின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனையில் சிக்கி அதிலிருந்து வெளிவரும் ஊடகவியலாளர்களும் இனவாதத்தையே பெரிதும் ஊடகங்களில் வெளிப்படுத்துகின்றனர். எனினும் நியாயமான ஊடக செயற்பாடு அற்றுப்போவதற்கு வேறு பல காரணங்களும் உள்ளன. அரசியல்வாதிகளின் தலையீடு, துவேசமான ஊடகவியலாளர்களின் போக்கு நேர்மையான ஊடகவியலாளர்களின் படுகொலைகள், போன்றன சில காரணங்களாகும்.

அண்மைக்காலங்களில் ஊடகத்துறை மீதான தாக்குதல்கள் மிகவும் அதிகரித்த வண்ணமுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் சண்டேலீடர் பத்திரிகை அச்சகத்திற்குள் நுழைந்த கும்பல்கள் பெருந்தொகையான பத்திரிகைகளை தீயிட்டு கொளுத்தியதுடன், தளபாடங்களையும் சேதப்படுத்தியமையானது இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அத்தோடு கடந்த ஓகஸ்ட் மாதம் சுடர்ஒளி பத்திரிகை மீதான குண்டு வெடிப்பு நிகழ்வின் போது ஒருவர் கொல்லப்பட்டதுடன், ஜே.வி.பியின் கூட்டத்திற்கு செய்தி சேகரிக்க சென்ற செய்தியாளர் தாக்கப்பட்டமை, அப்பத்திரிகை சார்ந்த ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை, என்பன இன்றைய ஊடக சுதந்திரத்தின் நிலையை சுட்டிக்காட்டுகின்றது.

மேலும் சில அரசியல்வாதிகள் கூட ஊடகத்துறை மீதான தமது அதிருப்தியை நேரடியாக தரங்கெட்ட விதத்தில் வெளிப்படுத்த துணிந்துவிட்டனர். இதனை பிரதியமைச்சர் ஒருவரால் அண்மையில் மேற் கொள்ளப்பட்ட விடயங்கள் உணர்த்துகின்றன. இந்நிகழ்வுகள் ஊடகங்களை ஆட்சியில் உள்ளவர்களே மதிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அது மட்டுமன்றி தமது உயிரை துச்சமென மதித்து பல கருத்துக்களை உலகிற்கு அறியத்தந்த பல ஊடகவியலாளர்களை நாம் இழந்திருக்கிறோம். நிமலராஜன் உட்பட படுகொலை செய்யப்பட்ட சிவராம் வரை இந்தப்பட்டியல் தொடர்கின்றது. இந்நிலையில் நிஜத்தை வெளிக்கொணரத் துடிக்கும் ஊடகத்துறையின் கைகளானது அரசியல் என்ற கயிற்றின் பிடியில் சிக்கித் தவிக்கிறது.

மேலும் ஊடகங்கள் அதிகார வர்க்கத்திற்கு எதிராக கருத்துக்களை வெளியிட்டால் தமது உயிருக்கு ஆபத்து என்பதால் நிழலை நிஜமாக்கும் கட்டாய நிலையிலேயே ஊடகங்கள் செயற்படுகின்றன. இந்த ஊடகத்துறைக்கு எதிரான வன்முறைகளில் அரசும், விடுதலைப் புலிகளும், ஆயுதமேந்திய குழுக்களும் விதிவிலக்கல்ல.

- எஸ். கிருபாலினி

தம்மீதான வண்டவாளங்களை ஊடகங்கள் வெளிக்கொணரும் பட்சத்தில் அரசியல்வாதிகள் தமது அரசியல் வாழ்க்கைக்கு முடிவு வந்துவிடுமோ என்ற பயத்தில் ஊடகங்கள் மீதான வெறுப்பை மேடை போட்டும் கிழிப்பதுண்டு. இவற்றுக்கு அரச ஊடகங்கள் மட்டுமல்ல தனியார் ஊடகங்களும் இலக்காகின்றன.

இன்று மக்கள் ஜனாதிபதி தேர்தலை சந்தித்துள்ளனர். இந்நிலையில் ஊடகங்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். ஆனால் ஒவ்வொரு ஊடகங்களும் தமக்கு சார்பான கட்சிகள் குறித்தே அதிகம் கவனம் செலுத்த தொடங்கியுள்ளன. தமது கருத்துக்களை மக்கள் மீது திணிக்க ஊடகங்கள் ஆரம்பித்துவிட்டன. அரச சார் ஊடகங்கள் அரசிற்கு சார்பான தகவல்களையே வழங்கி வருவதோடு, பெரும்பாலான தனியார் ஊடகங்களும் பக்கச்சார்பாக பணியாற்றுகின்றன. இதனால் நடுநிலையாக கருத்து தெரிவிக்கும் எந்த ஊடகத்தையும் எம்மால் காண முடியாதுள்ளது.

எமது கடந்த கால வரலாற்றை எடுத்து பார்த்தால் இனப்பிரச்சனை தொடர்பில் எந்தவொரு ஊடகமும் நடுநிலையாக தமது பணியை செய்யவில்லை. குறிப்பாக சிங்கள ஊடகங்கள் தமிழர்களுக்கு எதிராகவும், தமிழ் ஊடகங்கள் சிங்களவர்களுக்கு எதிராகவும் கருத்துக்களை கூறிவரும் போக்கும் காலங்காலமாக அதிகரித்து வருகின்றது. ஊடகங்கள் அது தமிழ் ஊடகம் என்றாலும் சரி, சிங்கள ஊடகம் என்றாலும் சரி தமது இனம் சார் தவறுகளை சுட்டிக் காட்டுவதில்லை. மாறாக பிற இனத்தை காட்டமாக வர்ணிப்பதன் மூலம் சந்தையில் முன்னணி வகிப்பதே ஊடகங்களின் இன்றைய முக்கிய நோக்கமாக காணப்படுகின்றது. இதற்காக இன்றைய ஊடகங்கள் யாரையும் சாடவும், இனவன்முறைகளை அதிகரிப்பதற்கான கருத்துக்களை வெளியிடுவதற்கும் தயங்குவதில்லை என்பதை மறுக்க முடியாது.

யுத்தகாலத்தின் போது யுத்த நடவடிக்கைகள் குறித்த உண்மை நிலையினை வெளியிட முடியாத நிலையில் ஊடகங்கள் காணப்பட்டன. இருந்தாலும் கூட யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு பின்னர் இந்நிலை சற்றே மாறியுள்ளது. ஆனாலும் முற்று முழுதான சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.

இந்த வருடத்தில் மட்டும் குறைந்தது நான்கிற்கு மேற்பட்ட ஊடகத்துறை, ஊடகவியலாளர்சார் வன்முறைகள் நடைபெற்றுள்ளன. (இவ்வாண்டு முடிவடையவில்லை என்பதை கருத்திற் கொள்க) இது போன்ற இன்னும் எவ்வளவு வன்முறைகளை நாம் சந்திக்க வேண்டியுள்ளதோ என ஊடகத்துறை சார்ந்தோர் அச்சம் கொண்டுள்ளனர்.

புதியதொரு ஜனாதிபதி நாட்டில் தோன்றவுள்ள நிலையில் இந்த தலைவராவது சுதந்திரமானதும், நடுநிலையானதுமான ஊடகத்துறையை நாட்டில் வளர்க்க பாடுபடுவாரா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# கிழக்கு நோக்கி தெற்கு ஊடகவியலாளர்கள்

இனப்பிரச்சினையின் ஆரம்பத்தோடு திருமலை மாவட்டத்தினுள் அமைதியாக வாழ்ந்த இனங்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டதோடு வன்முறைகள் அதிகமாக ஏற்பட்ட பிரதேசங்களின் பட்டியலில் திருமலையும் முக்கிய இடத்தை பிடித்துக் கொண்டது. அழகையும் பெருமையையும் கொண்ட திருமலை மாவட்டத்தின் பல பகுதிகள் இவ்வன்முறை காலத்தையடுத்து இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு பிரதேசமாக மாற்றப்பட்டு மக்கள் பல்வேறு நெருக்கடிகளை முகங்கொடுக்க வேண்டியேற்பட்டது.

இலங்கையில் இனப்பிரச்சினை துளிர்விடத் தொடங்கிய காலப்பகுதியிலிருந்தே திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் கிழக்கில், குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டமை எமக்கு தெரியும். அதன் பின் ராணுவ பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட இராணுவ முகாம்களை அண்டிய பகுதிகளில் காணப்பட்ட பல தமிழ்க்கிராமங்களில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதோடு அக்கிராமங்களின் பெயர்கள் கூட மருவி சிங்கள மொழிப்பெயர்களாகி விட்டன. பதவிற்குளமானது பதிவிய எனவும், சிரிப்புரம் சிறிபுர எனவும் அழைக்கப்படுவது இதற்கு சிறந்த சிறு உதாரணங்களாகும்.

கடந்த யுத்த நிறுத்த காலப்பகுதியில் கூட பல வன்முறைச் சம்பவங்கள் திருகோணமலையில் ஏற்பட்டுள்ளன. மூதூர் வன்முறைகள், குரங்கு பாஞ்சான் முகாம் விவகாரம் தொடக்கம் அண்மையில் உருவான புத்தர் சிலை சர்ச்சை வரை திருகோணமலை பதற்றத்துக்குரிய ஒரு பிராந்தியமாகவே காணப்பட்டு வருகிறது. எனவே நாட்டின் இனப்பிரச்சினையுடன் மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்ட திருகோணமலை

- ருவனி

மாவட்டத்திற்கு, தெற்கைச்சேர்ந்த ஊடகவியலாளர் குழு இம்மாதம் 7ஆம் திகதி சென்றிருந்தது. இந்த 6 நாள் விஜயத்தில் ஊடகவியலாளர்கள் திருமலை மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்று மக்களுடன் அளவளாவி அவர்களது பிரச்சினைகளையும் அப்பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் கேட்டறிந்து கொண்டனர். தெற்கைச் சேர்ந்த சிங்கள ஊடகவியலாளர்களிடம் தமது குறைகளையும் பிரச்சினைகளையும் கலந்துரையாடியது இப்பகுதிவாழ் மக்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. தேசிய சமாதான பேரவையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்விஜயத்தில் தெற்கைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட சிங்கள தமிழ் ஊடகவியலாளர்கள் பங்கு கொண்டனர். திருகோணமலை நகரத்திற்கு மட்டுமன்றி குச்சவெளி, கிண்ணியா போன்ற பின்தங்கிய கிராமங்களுக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் சென்ற இவர்கள் அப்பிரதேச மக்களது பிரச்சினைகளை தெரிந்து கொண்டதோடு தாம் கொண்டு சென்ற பாடசாலை உபகரணங்களையும் அப்பிரதேச சிறார்களுக்கு வழங்கினர்.



இந்த பயணத்தின் ஊடாக அடிக்கடி பதற்றநிலை தோன்றுகின்ற ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற பல்லின சமூகங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஊடகவியலாளர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைத்தது. நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கான மனோநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு வடகிழக்கின் யதார்த்த நிலை குறித்த விழிப்புணர்வுடன் தெற்கு ஊடகவியலாளர்கள் தமது ஆக்கங்களை உருவாக்க வேண்டிய பொறுப்புணர்ச்சியை இந்தப்பயணம் அவர்களுக்குள் ஏற்படுத்தியிருக்கும் என நம்பலாம்.

**இவ்வார விழிப்பில்...**

- மஹிந்தவின் தேர்தல் விஞ்ஞாபனம்
- ஊடகவியலாளர்களின் திருமலை விஜயம்
- சமாதான பாதையில் பெண்கள்
- புதிய யுகத்திற்கான இளைஞர்கள்
- அரச படையின் 56ஆம் ஆண்டுவிழா

விழிப்பின் பதிவுகள் தொடர்பான மேலதிக விடயங்கள் ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் இரவு 7.30மணிக்கும், TNL அலைவரிசையில் செவ்வாய் இரவு 7.25 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டி.பி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

# யுத்தத்தினால் அழிந்த மாங்குளம் நகரம் மீண்டும் எப்போது கட்டியெழுப்பப்படும்?

மாங்குளம், முல்லைத்தீவு மாவட்டத்தின் மைய நகரம் மட்டுமன்றி வடக்கே யாழ்ப்பாணம், கிளிநொச்சியும் தெற்கே வவுனியாவையும் ஏனைய மாவட்டங்களையும் இணைக்கும் ஏ-9 வீதியின் கிழக்கே முல்லைத்தீவு நகரமும் மேற்கே மன்னாரையும் இணைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசம்.

புகையிரத சேவை நடைபெற்ற காலத்தில் புகையிரத நிலையம் ஏனைய பிரதேசங்களை இணைக்கிறது.

இந்தப் பிரதேசத்தின் முக்கியத்துவம் கருதி ஸ்ரீலங்கா இராணுவமும் இந்தப் பிரதேசத்தில் பாரிய முகாம் ஒன்றை அமைத்துச் செயற்பட்டு வந்தது.

வன்னி ஒரு விவசாய மாவட்டம். பெரும் நெல் விளையும் வயல் வெளிகளும், உப உணவுப் பயிர்ச் செய்கையும் செழிப்பாக நடை பெறும் மாவட்டம்.

பெருமளவு நெல் உற்பத்தியும் ஏனைய உப உணவுப் பயிர்களும் இங்கு பயிரிடப்படுகின்றன. இந்த விவசாய உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் மையமாகவும் மாங்குளம் பிரதேசம் விளங்கியது.

முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் பிடிக்கப்படும் பெருமளவான மீன்களும் மாங்குளம் பகுதிக்குக் கொண்டுவரப்பட்டே விற்பனை செய்யப்படுகின்றன.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த மாங்குளம் பிரதேசம் கடந்த காலப் போர் நடவடிக்கைகளின்போது மிகவும் மோசமாகச் சேதமடைந்தது. சண்டைகள் பலவும் உக்கிரமாக நடத்த இடம் என்பதால் மாங்குளம் பகுதி மிகவும் மோசமாகச் சீரழிந்து அல்லோலமாகியது. எனினும், சமாதான காலத்தில் கூட இந்தப் பிரதேசம் புனரமைக்கப்படாமல் இருப்பதுதான் வேதனைக்குரியது.

ஏனைய பிரதேசங்களையும் மாவட்டங்களையும் இணைக்கும் பிரதான சந்தியாக இருந்தபோதிலும் இங்கு ஒரு பஸ் தரிப்பு நிலையமோ அல்லது மக்கள் நின்று பஸ் ஏறக்கூடிய நிழல் குடையோ இல்லை. மக்கள் தமது தேவைகளை நிறைவுசெய்ய ஏனைய பகுதிகளுக்குச் செல்ல பஸ்ஸுக்காகக் காத்துக் கிடக்கிறார்கள். கொளுத்தும்



வெயிலிலும் கொட்டும் மழையிலும் சிறுவர்கள், குழந்தைகள், கர்ப்பிணிகள் எனப்படும் அவலங்கள் சொல்லிமாளாதவை.

### வன்னி மடல்

அரச அதிகாரிகளும் பிரதேச சபையினரும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் இந்த அவலத்தினைக் கண்டுங்காணாமல் இருக்கிறார்கள் என்றே கூறவேண்டியுள்ளது.

### இயல்புநிலைக்கான வசதிகள் இல்லை!

கடந்த 'ஜெயசிக்குறு' நடவடிக்கையின் மூலம் இந்தப் பிரதேசம் முழுமையான அழிவடைந்த நிலையில் மீளவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையும் வலயக் கல்விப் பணிமனையும் நீர்ப்பாசனப் பொறியியல் அலுவலகமும் அமைக்கப்பட்டுள்ளது. படிப்படியாக மக்கள் மீளவும் குடியமர்ந்து விட்டார்கள். ஆனால், மக்கள் இயல்பு வாழ்வைப் பெறுவதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படவில்லை.


இதுவிடயமாக புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளருடன் தொடர்புகொண்ட போது பிரதேச சபையில் நிதியில்லை என்று கூறுகிறார்.

கடந்த காலங்கள் போல் மாங்குளம் மத்திய நகரமாக திகழவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் முன்வரவேண்டும்.

இப்பகுதி மக்களுக்கென இங்கு ஒரு வைத்தியசாலை இல்லை. எனினும், அந்தக் குறை தமிழீழ விடுதலைப் புலிகளின் தீலிபன் மருத்துவமனையினர் ஆற்றும் பங்களிப்பில் நிறைவேற்றப்படுகிறது.

### நவினேஸ்

வவுனியாவிற்கு அடுத்து பெரும் நகரமாக ஒரு காலத்தில் சிறப்புடன் விளங்கிய மாங்குளம் 'ஜெயசிக்குறு' நடவடிக்கையின் பின் பெரும் காடாகவும் அடிப்படை வசதிகள் அற்ற பின்தங்கிய பிரதேசமாகவும் இருக்கிறது. இந்த நகரை மீளவும் கட்டியெழுப்புவதற்கு அனைத்துத் தரப்பும் பொறுப்பு டன் ஆவனசெய்யவேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும். ✱



# பிறர் மீது காட்டும் அன்பே இறையன்பு!

## ஞாயிறு நற்பிரசாதம்

அன்பு என்று சொல்லும்போது இது உணர்வுபூர்வமான ஒன்று அல்ல. மாறாக அகவாழ்வில் நிகழும் ஒரு யதார்த்தம். அடுத்தவரை அன்பு செய்தல் என்பது அவருக்காகவே செயற்படுவதாகும். அப்படி என்றால், இயேசு கூறும் அயலான் யார்? இன்று நமது சமுதாயத்தில் அயலான் யார் என்ற கேள்விகளுக்கு சரியான பதில் கிடைத்தால் இயேசு போதித்த அன்பு எத்தகையது என்பது நமக்குப் புரியும். அன்று யூத சமுதாயத்தில் சமாரியர்கள், புறவினத்தார்கள், பெண்கள், ஏழைகள், விதவைகள், அநாதைகள் ஆகிய அனைவருமே அயலானாகக் கருதப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் மேல்தட்டு வர்க்கத்தினரால் நசுக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட மக்களைத்தான் இயேசு அன்பு செய்தார். யார் என் அயலான்-என்பதற்கு இதுதான் இயேசு தரும் பதிலாகும். இக்கருத்தை முதல் வாசகம் தெளிவாக்குகிறது. அன்பின் ஆழத்தை உணர்ந்துகொள்ள. நம் இதயம் தேடும் பதிலே இன்றைய வாசகங்கள் இறைவனை அன்பு கூர்தல் என்பது தெய்வ பயம். அர்ப்பணிப்பு, கீழ்ப்படிதல் ஆகிய பண்புகளை உள்ளடக்கியது. கடவுள் படைத்தவர். நம்மை மீட்பவர். கடவுளோடு மனிதன் கொண்டுள்ள உறவில்தான் நமது குறிக்கோளாகிய விண்ணரசில் நுழையமுடியும். இதைத்தான் புனித பவுல் தூய ஆவியின் துணையிருந்தால் ஒளியின் மக்களாக வாழ முடியும். அதற்கு இறைவனின் உடனிருப்புத் தேவையென்கிறார். இயேசு கொடுத்த இரண்டு கட்டளைகளும் வெவ்வேறான கட்டளைகள் அல்ல. மாறாக ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல, இரண்டு கட்டளைகளும் ஒரே அன்புக் கட்டளைகளின் வெளிப்பாடுதான். இறை அன்பு இல்லாமல் பிறர் அன்பு இல்லை. பிறர் அன்பு இல்லாமல் இறை அன்பு இல்லை. ''இறை அன்பு இல்லாமல் மனித மேம்பாட்டுச் செயல்களில் ஈடுவது பெற்றோல் இல்லாமல் வாகனத்தை ஓட்ட முயற்சிப்பது போலாகும்'' இறை அன்பில் மலரும் செப வாழ்வு, பிறர் அன்புப் பணிக்கு உறுதி தருகிறது. இறை அன்பு இல்லாமல் பிறர் அன்பு வாழ்வில் அர்த்தமிருக்காது. அதுபோல பிறர் அன்பு இன்றி இறை அன்பு வாழ்வில் நிறைவு இருக்காது. இறை அன்பு என்ற பெயரில் மனித அன்பு மறுக்கப்படால், அழிக்கப்பட்டால் அது உண்மையான இறை அன்பு அல்ல. அன்றைய இறை சட்டம் ஒருபுறம்தான் வலியுறுத்தப்பட்டது. மறுபுறம் முழுமையாக இருட்டடிப்புச் செய்யப்பட்டது. இதை அறிந்துதான் இயேசு அன்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். இறை அன்பானது பிறர் அன்பு மேல் கட்டப்பட்ட ஒன்றாகும். இதைத்தான் புனித அருளப்பர் தனது திருமுகத்தில் ''நான் கடவுளை அன்பு செய்கிறேன் என்று சொல்லிக்கொண்டு ஒருவன் தன் சகோதரனை வெறுத்தால் அவன் பொய்யன். ஏனெனில், கண்ணால் சகோதரனுக்கு, அன்பு செய்யாதவன், தான் கண்டி ராத கடவுளுக்கு அன்பு செய்யமுடியாது.'' (ஜோவான் - 4:20)

ஒரு போதகர் நற்செய்தி அறிவிக்கப் புறப்பட்டார். போகும் பாதை மிகப் பயங்கரமான, இருளான மலைப் பாதை. உயர்ந்த சிகரங்களும் ஆழமான பள்ளத்தாக்குகளும் கொண்ட பாதை அது. கடவுள் என்னை அன்பு செய்கிறார். அவர் என்னை வழிநடத்துகிறார் என்று செபித்துக்கொண்டே சென்றார். மறுநாள் காலையில் அதே பாதையில் வந்தபோது பாதையில் இரண்டு காலடித் தடங்கள் இருப்பதைப் பார்த்து வியந்துபோனார். அது யாருடையதாக இருக்கும்? சாத்தானுடையதாக இருக்குமோ? என்று யோசித்துக்கொண்டே வந்தார். அப்போது கடவுள் சென்னார், ''இல்லை மகனே! நான் உன்னோடு நடந்துவந்ததை நீ உணரவில்லையா...? சற்றுத் தூரம் வந்த போது அந்தப் பயங்கரமான பள்ளத்தாக்கில் ஒரேயொரு காலடி மட்டும் தெரிந்தது. பக்தன் தடுமாறினான். ''கடவுளே! ஒரேயொரு காலடித்தடம் மட்டும் தெரி கிறதே'' நீர் எங்கே போனீர்? என்னை விட்டுவிட்டு எங்கே போனீர்? என்று கேட்டான். அதற்குக் கடவுள் சொன்னார் அந்தக் காலடித் தடம் என்னுடையது. அந்த இடத்தில் நான் உன்னை நடக்கவிடாமல் என் தோள்களிலே தூக்கிச் சுமந்தேன். நீ உன் முழு உள்ளத்தோடும் முழு ஆன்மாவோடும் என்னை அன்பு செய்கிறாய் என்பது எனக்குத் தெரியும். நான் உன்னை ஒரு போது மறவேன். என் இதயத்தில் உனக்கு எப்போதும் நிரந்தரமான இடம் உண்டு என்றார். இதைக் கேட்ட பக்தன் அப்படியே திகைத்துப்போனான். ''உன் கடவுளாகிய ஆண்டவருக்கு முழு உள்ளத்தோடும் முழு ஆன்மாவோடும் அன்பு செய்வாயாக'' (மத். 22:37) இந்த நிகழ்வின் வழியாக கடவுள், மனிதன் மீது வைத்த அன்பின் ஆழத்தை நாம் உணர்கின்றோம்.கடவுள் மனிதனை அன்பு செய்வதையும் மனிதன் முழு உள்ளத்தோடு கடவுளை அன்பு செய்வதையும் நாம் அறிகிறோம்.

சமூக சீர்திருத்தவாதி ஒருவர் தனது வீட்டில் தரையில் அமர்ந்து எழுதிக்கொண்டு இருந்தார். வழக்கம்போல அவரிடம் வந்து பேசும் பக்கத்து வீட்டுக் குழந்தை ஒரு நாள் அவர் எழுதிக்கொண்டு இருந்தபோது அவரது ஆடை மீது படுத்துத் தூங்கிவிட்டது. அடுத்த வேலைக்குப் புறப்பட்ட அவர் அந்தக் குழந்தையின் தூக்கத்தைக் கெடுக்க விரும்பாமல் தம் சகோதரியிடம் ஒரு கத்திரிக்கோல் கொண்டு வரச்சொல்லி அந்த ஆடையைக் கத்தரித்துவிட்டு எழுந்துசென்றார்.

(நன்றி· பாதுகாவலன்)

# நாளை உலகம்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*கேள்வி:* பரீட்சையை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

*பதில்:* பதட்டப்படாமல் நிதானமாகக் கேள்விகளை வாசித்து, விவேகமாக விடையளித்தேன். அதுவே இவ்வளவு புள்ளிகளை என்னை எடுக்கவைத்தது.

*கேள்வி:* வகுப்பில் எவ்வாறு நடந்துகொள்வீர்கள்?

*பதில்:* மாணவர்களுடன் ஒற்றுமையாக நடந்துகொள்வேன். ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடங்களைக் கவனமாகக் கேட்பேன். பாடக் குறிப்புகளை படித்து ஆசிரியர்களிடம் சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவேன்.

*கேள்வி:* போட்டிகளில் பங்குபற்றியமை பற்றி...?

*பதில்:* ஆங்கில தின போட்டிகள், அறநெறிப் போட்டிகள், நாடகப் போட்டிகள் போன்றவற்றில் பங்குபற்றி சான்றிதழ்களையும் பரிசில்களையும் நிறையவே பெற்றுள்ளேன்.

*கேள்வி:* வேறு பாடசாலைக்குப் போகும் எண்ணம் உண்டா?

*பதில்:* இல்லை. அந்த எண்ணமே எனக்கோ எனது பெற்றோருக்கோ இல்லை. என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்த பாடசாலைக்கு நான் தொடர்ந்து கல்விகற்று பெருமை சேர்ப்பேன்.

*கேள்வி:* ஓய்வு நேரத்தை எவ்வாறு பயன்படுத்துவீர்கள்?

*பதில்:* கதைப்புத்தகங்கள் குறிப்பாக மகாபாரதம், இராமாயணம் போன்ற புத்தகங்கள், பத்திரிகைகள் என்பனவற்றைத் தவறாமல் வாசிப்பேன். சிறுவயதில் இருந்தே வாசிக்கும் பழக்கம் எனக்கு நிறையவே உள்ளது. விண்வெளி தொடர்பான தகவல்களைச் சேகரித்து வைக் கும் பொழுதுபோக்கு எனக்கு இயல்பாகவே உள்ளது.

*கேள்வி:* உங்களிடம் உள்ள ஆன்மீக ஈடுபாடு பற்றி....?

*பதில்:* ஆன்மீக ஈடுபாடு என்னிடம் நிறையவே உள்ளது. என் அப்பப்பா, சித்தப்பா ஆகியோர் கோயிலுக்கு அழைத்துச் செல்வார்கள். இதனால் கடவுள் நம்பிக்கை எனக்கு அதிகமாகவே உள்ளது. கடவுள் நம்பிக்கையுடனும் தான் பரீட்சையை எதிர்கொண்டேன்.

*கேள்வி:* மாவட்டத்தில் இரண்டாம் இடம் பெற்றுள்ளமை பற்றி...?

*பதில்:* இவ்விடயத்தை அறிந்தவுடன் நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். எனது அப்பாவுக்குத் தான் முதலில் கூறினேன். சாவகச்சேரி லயன்ஸ் கழகம் கடந்த புதன்கிழமை என்னைப் பாராட்டி கிண்ணம் வழங்கி, பணப்பரிசும் வழங்கி கௌரவித்தனர்.

பல வங்கிகளும் உதவுவதற்கு முன் வந்துள்ளன. அதற்குரிய கணக்குகளை முன்கூட்டியே நாம் ஆரம்பித்திருந்தோம்.

*கேள்வி:* உமது பெற்றோருக்கும் பாடசாலைக்கும் இடையில் உள்ள தொடர்பு பற்றி?

*பதில்:* எனது பெற்றோர் பாடசாலைக்கு வந்து எனது குறை நிறைகளைக் கேட்பார்கள் அடிக்கடி ஆசிரியர்களுடனும், பாட சாலை அதிபருடனும் பெற்றோர் தொடர்பு வைத்துள்ளமையால் எனக்குப் படிக்கவேண்டும் என்ற மனநிலை தொடர்ந்து இருந்து வந்தது. ✱

## உதவியாளர் தேவை

ஆசிரியர் பணிபுரியும் குடும்பம் ஒன்றிற்கு பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு தங்கியிருந்து அல்லது நாளாந்தம் வந்து செல்ல ஓர் உதவியாளர் தேவை. பெண் உதவியாளர் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
செ.இராசலிங்கம், யாமாச் சந்தி,
உடுவில் தெற்கு, மானிப்பாய்
T.P:-4591439

## விற்பனைக்கு

மொத்த வியாபாரிகளின் நன்மை கருதி இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பெட்சீட் வகைகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ள

நாடுங்கள்:

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ**

42.44. பெரியகடை வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.No:-222 2985

(c/45811)



## தீபாவளி மலிவு விற்பனை!

சுபமுகூர்த்தப் பட்டு சாறிகள்,
பட்டுவேட்டி சால்வைகள்
சிறுவர்களுக்கான சூட், சேட் வகைகள்
அனைத்திற்கும் தரச்சிறப்பில்
முன்னணி பெற்ற ஒரே ஸ்தாபனம்.

**வளர்மதி புடைவை அகம்**

(176) 258, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



### விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்., ஒக்.23

தேசிய உளவள ஆலோசனைத் தினத்தை முன்னிட்டு வலி.தென்மேற்குப் பிரதேசசபை நடத்தும் ஆலோசனை விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு மானிப்பாய் நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வலி. தென்மேற்கு பிரதேச செயலக ஆலோசக உதவியாளர்களும் வலிகாமம் வலய உளவளத் துணையாளர்களும் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளனர். (3/202)

### குண்டுமணியை காதுக்குள் செருகிய 3 வயதுக் குழந்தை

சாவ., ஒக்.20

காதுக்குள் சிறிய குண்டுமணியை செருகிய 3 வயது குழந்தை சாவகச்சேரிமாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டது.

மீசாலை அல்லாரைப் பகுதியைச் சேர்ந்த சிவகுமார் குகரூபன் வயது 3 என்ற குழந்தையே சிறிய குண்டு மணியை எடுத்து காதில் செருகியது அந்தக் குண்டு மணியை வைத்திய அதிகாரி சாதுரியமாக அகற்றினார்

(3-31)

## அதிரடி விலைக் கழிவில்

வீடுகளில், அலுவலகங்களில் பாவிக்கக்கூடிய முறையில் டயலொக் **G.S.M,** மொபிரெல் **G.S.M** மேசைத் தொலைபேசிகள் பூட்டித்தரப்படும். டயலொக் 500/= மொபிரெல் 300/= பைக்கேஜ் இணைப்புகளுக்கு உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்.



ரூ.10,000/= மட்டும

தொடர்புகளுக்கு:
**பவர் செலூலர் ரேடிங் கம்பனி**
205/01, கஸ்தூரியார் வீதி (ராஜா தியேட்டர் அருகில்) யாழ்ப்பாணம்.
T.P:-0712-399220,0714-182500,0773518330

## உடனடியாகத் தேவை

முழு நேர பயிற்றுவிப்பாளர்கள் (இருபாலர்)
(Full Time Instructos)

Pagemaker, Corel Draw, Photoshop, Illustrator, Flash, Fireworks, Dream weaver, Director, C++, VB/. Net, Java, DHTML, ASP, Premiere, Sound Forge, Fruity Loops, 3D Studio Max போன்ற மென்பொருட்களில் அனுபவமுடையவர்கள் உடனடியாகத் தேவை. திறமைக்கேற்ற ஊதியம் மற்றும் சலுகைகள் வழங்கப்படும்.

போஸ்டர் ஒட்டுவதற்கு ஆட்கள் தேவை

ஒபீஸ் பணியாளர் (Peon) தேவை

ஆங்கில ஆற்றலுடைய 50-60 வயதிற்குட்பட்ட Office Co-ordinator தேவை (ஓரளவு கணனி அறிவு அவசியம்)

YTS IT For Future

**யாழ் ரெக்**
இல.3, சேர் பொன் இராமநாதன் வீதி,
கலட்டிச்சந்தி

## ட்ரிபோன் ஆர். மிரான்டோ



ஜனசக்தி காப்புறுதி கம்பனியினதும் கொத்மலை ஹோல்டிங்க்ஸ் லிமிடெட்டினதும் பணிப்பாளர்சபை, சகாக்கள், அவற்றின் ஊழியர்கள் மற்றும் ஸ்ரீ லங்கா கிரிக்கெட்டின் இடைக்கால செயற்குழு, இலங்கை டென்னிஸ் சங்கம் ஆகியவற்றுக்கு ட்ரிபோனின் மனைவியான பெவர்லி, மகள்களான டாஷியா, தரிஷா ஆகிய நாமும் அவரின் தாயார், சகோதரிகள், சகோதரன் மற்றும் அவர்களது குடும்பங்களும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் றோயல் கல்லூரி யூனியனின் அங்கத்தவர்கள், றோயல் தோமியன் 125வது இணைக் கமிட்டி, தமிழ் யூனியன் கிரிக்கெட் மற்றும் மெய்வல்லுனர் கழகம், வண பிதாக்கள், திம்பிரிகஸ்யாய புனித தெரேஸா ஆலய பாடகர்கள் குழு மற்றும் நண்பர்கள், உறவினர்கள் அடங்கலான ஏனைய சகாக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். எமது அன்புக்குரிய ட்ரிபோனின் அகாலமறைவினால் நாம் அனுபவித்த துன்ப, துயரங்களின்போது எமக்கு பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கி பிரார்த்தனைகளில் ஈடுபட்ட உங்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே நன்றிதெரிவிக்க முடியாமல் போனதையிட்டு எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்

## Kiffs



| Boftle Size(ml) | Weight (gms) |
|---|---|
| 500 | 20 |
| 500 | 24 |
| 750 | 24 |
| 750 | 28 |
| 1000 | 28 |
| 1000 | 34 |
| 1500 | 34 |
| 1500 | 38 |

வெற்றுத் தண்ணீர் போத்தல்கள், மூடிகள் பிறிபோம் (preform)கள் ஒடருக்கு செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு: *Mr. Paul Perera, Kiffs(Pvt) Ltd., N0;397/B, Kerawalapitiya, Hendala, Wattala, Sri Lanka. Tel: 0112946633, Fax: 2934275*



யாழ். நகரில் நவீன வசதிகளுடன் கூடிய புடைவை விற்பனைக்காட்சியகம்

தீபாவளியை முன்னிட்டு நவநாகரீக ஆடைத்தெரிவுகளுக்கு நாடுங்கள்

# Style Park

*Perfect Collection*

# ஸ்ரைல் பார்க்

நீங்கள் குதூகலமாகக் குடும்பத்தினருடன் உங்கள்
ஆடைத் தேவைகளை நீங்களே தெரிவு செய்து மகிழ்ந்திட
யாழ். நகரில் ஒரே புடைவை விற்பனைக் காட்சியகம்



No. 171, K.K.S. Road, Jaffna. T.P: 8383 இல. 171, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.



**northumbria**
**UNIVERSITY**
*great learning great experience great future*

# லண்டனின் அதி சிறந்த நவீன பல்கலைக்கழகம்

நொதம்பிரியா பல்கலைக்கழகமானது **(Northumbria University)** உயர்தரமான பட்டப்படிப்பிற்கும், பட்டதாரிகளின் தொழில்வாய்ப்பிற்கும் தனிநிகர் பெற்று விளங்குகின்றது. **Newcastle** நகரை மையமாகக் கொண்ட இப்பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் சிறந்த கற்பித்தல், குறைந்த வாழ்க்கைச் செலவு வசதிகளையும், மகிழ்ச்சிகரமான அதி சிறந்த கற்றல் சூழலையும் அனுபவிக்கிறார்கள்.

நொதம்பிரியா பல்கலைக்கழகமானது பல்வேறு துறைகளிலும் மாணவர்கள் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு வருடமும் ஜனவரியிலும் செப்டம்பரிலும் அனுமதி வழங்கி வருகின்றது.

- Applied Computing – BSc (Hons)
- Applied Computing Technologies – MSc
- Accounting and Finance – BA (Hons)
- The Newcastle Business School – MBA
- Business and Management
- Business with Finance – BA (Hons)
- Business with Marketing - BA (Hons)
- Business Information Technology
- Engineering
- Microelectronic and Communication Engineering – MSc
- Mechanical Engineering - MSc

இவற்றைப் பற்றிய கருத்தரங்கினை நடாத்துவதற்கு **Dr. Gerry Hayden,** சர்வதேச அபிவிருத்தி, கணனியியல் கல்லூரி, பொறியியல் துறை மற்றும் தகவல் விஞ்ஞானத் துறைத் தலைவர் லண்டனிலிருந்து வருகை தருகின்றார்.

**இடம் : நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**காலம் : 26 அக்டோபர் 2005 காலை 10.00 மணி**

இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் ஆர்வலர்கள் அனைவரும் திரண்டு வந்து தவறாது கலந்து பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

# NIIT®

**347 – 2/1, Kasturiyar Road,**
**Jaffna.**
**T.P : 021-2227250, 021-4590567**

**enabling the young professional for a better future**

## அரிய சந்தர்ப்பம்!

கொழும்பில் முப்பது வருடங்களுக்கு மேலாக இலாபத்தில் இயங்கிவரும் ஒரு கைத்தொழில் தாபனம் (Industries) மக்கள் மத்தியில் நற்பெயர் பெற்ற வியாபாரச் சின்னத்துடன் (Trade Mark) வாடிக்கையாளர்களுடன் உரிமை மாற்றம் செய்யப்படும். ஆர்வத்துடன் முதலீடு செய்து மேலும் வியாபாரத்தில் முன்னேற விரும்புகிறவர்களுக்கு ஏற்றது.

(சி45842) (24-11)

தொடர்புகளுக்கு:

**The Advertiser**
**P.O.Box. 1927, Colombo.**


## சமயசந்நிதிகளில்

அச்சுவேலி, ஒக்.23

தம்பாலை ஞானவைரவர் ஆலய புனராவர்த்தன பஞ்சகுண்ட மகா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை திங்கட்கிழமை காலை 9.45 மணிதொடக்கம் 11 மணிவரை நடைபெறவுள்ளது. கும்பாபிஷேக த முன்னிட்டு இன்று காலை 9 மணிதொடககம் பிற்பகல் 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துவர். கும்பாபிஷேகம் முடிவடைந்ததும் மகேஸ்வர பூசை இடம்பெறும். (203-7)

* * *

வட்டுக்கோட்டை, ஒக்.23

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் மங்களாம்பிகா சமேத மகாலிங்க சுவாமிகள் ஆலய மண்டலாபிசேகப் பூர்த்தி விழாவும் சங்காபிசேகமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

தொடர்ந்து மாலை 6 மணிக்கு சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும் இடம்பெறும். (203-161)


## இலவச அமெரிக்க லொத்தர் விசாவைப் பெற்றுக்கொள்ள விரைவாகச் செயற்படுங்கள்

கொழும்பில் உள்ள எமது தலைமை அலுவலகம் மூலமாக இதுவரை பெற்றுக் கொடுத்த சேவையை முதல் முறையாக யாழ். மண்ணில் இலவசமாக அறிமுகப் படுத்துகின்றோம்.

❄ இந்த விசாவினைப் பெறுவதற்கு கல்வித்தகைமை, வயது எல்லை எதுவும் தேவையில்லை. நீங்கள் குடும்பத்தோடும், தனியாகவும் குடியேறலாம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்.

**RAINBOW TRAVELS & TOURS**
32 1/2, KASTURYAR ROAD, JAFFNA.
Tel: 021 2223237


## நாட்டின் மிகவும் ஆச்சரியமானதும் முன்னணியில் திகழ்வதுமான குறியீடுகள் சிலவற்றுடன் வேலை செய்ய உங்களுக்கு ஆர்வம் உள்ளதா?

சுவதேஷி இண்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டட், 60 ஆண்டுகளுக்கு அதிகமாக சிறப்பாக அறியப்பட்டுள்ள தனிநபர் பராமரிப்பு மற்றும் புடைவை பராமரிப்பு உற்பத்திகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் கௌரவமிக்கதும் முன்னணியில் திகழ்வதுமான பொது நிறுவனமாகும். இலங்கையில் குறியீட்டுடனான சவர்க்காரத் தயாரிப்பில் முன்னோடியான நிறுவனம், மூலிகைப் பிரிவில் தொடர்ச்சியாக முன்னணி நிறுவனமாக உள்ளது.

எமது தொடர்ச்சியான வளர்ச்சிக்கு ஆதரவு வழங்குவதற்காக, கீழ்வரும் பதவிகளை நிரப்புவதற்காக வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் சிறப்பான சாதனை தடயங்களைக் கொண்ட சுறுசுறுப்பான, பல்வேறு வேலைகளை செய்யக்கூடிய நபர்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.

வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்
விற்பனைப் பிரதிநிதிகள் - வடக்கு கிழக்கு பிரதேசங்கள்

தகைமைகள் :

வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர் மிகவும் சிரேஷ்ட பதவியாகும், ஒரு வலயத்தை கையாளும் அதேவேளை, ஏனைய வலயங்களை மேற்பார்வை செய்வதுடன் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரி

- சிறப்பான தொடர்பாடல் மற்றும் பலம்மிக்க உள்ளார்ந்த திறமைகளுடன் சிறப்பாக தீர்மானம் எடுத்தல் மற்றும் பகுப்பாய்வு மற்றும் திட்டமிடல் திறமைகள் கொண்டவர்
- ஒரு நுகர்வோர் உற்பத்தி நிறுவனமொன்றில் நுகர்வோர் உற்பத்தி (FMCG) விற்பனையில் ஆகக்குறைந்தது 5 வருட அனுபவம்.
- 32 வயதுக்கு குறைந்தவர்.
- க. பொ. த. (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது 3 சித்திகள்.
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பேசும் திறமை. சிங்களத்தில் திறமை மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு நிறுவன தரத்துக்கேற்ப சிறந்த சம்பளம் வழங்கப்படும்.

இரண்டு உறவினரல்லாத நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் உங்களின் முழுமையான சுயவிபரக் கோவையை இவ்விளம்பரம் கண்டு 07 நாட்களுக்குள் கிடைக்கத்தக்கதாக அனுப்பவும்.

SWADESHI ESTD: 1941

முகாமைத்துவப் பணிப்பாளர்
சுவதேஷி இண்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டட்,
57, கொழும்பு வீதி, கந்தானை.
தொலைபேசி: 2236471, 2236244, 2232078-9
தொலைநகல்: 2237180, 4832415 மின்னஞ்சல்: swadeshi@sltnet.lk
இணையத்தளம்: www.swadeshiherbal.com
விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

Khomba The Original Herbal Beauty Soap · Rani Sandalwood · Apsará Venivel · Khomba BABY · SPORTSMAN PLUS · Periwite Laundry soap
Protekt · Periwite SOAP POWDER · Blue Diamond · Khomba Herbal Shampoo · Khomba Herbal Talc · Rani Talc


## மின்சாரத்தடை?

கம்பனியில் | அலுவலகத்தில் | வீட்டில்

ஜெனரேற்றர்

சூழல் மாசு முற்றாக இல்லை

எரிபொருள் செலவு இல்லை, பராமரிப்பு தேவையில்லை, இரைச்சல் மற்றும் புகை இவை எதுவும் முற்றாக இல்லை. இத்தகைய பவர் இன்வேற்றர் மற்றும் யு.பி.எஸ். தொகுதிகளை மின்சாரத் தடையின்போது கணனித் தொகுதிகள், தொலைபேசி வலையமைப்புகள், மின்விசிறி, ரியூப் லைற்கள் உட்பட அனைத்து உபகரணங்களுக்கும் பயன்படுத்தலாம். அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு உத்தரவாதம் மற்றும் சேர்விஸ் ஒப்பந்தத்துடன் பொருத்தப்படும். உங்கள் தேவைக்கு ஏற்றவாறு 3 மணித்தியாலத்திலிருந்து 48 மணித்தியாலம் வரை சீராக்கப்பட்ட தூய்மையான 230V மின்சாரத்தைப் பெறமுடியும். வெளி மின்சாரம் உள்ளபோதும் இதனுடாக மின்சாரம் வழங்கப்படுவதால் எந்நேரமும் முற்றுமுழுவதும் சீர்செய்யப்பட்டே வெளிவிடப்படும். மேலும் எமது நிறுவனத்தால் உங்கள் அலுவலகங்களுக்குரிய தொலைபேசி வலையமைப்பு (PABX) மற்றும் இலத்திரனியல் பாதுகாப்புக் கருவிகளும் பொருத்தித்தரப்படும். **Call - 0777 - 705 355**

Marconi's Power Protection | Marconi's Power Management | Marconi's Office Intercom (PABX) | Marconi's Electronic Security & CCTV

**Marconi's Power & Security Management**
**410-2/1, Galle Rd., Colombo-06. TP-2361362, 0777 705355**



## அபூர்வமான மூலிகைகளின் ஒன்றிணைப்பு பரிபூர்ணமான நோய் நிவாரணத்திற்கான வழி.

பரிசோதனை மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது

Baraka பரகா

தற்பொழுது உங்கள் யாழ் நகரிலும்!

ஆயுர்வேத திணைகளத்தின் அனுமதி இலக்கம் 3/1/5/4/94/30

**DIABsol** (Black Seed Oil)

இயற்கையாக நீரழிவு நோயிலிருந்து நிவாரணம் பெற வேண்டுமா?

Baraka கருஞ்சீரகத்தினால் தயாரிக்கப்பட்ட வில்லைகள் மருத்துவ ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட 100% இயற்கையான கருஞ்சீரக எண்ணெயினால் தயாரிககப்பட்டு நீரிழிவு நோயிலிருந்து நிவாரணத்தை தருவதோடு உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றது. ஏனைய ஆங்கில மருந்துகளுடன் உபயோகிக்கலாம்.

**GarliCHOL** (Garlic)

இயற்கையாக கொலஸ்ட்ரோலின் அளவை கட்டுப்படுத்த வேண்டுமா?

Baraka வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக எண்ணெய் வில்லைகள் 100% இயற்கையாக வெள்ளைப்பூண்டு கருஞ்சீரக கூட்டமைப்பில் தயாரிக்கப்பட்டு உடலிலுள்ள மேலதிக கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துகின்றது.

**CODseas** (Cod Liver Oil)

உடலை ஆரோக்கிய நிலையில் பேண வேண்டுமா?

கருஞ்சீரகத்துடன் கூடிய மீன் எண்ணெய் (Cod Liver Oil) வில்லைகள் உடலுக்கு தேவையான ஒமேகா-3 மூலகத்துடன், விற்றமின்கள், கனியுப்புகள் மற்றும் மேலதிக கல்சியத்தை வழங்கி, உடலை ஆரோக்கியமாக பேண உதவும் மேலும் தடிமன், இருமல் என்பவற்றை தவிர்த்து கண்பார்வை என்பு, பல் என்பவற்றின் தொழிற்பாட்டை அதிகரிக்கும்.

**BeeVIT** (Bee Honey)

இயற்கை மூலிகைகளின் மூலம் உடலுக்கு தேவையான புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை பெற வேண்டுமா?

பிரபலமான இரு மூலிகைகளான கருஞ்சீரகம் மற்றும் தேன் என்பவற்றின் கூட்டமைப்பில் தயாரான Baraka கருஞ்சீரக தேன் வில்லைகள் நாளாந்தம் உடலுக்கு தேவையான ஆரோக்கிய சக்தியை வழங்குகின்றது மேலும் உடலுக்கு தேவையான மேலதிக புரதங்கள், விற்றமின்கள், கனியுப்புக்களை வழங்கி உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலை பாதுகாக்கின்றது.

Picasso Ads

100% இயற்கை மூலிகையினால் தயாரிக்கப்பட்டதினால் ஏனைய மருந்துகளுடன் பாவிக்க முடியும்.


HFAC SRI LANKA

அனைத்து பரகா உற்பத்திகளையும் ஏகவிநியோகஸ்தர்களான WESCO PHARMACY JAFFNA இடம் பெற்றுக்கொள்ளலாம்.
Tel : 021 2223188

EXPO LANKA
EXPOLANKA PHARMACEUTICALS (PVT) LTD.
11A, Mile Post Avenue, Colombo - 03 Tel :- 0112 676398/9
email. expopharma@expo.slt.lk, www.barakaoil.com

Baraka — Your health partner in life

# தமிழ்த் தேசியத்தை வென்றெடுப்பதில் கிழக்கு மக்கள் தொடர்ந்தும் உறுதி



பெரிய போரதிவு பூ.ம.செல்லத்துரை

மட்டக்களப்பு பெரிய போரதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தமிழ் உணர்வாளரும் மிக மூத்த அரசியல் தொண்டருமான பூ.ம. செல்லத்துரை-

ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலத்திலேயே முழு வீச்சுடன் அதில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

இன்னும் சில மாதங்களில் ஏழுபதாவது அகவையை எட்ட இருப்பினும் அவர் அரசியல் தொண்டில் இப்போதும் மூழ்கியவராகவே உள்ளார். ஐம்பது ஆண்டுகளை அரசியலோடு செலவிட்டவர்.

மூத்த ஊடகவியலாளர் என்ற வகையில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் குறித்த பதிவுகள் அவரிடம் நிறையவே உள்ளன. இலங்கையில் வெளிவந்த, வெளிவரும் அதிக எண்ணிக்கையான பத்திரிகைகளில் தமிழர் அரசியல்,வரலாறு ஆகிய துறைகளில் ஆழமான, ஆய்வுபூர்வமான பல கட்டுரைகளை எழுதியவர் அவர்.

தமிழர் அரசியலின் விடிவெள்ளியாக உதித்த தந்தை செல்வாவின் பொடி அடித் தொண்டன் என்று கருதுமளவுக்கு மட்டக்களப்பில் அவருடன் நெருங்கிப் பணியாற்றியவர் பூ.ம.செ.

அவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தவேளை,அவருடன் நடத்திய நேர்காணலின் ஒரு பகுதி கடந்த 16ஆம் திகதி உதயனில் வெளியானது. அதன் எஞ்சிய பகுதி இங்கு தரப்படுகிறது.

## தந்தை செல்வாவும் தலைவர் பிரபாகரனுமே பிரதேசவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தனர்

***கேள்வி:*** இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் தமிழர்களின் அரசியல் உரிமை எவ்வாறு இருந்தது'?

***பதில்:***1924 ஆம் ஆண்டு முதல் 1931 ஆம் ஆண்டு வரை இருந்த அரசியல் சட்டத்தில் இலங்கையில் சிறுபான்மை மக்களின் கையில் தான் அதிகாரம் இருந்தது. 17 சிறுபான்மை சபை உறுப்பினர்களும் 16 பெரும்பான்மை சபை உறுப்பினர்களும் இருந்தார்கள்.

நிர்வாகப் பொறுப்புகள் சிறுபான்மையினரின் கைகளில் இருந்ததால் பெரும்பான்மையினராக இருந்த சிங்களவர்கள் பாதிக்கப்பட்டனர். இதனால், 1926 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா வடக்கு - கிழக்கு மாகாணத்தை இணைத்து தமிழர் கையில் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்.

ஏனென்றால் 9 மாகாணங்களின் அதிகாரங்களை இரண்டு மாகாணங்களில் வாழ்கின்ற சிறுபான்மையினர் ஆட்சி செய்வதை மறுத்து இவர்களுக்கு இரண்டு மாகாணங்களையும் வழங்கி விட்டால் ஏனைய ஏழு மாகாணத்திலும் தாங்கள் அதிகாரம் செலுத்தலாம் என்பது அவர்களது நோக்கமாக இருந்தது.

அடுத்து டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் கண்டிச் சிங்களவர்கள் இலங்கைக்கு சமஷ்டி அரசியல் திட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டார்கள். அப்போது தமிழர்கள் அதுபற்றிச் சிந்திக்கவில்லை.

அதனால், ஒரு சர்வஜன வாக்கெடுப்பை டொனமூர் சிபாரிசு செய்தார். அந்த சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் சிங்களவர் பெரும்பான்மையினர் ஆனார்கள்.

1931 ஆம் ஆண்டிலிருந்து 1947 ஆம் ஆண்டு வரை டி.எஸ்.சேனநாயக்கா விவசாய அமைச்சராக இருந்தார். அவர் அந்தக் காலப்பகுதியில் விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வையில் வடக்கு - கிழக்கின் நிலங்களில் சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியமர்த்தினார். 1944 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனிச் சிங்களச் சட்டத்தை பிரேரித்தார். அதனை மட்டக்களப்பு நாடாளுமன்ற பிரதிநிதி ரி.நல்லையா எதிர்த்தார். சிங்களமும் தமிழும் இந்த நாட்டின் அரசமொழியாக இருக்கவேண்டும் என்ற பிரேரணையைக் கொண்டுவந்தார். அந்த திருத்தப் பிரேரணையை பண்டாரநாயக்கா ஆமோதித்தார். அது நிறைவு செய்யப்பட்டது.

அது அவ்வாறாக இருந்தபோது 1948 ஆம் ஆண்டு பிரதமராக வந்த டி.எஸ். சேனநாயக்கா, 1950 ஆம் ஆண்டு நாடாளுமன்றில் மொழி தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் தமிழும் சிங்களமும் இந்தநாட்டின் ஆட்சி மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் மந்திரிகளாகிய நாங்கள் அதனை அமுல் செய்வோம் என்று தெரிவித்தார்.

தந்தை செல்வாவோடு பண்டார நாயக்கா செய்த ஒப்பந்தத்தை 1957 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கண்டிக்கு பாதயாத்திரை செய்து- சிங்கள மக்களைக் குழப்பி - கிழித்தெறிய வைத்தார்.

அந்தக் கண்டி யாத்திரையின் பெறுபேறாகத்தான் 1958 ஆம்ஆண்டு இந்த நாட்டில் ஓர் இனவெறிக்கலவரம் ஏற்பட்டது.

***கேள்வி:*** தமிழரசுக்கட்சி இனக்கலவரத்தை எதிர்த்து எத்தகைய போராட்டங்களை முன்னெடுத்தது?

***பதில்:*** 1956 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5 ஆம் திகதி முன்னைய நாடாளுமன்றத்துக்கு முன் உள்ள காலிமுகத்திடலில் தமிழரசுக்கட்சி ஒரு மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்தது.

இதில் கிழக்கில் இருந்து பலரும் பங்கு பற்றினர். அதில் நானும் பங்குபற்றினேன். ஆனால், அந்தப் போராட்டம் காடையர்களால் இடையிலேயே கலைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நாட்டின் பல பகுதிகளிலும் கலவரம் உருவானது. தமிழர்கள் கொழும்பிலிருந்து வடகிழக்கு மாகாணங்களுக்குத் துரத்தியடிக்கப்பட்டார்கள். அவர்களின் உடைமைகளும் உயிர்களும் பறிக்கப்பட்டன.

> *தந்தை செல்வா கட்டிக்காத்து வந்த தமிழர் ஒற்றுமை அவரது மறைவுக்குப் பின்னர் படிப்படியாக உடையத் தொடங்கியது.*
>
> *பிரதேசவாதம் கொஞ்சம் கொஞ்சமாகத் தலை தூக்கியது.*
>
> *இலட்சியங்களை மறந்து அவற்றை விட இலட்சங்களையே பெரிதென்று சிந்திக்கத் தொடங்கினர் பின்னைய தலைவர்களில் சிலர்.*
>
> *அதன், விளைவாக மட்டக்களப்புத் தமிழர்களுக்கும் வட மாகாணத் தமிழர்களுக்கும் இடையே பேதங்கள் ஏற்பட்டன.*

### வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம்

இந்த நிலையில் வடக்கு-கிழக்கு தமிழர்களின் தாயகம் என்பது அன்றே ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகவே, தமிழர்களுக்குப் பாதுகாப்பான இடம் வடக்கு-கிழக்குத்தான். எனவே, இந்த வடக்கு-கிழக்கை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எங்களிடம் தான் இருக்கிறது. 1962 ஆம் ஆண்டு தந்தை செல்வா தலைமையில் ஒரு சத்தியாக்கிரகம் நடந்தது. மட்டக்களப்பு மாவட்டத்திலும் அந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்தினோம்.

### தமிழ் தபால் சேவை!

தமிழரசுக்கட்சி அரசுக்கு எதிராக தனித் தமிழ் தபால்சேவை ஒன்றை ஆரம்பித்தது. தமிழரசுக்கட்சியின் சின்னம் பொறித்த முத்திரை வெளியிடப்பட்டது. அந்தத் தபால் சேவை வெற்றிகரமாக நடைபெற்றது. காலப் போக்கில் தமிழ்மக்களின் சமஷ்டிக் கோரிக்கை தனிநாட்டுக் கோரிக்கையாக வளர்ச்சியடைந்தது. தனிநாட்டுக் கோரிக்கைகளைப் பற்றி 1958 ஆம் ஆண்டு நான் எழுதிய நூலில் பகிரங்கமாகவே குறிப்பிட்டிருக்கிறேன்.

அதாவது இலங்கையில் தமிழ் மக்களின் சுதந்திர வாழ்வு தனிநாட்டில் தான் ஆரம்பமாகும் என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

### தமிழர் தலைவர்களில் தனித்துவமானவர் தந்தை செல்வா

***கேள்வி:*** தந்தை செல்வாவுடன் மிகவும் நெருங்கிப் பழகியவர்களுக்குள் நீங்களும் ஒருவர். அந்தவகையில் தந்தை செல்வா குறித்த உங்களின் மனப் பதிவு என்ன?

***பதில்:*** இலங்கையில் வாழ்ந்த தமிழ் தலைவர்களில் தந்தை செல்வா தனித்துவமானவர்.

அப்போதைய தமிழர் தலைவர்கள் இலங்கைத் தமிழர்களை பிரதேச ரீதியாகப் பிரித்து தமது இலாபத்தைக் கருதிக்கொண்டிருந்தார்களே தவிர இலங்கைவாழ் தமிழர்கள் எல்லோருமே ஒரே இனத்தவர்கள் - உறவினர்கள் - என்று கருதவில்லை. ஆனால் தந்தை செல்வா மட்டும்தான் இலங்கையில் வாழ்ந்த தமிழர்கள் அனைவருமே தமிழர்கள்தான் என்றும் அவர்களுக்கென்று ஒரு தனித்துவமான ஆட்சியுரிமை வேண்டும் என்றும் உறுதியாகக் கூறினார்.

தமிழ்மொழி இந்த நாட்டின் ஆட்சி மொழியாக இல்லையென்றால் ஒரு காலமும் இங்கு தமிழர்கள் இருக்க முடியாது போய் விடும் என்ற காரணத்தால் தமிழ் மொழி ஆட்சி மொழியாக்கப்பட வேண்டும் என்று கோரி சிங்கள அரசியல் தலைவர்களோடு போராடினார்.

### பிரதேசவாதத்துக்கு இடம்கொடுக்காத தந்தை

***கேள்வி:*** தமிழரசுக்கட்சி தமிழ்ப்பிரதேசம் எங்கும் செயற்பட்டது. அப்போது கட்சிக்குள் பிரதேச வாதங்கள் எழுந்தனவா?

***பதில்:*** பிரதேசவாதச் சிந்தனைகள் ஏதுமற்று ஒட்டுமொத்த தமிழர்களையும் ஒரே நோக்கில் வழிநடத்தியவர் தந்தை செல்வா. அவர் தான் தலைமை வகித்த தமிழரசுக் கட்சியிலும் பிரதேசவாதத்தை துளிர்க்க விடவில்லை.

மட்டக்களப்புத் தமிழர்கள், யாழ்ப்பாணத் தமிழர்கள்வேறு பிரதேச தமிழர்கள் என்ற எந்த விதமான வேறுபாடுகளும் இன்றி ஈழத்தமிழர்கள் அனைவரையும் ஒரே குடையின் கீழ் அணி திரட்ட வேண்டும் என்று அவர் பாடுபட்டார். அவரது அந்தக் கொள்கை தான் எம்மை அவர் பால் ஒன்றுபட வைத்தது.

'பிரதேச வாதம்' என்ற குறுகிய சிந்தனையை விட 'தமிழர் உரிமை' என்ற பரந்துபட்ட சிந்தனையே தந்தை செல்வாவிடம் இருந்தமையால் அவரது வழிநடத்தலில், அவரின் தொண்டர்களாக இருந்து அரசியல் பணி செய்த எவருக்கும் பிரதேச வாதம் என்ற எண்ணமே ஏற்பட்டிருக்கவில்லை.

அதனால்தான் தந்தை செல்வாவின் வழியில் வடக்கு - கிழக்கின் சகல பகுதிகளிலும் வாழ்ந்த மக்களும் ஒன்றிணைந்தார்கள். தமிழர்கள் அனைவருமே தமது தலைவராகத் தந்தையை ஏற்றுக்கொண்டார்கள்.

### இலட்சியங்களை மறந்து இலட்சங்களுக்காக....

***கேள்வி:*** தந்தை செல்வாவின் மறைவுக்குப்பின்னர் நிலைமை எப்படியிருந்தது?

***பதில்:*** தந்தை செல்வா கட்டிக்காத்து வந்த தமிழர் ஒற்றுமை அவரது மறைவுக்குப் பின்னர் படிப்படியாக உடையத் தொடங்கியது.

பிரதேசவாதம் கொஞ்சம் கொஞ்சமாகத் தலை தூக்கியது.

இலட்சியங்களை மறந்து அவற்றை விட இலட்சங்களே பெரிதென்று சிந்திக்கத் தொடங்கினர் பின்னைய தலைவர்களில் சிலர்.

அதன், விளைவாக மட்டக்களப்புத் தமிழர்களுக்கும் வடமாகாணத் தமிழர்களுக்கும் இடையே பேதங்கள் ஏற்பட்டன. தந்தை செல்வாவின் இறப்போடு அந்தப் பேதம் தலைகாட்டியது.

### பிரதேச வாதத்தை மீண்டும் ஒழித்தவர் தலைவர் பிரபா

அப்போது ஏற்பட்டிருந்த பிரதேசவாதங்கள் யாவும் பின்னர் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் காலத்தில்தான் துடைத்தெறியப்பட்டன.

''தமிழர்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று தந்தை செல்வா ஒரு தடவை கூறியிருந்தார்.

நான் நினைக்கிறேன் தந்தை செல்வா கூறிய அந்தக் கடவுள் எமது தேசியத் தலைவர் பிரபாகரனாகத்தான் இருக்க முடியும்.

ஒட்டுமொத்த தமிழினத்துக்கான சுதந்திரம் என்பது தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடாகத் தான் கிடைக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்கமுடியாது. தலைவர் பிரபாகரனின் காலத்தில் தமிழினத்துக்கு விடிவு கிடைக்கவில்லையென்றால் இன்னும் நூறுவருடங்களுக்குப் பிறகும் அத்தகையதொரு விடுதலை சாத்தியமே இல்லை.

பிரதேச வாதங்கள் எவையும் இல்லாமல் தமிழ்த்தேசியத்துக்காக போராடுகின்றவர்களாக விடுதலைப்புலிகள் இருக்கின்றார்கள்.

இந்த நிலையிலும் தமிழர்களிடத்தில் பிரதேச வாதச் சிந்தனைகளை ஒழித்து 'தமிழ்த் தேசியம்' என்ற ஓரணியில் தமிழர்களை தொடர்ந்தும் கட்டிக்காக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் தலைவர் பிரபாகரனுக்கே இருக்கின்றன. அதனை, அவர் சரிவரச் செய்வார் என்பதில் எந்தச் சந்தேகமும் இருக்க முடியாது.

***கேள்வி:*** நீங்கள் கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர். அந்த வகையில் சமீபத்தில் கிழக்கில் ஏற்பட்ட கசப்பான சம்பங்கள் பற்றிய மக்களின் நிலைப்பாடு எப்படியிருக்கிறது?

***பதில்:*** கிழக்கு மாகாண மக்கள் தமிழில் மிகுந்த பற்றுடையவர்கள். தமிழே தங்களின் உயிராகவும் கலாசாரமாகவும் நினைத்து என்றுமே தமிழுக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்.

தமிழர்களுடைய பல போராட்டங்களை முன்னின்று நடத்திய பெருமையும் அவர்களுக்கு உண்டு. 1958 ஆம் ஆண்டு அம்பாறையிலும் கிழக்கின் ஏனைய பகுதியிலும் வெடித்த இனக்கலவரங்களை அடக்குவதற்கு அன்றே ஆயுதம் தூக்கியவர்கள் கிழக்கிலுள்ள தமிழர்கள். எனவே, அவர்களின் தமிழ் உணர்வையோ தேசியப் பற்றையோ யாரும் குறை கூறமுடியாது.

செவ்வி கண்டவர்
**அலங்காரன்**

இருந்தாலும் இப்போது நடந்த சில கசப்பான சம்பவங்களை ஒட்டுமொத்த கிழக்கு மக்களையும் பாதித்துவிட்டன.

தமிழர்களே தமிழர்களோடு பிரச்சினை ஏற்படுத்தி வளர்த்துக்கொண்டதையிட்டு கிழக்கு மாகாண மக்கள் அனைவருமே இப்போது வெட்கப்படுகின்றார்கள். தமிழ்தேசியத்துக்காக எவ்வளவோ விலை கொடுத்து நாங்கள் போராடிக்கொண்டிருக்கிறோம்.

ஒட்டு மொத்த தமிழினத்தையும் இந்த நாட்டின் உரிமையற்றவர்கள் என்று பேரினவாதிகள் கூறிக்கொண்டிருக்கின்றபோது - அதற்கெதிராக ஒற்றுமையுடன் செயற்பட்டு வெற்றியடைய வேண்டிய காலகட்டத்தில் - சில குறுகிய நோக்கங்களைக் கோரிக்கையாக்கி ஒற்றுமைப் பலத்தை உடைப்பதென்பது எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

மொத்தமாக தமிழர்கள் அனைவரும் தமக்குள் இருக்கின்ற பகைமைகளை - வேறுபாடுகளை - மனக்கசப்புக்களை மறந்து போராடி தமிழ்த் தேசியத்தை மீட்ட பின்னர் அவரவர் தங்கள் பங்குகளுக்காகப் போராடுவதை - குரல்கொடுப்பதை - வரவேற்கலாம். ஆனால், இப்போதைய நிலையில் ஒவ்வொரு காரணங்களை முன் வைத்து குழப்பம் செய்வது முறையானதல்ல; அதனைக் கிழக்கு மக்கள் ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

இன்னும் கிழக்கு மாகாணத்து மக்களிடம் தமிழ்த் தேசியத்துக்காக மாறுபட்ட கருத்து இல்லை. ஒரு சிலர் வேறுபட்ட கருத்துடையவர்களாக இருந்தாலும் அவர்களை வைத்துக்கொண்டு மட்டக்களப்பு மக்களை எடைபோடக்கூடாது என்பதே எனது கருத்து.

தமிழினத்தின் விடுதலைக்காக கிழக்கு மக்கள் தேசியத்தலைவரின் வழியில் தொடர்ந்தும் அணிதிரள்வார்கள் பங்கெடுத்துக்கொள்வார்கள். (முற்றும்)



# மருதனார்மடத்தில்

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜி அவர்களின் வாழும் கலைப் பயிற்சி இலவச அறிமுக உரை

நாள்:- 24-10-2005 திங்கட்கிழமை மாலை 6 மணி
இடம்:- இராமநாதன் கல்லூரி. கே.கே.எஸ். வீதி. மருதனார்மடம்.
பயிற்சி நாள்கள்:- 25.10.2005 முதல் 30.10.2005 வரை
பயிற்சி நேரம்: மாலை 6 மணி முதல் 8 மணி வரை

மேலும் தொடர்புகளுக்கு: 0779059549, 0776160214

*அன்பில் மலருங்கள்* *உங்களை உணருங்கள்*
*அனைவரும் வருக!*

www.artofliving.org www.srisriravishankar.org


# சைவத்திருமுறை விழா

சைவத்திருமுறை விழா எதிர்வரும் 28ஆம் திகதி பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இவ் விழாவின் ஆரம்பத்தில் சைவத்திருமுறை ஏடுகள் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலில் இருந்து ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு சங்கானைக் கல்விக்கோட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளன. (202-28)

# மருந்து கையளிப்பு

நல்லூர், ஒக்.23

கனடா, நெடுந்தீவு பழைய மாணவர் மன்றத்தின் நெடுந்தீவுக் கிளையின் பிரதிநிதி எஸ்.கோபாலசிங்கம் நெடுந்தீவு மாவட்ட வைத்திய நிலையத்தின் வைத்திய அதிகாரியிடம் ரூபா 10 ஆயிரம் பெறுமதியான மருந்துப் பொருள்களைக் கையளித்துள்ளார்.(8-111)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா /ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை மாணவியும்
திரு.திருமதி துரைநாயகம் தம்பதியரின் அன்புப் புதல்வியுமாகிய
**செல்வி லக்ஷிகா**

2005ஆம் ஆண்டு 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 68 ஆம் இடத்தைப் பெற்று சித்தியடைந்தமைக்காக அவரைப் பாராட்டுவதுடன் அவர் சித்திபெற வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:-
**பெரியம்மா, அண்ணா** கொக்குவில் மேற்கு.

(41718)(26.19.11)



## முகவர் தேவை

இலங்கையில் NOKIA கையடக்கத் தொலை பேசிகளினை இறக்குமதி செய்து விநியோகிக்கும் Softlogic நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்தில் முகவர் தேவை.

மேலதிக விவரங்களிற்கு

**GRAND MOBILE**
No. 68/1, 2nd Cross Street,
VAVUNIYA.
T.P.: 0244920177
071 4181600
(Sale Authorized distributor - softlogic)

(C/45868)(26.11.19)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்


வி. நிஷாந்தன் B.Com


ஸ். யூடித்ராணி B.A


சி. றஜனி B.A


பெ. அன்ரனிஸ்ரா B.A


எ. காண்டீபன் B.B.A


தி. அஜந்தன் B.A

24-வது பொதுப்பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற பாஷையூரைச் சேர்ந்த மாணவர்களை பாராட்டுவதோடு மேலும் கல்வியில் உயர்வடைய வாழ்த்தி நிற்கின்றோம்.

வாழ்த்துவோர்
*பாஷையூர் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.*
*பாஷையூர் கல்வி. கலை. விளையாட்டு அபிவிருத்திச் சங்கம்*
*— (ஜேர்மன் சங்கம்)*



Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V | Swiss Labour Assistance SAH | solidar An INGO consortium including NPA, SAH and ASB

## கூறுவிலை கோரல்

செம்பியன்பற்று வடக்கிலேயோ அல்லது வத்திராயனிலேயோ (வடமராட்சி கிழக்கு) சுனாமியால் அழிக்கப்பட்ட வீடுகளை மீளப் புனரமைத்தல்

ஏ.எஸ்.பி. என்.பி.ஏ. மற்றும் எஸ்.ஏ.எச். ஆகிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமாகிய சொலிடாரினால் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செம்பியன்பற்று வடக்கிலும் வத்திராயனிலும் சேதமாக்கப்பட்ட வீடுகளை மீண்டும் புனரமைப்பதற்காக சீல்வைக்கப்பட்ட கூறுவிலைப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறீர்கள். பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் 20 தொடக்கம் 50 வீடுகள் தத்தமது தராதரத்துக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு கட்ட விரும்புவோரை இதில் பங்களிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஒப்பந்தகாரர்கள் கூறுவிலைப் பத்திரங்களையும் சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் கீழ்க்காணும் முகவரியில் ரூபா 3000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி கூறுவிலை விண்ணப்பப்படிவங்களும் ஆவணங்களும் 26.10.2005 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

**Solidar / ASB Construction Office**
**160, Mile Post,**
**Farm Point,**
**A-9 Road,**
**Paranthan.**
**தொலைபேசி:021 228 5147**

(சி/45860) (24-26-11-19)


# சிரமதானம்

இடைக்காடு வீதியோரங்கள் கிராம மக்களின் பங்களிப்புடன் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுகிறது.

மேற்படி கிராமத்தின் வீதிகள் இருமருங்கிலும் பற்றைகள் வளர்ந்திருந்தன. கிராம மக்கள் ஒன்றிணைந்து இரு மருங்கிலும் இருந்த பற்றைகள், செடிகள் என்பவற்றை வெட்டித் துப்புரவு செய்து வருகின்றனர்.(ஒ-ரி-202)


## தேவை
## Despatch Clerk

*கொழும்பிலுள்ள நிறுவனமொன்றின் விநியோகப்பகுதியில் கடமையாற்ற விநியோக லிகிதர்கள் தேவை. 20-35 வயதிற்கிடைப்பட்ட, G.C.E. O/L சித்தியடைந்த, மோட்டார் சைக்கிள் லைசென்ஸ் உடைய சுறுசுறுப்பான இளைஞர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 28.10.2005 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும். கொழும்பில் தங்குமிட வசதி வழங்கப்படும்.*

*விள.இல. 2725,*
**C/O உதயன்,**
**யாழ்ப்பாணம்.**

(C/45865)(42.15.45)



Computer Training
எல்லா இடங்களிலும் !!! எம்மிடம் கூட!! ஆனால்.....



உள்ளிருந்து வெளியே

- Diploma in Programming
- Diploma in Web Development
- Diploma in Digital Designing
- Diploma in Video Editing
- Diploma in Computer Studies
- GIT(For A/L Students)
- Computer Studies For Students (Year 6- O/L)

*New Batches commence on 29.10.2005*

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை ! பதிவுகளுக்கு இன்றே...

**Speed Information Technology Net**
72/28,Panikkar Lane, Off Palaly Road,Thirunelvely,Jaffna
e-mail: info@speeditnet.com URL: http://www.speeditnet.com Hotline: 0777 563213



# IMMEDIATE VACANCY

solidar An INGO consortium including NPA, SAH and ASB

## Position: Field Monitors (4 Positions)

Solidar is a consortium of organizations of 12 European countries that supports a broad portfolio of projects. The Solidar network in Srilanka comprises of three international NGOs - Arbeiter Samariter Bund (ASB), Norwegian People's Aid (NPA) and Swiss Labour Assistance (SAH).

Under the Village Rehabilitation and Development Physical Infrastructure Program, Solidar will be implementing the construction of more than 1000 permanent houses for Tsunami affected families in Vadamarachchi East.

The Field Monitors will follow up the daily progress of construction on site, He/She will be responsible for assuring quality control of the construction works carried out by the subcontractors and prepare daily reports to the technical officer.

Interested candidates MUST posses the minimum requirements stated below. Please send in your applications to reach us on or before 27 th October 2005.

**Qualifications:**

* A Civil engineering/architecture degree with a minimum of one year construction experience.
* Or a NDT or NCT with minimum 2 years construction supervion experince.
* Or a background in construction supervision with minimum 6 years experience.
* Knowledge in English language is essential.
* Should be computer literate (Microsoft Word and Excel)

**Solidar,**
**No.156, Jaffna Road,**
**Paranthan.**

Norwegian People's Aid | ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. | Swiss Labour Assistance SAH



## அந்தியேட்டி அறிவிப்பும், நன்றி நவிலலும்

தோற்றம் 06 - 03 - 1955



மறைவு 23 - 09 - 2005

## அமரர்
## கனகலிங்கம் மகாலிங்கம்

கடந்த 23-09-2005 அன்று இறைவனடி சேர்ந்த யாழ்.அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நோர்வேயில் வசித்து வந்தவருமான கனகலிங்கம் மகாலிங்கம் அவர்களின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டும், அனைத்துப் பாகங்களில் இருந்தும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றிகள்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இன்று (23-10-2005) ஞாயிற்றுக்கிழமை அந்தியேட்டி நிகழ்வு நோர்வேயில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறியத்தருகின்றோம்.

***மனைவி, பிள்ளைகள், சகோதரிகள், உறவினர்கள்*** (நோர்வே)
தொ.பே.0047 67415243

(41786)(26-11-19)



# இலங்கை, இந்திய ரசிகர்களுக்கு விருந்தாகும் கிரிக்கெட் தொடர்

இலங்கை - இந்திய கிரிக்கெட் ரசிகர்களுக்கு அடுத்துவரும் இருவார காலம் கொண்டாட்டம்தான். இலங்கைக் கிரிக்கெட் அணி இந்தியாவில் 7 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளதே இதற்குக் காரணம்.

இப்போட்டித் தொடரில் இரு அணிகளுமே முழுப்பலத்துடன் ஆடியாகவேண்டிய கட்டாயம். இலங்கையில் இடம்பெற்ற போட்டியில் இந்திய அணியை மண்கவ்வ வைத்தது இலங்கை அணி. சொந்தக் களத்தில் மட்டுமல்ல, வேறு களங்களிலும் சிறப்பாகவே ஆடுவோம் என்று இலங்கை அணி நிரூபிக்க முயற்சிக்கும். சமீபகாலமாக பலமான அணிகளுக்கு எதிராகத் தோற்று பங்களாதேஷ் அணியை மட்டுமே வென்று தள்ளாடுகிறது இந்திய அணி. போதாக்குறைக்கு அணித் தலைவர் தெரிவில் சர்ச்சை வேறு. இந்தியப் பத்திரிகைகளோ கடுமையாக விமர்சிக்கின்றன. இந்த நிலையில் இலங்கையுடனான தொடரைக் கைப்பற்றியே ஆகவேண்டிய கட்டாயம் இந்திய அணிக்கு. இந்த நிலையில்தான் முதல்ஒருநாள் ஆட்டம் நாளை மறுதினம் ஆரம்பமாகிறது.

இத்தொடரில் பங்கேற்கும் இலங்கை அணியின் பலம் துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு ஆகிய மும்முனைகளிலும் சிறப்பாகவே உள்ளன. அத்துடன் ஒருங்கிணைத்து ஆட்டத்தை வெளிப்படுத்துவது இலங்கை அணியின் தனி அம்சமாகும். இந்த வகையில் இலங்கை அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளதாகக் கருதப்படுகிறது.

இலங்கையின் துடுப்பாட்டம் ஆரம்பம் முதல் மத்திய வரிசைவரை மிகவும் பலமாகவுள்ளது. குறிப்பாக குமார் சங்கஹாரா அண்மையில் இடம்பெற்ற சுப்பர் சீரிஸ் போட்டித் தொடரில் ஏனைய வீரர்களைவிட சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். அதனை இந்திய அணியுடனான போட்டிகளிலும் வெளிப்படுத்துவார் என்று நம்பலாம்.

அதேபோல சகலதுறை ஆட்டக்காரரான சனத் ஜெயசூரிய இலங்கை அணியின் நம்பிக்கையான நட்சத்திரம். அவர் துடுப்பாட்டத்தினால் மட்டுமல்லாது பந்துவீச்சு மற்றும் களத் தடுப்பிலும் எதிரணியை அச்சுறுத்தக் கூடியவர். அணி இக்கட்டான நிலையில் இருக்கும்போது துடுப்பாட்டத்தில் அசத்துவது போல பந்து வீச்சிலும் எதிரணியின் ஓட்ட எண்ணிக்கைகளைக் கட்டுப்படுத்தி அசத்த வல்லமை பொருந்தியவர். அதேபோல அணித் தலைவர் அத்தப்பத்து, மஹலே, டில்சான், ரசல் ஆர்னல்ட் மற்றும் உபுல் என துடுப்பாட்ட வரிசை பலமாகவுள்ளது.

இலங்கையின் பந்து வீச்சு வரிசையும் பலமானதாகவே உள்ளது. வேகப்பந்து வீச்சாளர்களான சமிந்தவாஸ், தில்ஹார பெர்ணான்டே, நூவன சொய்சா ஆகியோரும் மாயா ஜால சுழற்பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரனும் அணியில் இடம்பெற்றிருப்பது அணியின் பலத்தை மேலும் அதிகரிக்கின்றது.

இந்திய அணியின் துடுப்பாட்டமும் குறை கூறுவதற்கில்லை. வீரேந்தர் செவாக், சச்சின் டென்டுல்கர், ராகுல்ராவிட், டோனி, யுவராஜ் சிங் என இந்திய அணியின் துடுப்பாட்டம் பலமாக உள்ளது. ஆனால், அவ்வணியின் பந்து வீச்சும், களத்தடுப்பும் மிகவும் மோசம்.

இதில் இந்திய அணியின் அண்மைக் கால பெறுபேறுகள் திருப்தியானவையாக இல்லை. அண்மையில் இலங்கையில் இடம்பெற்ற தொடரின் இறுதியாட்டத்திலும், சிம்பாப்வேயில் இடம்பெற்ற முக்கோணத் தொடரின இறுதியாட்டத்திலும் பரிதாபகரமான தோல்வியைத் தழுவியது இந்திய அணி.

இருந்தாலும் இத்தொடர் இந்திய மண்ணில் இடம்பெறுவதினாலும், முழங்கையில் மேற்கொண்ட சத்திர சிகிச்சை காரணமாக நீண்ட காலமாக அணியில் இடம்பெறாதிருந்த நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டென்டுல்கர் அணிக்குத் திரும்பியிருப்பதும் இந்திய அணிக்குப் புதுத் தெம்பை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு சர்ச்சைகளின் பின்னர் அணித் தலைவராக களமிறங்கும் ராகுல் ராவிட் பல போட்டிகளுக்கு இந்திய அணிக்கு தலைமை ஏற்றிருந்தாலும் போட்டித் தொடர் முழுவதற்கும் தலைவராகச் செயற்படுவது இத் தொடரில் மட்டுமே. எனவே தனது தலைமைப் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகப் பல உத்திகளைக் கையாண்டு அணியை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு உண்டு.

இவ்விரு அணிகளுக்குமிடையில் இடம் பெறவுள்ள 7ஆவது ஒரு நாள் போட்டிகளின் விவரம் வருமாறு:-

முதல் ஒருநாள் போட்டி நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நாக்பூரில் ஆரம்பமாகிறது. அதனைத் தொடர்ந்து இரண்டாவது ஒரு நாள் போட்டி எதிர்வரும் 28ஆம் திகதி மொகாலியிலும், 3ஆவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி ஜெய்ப்பூரிலும், 4ஆவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 3ஆம்திகதி புனேயிலும், 5 ஆவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி அகமதாபாத்திலும், 6ஆவது போட்டி 9ஆம் திகதி ராஜ் கோட்டிலும், இறுதியும் 7ஆவதுமான போட்டி 12ஆம் வதேதராவிலும் நடைபெறவுள்ளன.



இப் போட்டிகளின் பங்குபற்றும் இலங்கை அணிவீரர்கள் மார்வன் அத்தப்பத்து (தலைவர்); மஹேல ஜெயவர்த்தன (துணைத் தலைவர்), குமார் சங்ககார, டில்சான், உபுல் தாரங்க, சமரவீர, சமிந்தவாஸ், உபுல் சந்தன, மஹ்றூப், ஆர்னோல்ட், தில்கார பெர்னாண்டோ, முத்தையா முரளிதரன் மற்றும் நூவன் சொய்சா.

இந்திய அணி வீரர்கள்:-

ராகுல் ராவிட் (அணித்தலைவர்), வீரேந்தர் செவாக் (துணைத்தலைவர்), சச்சின் டென்டுல்கர், மோனி, யுவராஜ்சிங், இர்பன் பதான், அஜித் அகார்கர், ஹர்பஜன் சிங், முரளிகார்த்திக், ஜே.பி. யாதவ், ஸ்ரீசந்த், ஆதர்.பி.சிங் மற்றும் கௌதம் காம்பீர்.




## உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி



உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி அடுத்த வருடம் ஜேர்மனியில் நடைபெறவுள்ளது. இறுதியாக நடைபெற்ற போட்டியில் பிரேஸில் உலகக் கிண்ணத்தை தன் வசமாக்கிக்கொண்டது.

எதிர்வரும் உலகக் கிண்ணப் போட்டியில் வெற்றிபெற உதை பந்தாட்டத்தில் ஈடுபடும் நாடுகள் பகீரதப் பிரயத்தனம் மேற்கொண்டுவருகின்றன. தற்போது தகுதிகாண் சுற்றுப் போட்டிகள் கண்டங்கள் ரீதியாக நடைபெற்று இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன.

இதில் பல முன்னணி நாடுகள் புறந்தள்ளி சிறிய நாடுகள் இடம் பிடித்துள்ளன. அதுமட்டுமல்லாது பல அணிகள் இம்முறை புதிதாகத் தகுதி பெற்றுள்ளன. முன்னாள் உலக சம்பியன்களான பிரான்ஸ், இத்தாலி, பிரேஸில் மற்றும் இங்கிலாந்து என்பன உலகக் கிண்ணப் போட்டிக்குத் தகுதி பெற்றுவிட்டன. இந்தத் தகுதிகாண் சுற்றுப்போட்டியில் உலகக் கிண்ணத் தொடரில் இடம்பெற்றிருக்காத அணிகளான ஆபிரிக்க நாடுகளான அங்கோலா, காணா, டோக்கோ, ஐவரிகோஸ்ட் ஆகிய நான்கு நாடுகளும் இம்முறை தகுதிபெற்றுள்ளன.

இவைதவிர போலந்து, நெதர்லாந்து, குரேசியா, பராகுவே, ஜப்பான், ஈரான், தென்கொரியா, சவூதி அரேபியா, ஆர்ஜன்ரீனா, பிரேஸில், அமெரிக்கா, மெக்ஸிக்கோ, உக்ரைன், சுவீடன், சேர்பிய அணி, அடரினடாட் மற்றும் உருகுவே ஆகிய அணிகளும் அடுத்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## சர்ச்சையால் மகிழும் சானியா



சர்ச்சை பலருக்கும் சங்கடமான ஒன்றாகவே உள்ளது. ஆனால், இந்திய ரெனிஸ் வீராங்கனை சானியாமிர்சாவுக்கு சர்ச்சைகள் மகிழ்ச்சியளிக்கின்றனவாம்.

அவர் இது பற்றித் தெரிவித்துள்ளதாவது:-

தாய்லாந்து பகிரங்க ரெனிஸ் தொடரில் காயம் காரணமாக இரண்டாவது சுற்றிலே வெளியேறியது மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. அப்போது, முதல் செற்றில் பின்தங்கியிருந்ததால் அதிக 'ரிஸ்க்' எடுத்து விளையாடினேன். இதனால் முதுகுவலி ஏற்பட்டது. நல்லவேளை, இந்தக் காயம் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. தற்போது, முழு உடல் தகுதி பெறுவதுதான் முதல் நோக்கம். இதற்காக அதிகநேரம் உடற்பயிற்சிக்காக செலவிடுகிறேன்.

இந்திய ஊடகங்கள் விளையாட்டுத் துறையில் பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்துகின்றன. சமீப காலமாக ரெனிஸில்கூட, குறைகளைக் கண்டுபிடித்து நிறைய சர்ச்சைகள் எழுப்பியுள்ளனர். இது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. ஏனெனில் இதன் மூலம் இந்திய விளையாட்டுத் துறை மேலும் வளர்ச்சி பெறும் என்பது எனது கருத்து. சில ஆண்டுகளுக்கு முன் எங்களையெல்லாம் கண்டுகொள்ளவே ஆள் இல்லை. ஆனால், இப்போது போட்டியின்போது சின்னத்தவறு செய்தாலும் உடனே அது ஊடகங்களில் பிரதிபலிக்கிறது. இதனால் அதிக நெருக்கடி ஏற்பட்டாலும் இதைத்தான் விரும்புகிறேன். இதேநிலை நீடிக்குமானால் இந்தியாவும் விளையாட்டுத் துறையில் அசுர வளர்ச்சி பெறுவது உறுதி - என்றார் அவர்.

மக்கள் பலத்தில்...

உதயன்

20 ஆண்டு சேவைப் பூர்த்தியை முன்னிட்டு

அகில இலங்கை மட்டத்திலான

சிறுகதைப் போட்டி

போட்டி நிபந்தனைகள்

* சிறுகதைத் துறையில் ஆர்வமுள்ள நாட்டின் எப்பகுதியைச் சேர்ந்தவராக இருப்பினும் ஆண், பெண் இருபாலாரும் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.
* இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு வயதுக்கட்டுப்பாடு எதுவும் இல்லை.
* ஒருவர் எத்தனை சிறுகதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம். ஆனால், அவை தனித்தனியான கடித உறைகளில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
* சிறுகதைகள் A4 அளவுத்தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு சிறுகதையும் A4 அளவுத்தாளில் 4 பக்கங்களுக்கு மேற்படலாகாது.
இது ஒரு திறந்தபோட்டியாகும். எழுத்தாளர்களின் கற்பனைத் திறனுக்கேற்ற வகையில் சிறுகதைகள் அமையலாம். சிறுகதைகள் சமகால சமூக, பொருளாதார, அரசியல் பின்னணி, தாக்கங்கள் என்பவற்றை வெளிப்படுத்துவனவாக அமைதல் விரும்பத்தக்கது.
* போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகளை மீளப்பெற்றுக்கொள்ள இயலாது. பரிசுக்குரிய சிறுகதைகள் இதற்கென நியமிக்கப்படும் நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படும். சிறுகதைகள் முற்றிலும் கற்பனைக் கண்ணோட்டத்தில் அமைவனவாயிருத்தல் வேண்டும்.
* தனிப்பட்ட சம்பவங்களை அல்லது தனிப்பட்ட நபர்களை விமர்சிப்பவையாக அமைதல் ஆகாது.
தெரிவுசெய்யப்படும் முதல்மூன்று சிறுகதைகளுக்கும் கீழ்க்காணும் வகையில்
* பரிசில்கள் வழங்கப்படும்.



முதலாவது பரிசு : தங்கப்பதக்கமும் 10,000 ரூபா பணமும்
இரண்டாவது பரிசு : தங்கப்பதக்கமும் 5,000 ரூபா பணமும்
மூன்றாவது பரிசு : 5,000 ரூபா

* பிரசுரத்துக்குத் தகுதியானவையாகக் கருதப்படும் சிறுகதைகள் உதயனிலும் எமது சகோதரப் பத்திரிகையான சுடர்ஒளியிலும் தொடர்ந்து பிரசுரிக்கப்படும்.
* போட்டிக்கு அனுப்பப்படும் சிறுகதைகள் இதற்கு முன்னர் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ எந்தவொரு பத்திரிகையிலோ சஞ்சிகையிலோ பிரசுரிக்கப்பட்டிருக்கக்கூடாது. ஏற்கனவே வானொலியில் ஒலிபரப்பான, இணையத்தளத்தில் வெளிவந்த சிறுகதைகளை அனுப்புதல் ஆகாது. அவை கிடைக்கப்பெறின் போட்டியிலிருந்து நீக்கப்படும்.
* போட்டிக்குரிய சிறுகதைகளை எதிர்வரும் **நவம்பர் 25ஆம்** திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக

**உதயன்**

**20 ஆவ்து ஆண்டு சிறுகதைப்போட்டி**

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
* "உதயன்",சுடர்ஒளிப் பத்திரிகை நிறுவனங்களில் பணிபுரிபவர்களும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் இப்போட்டியில் கலந்துகொள்ளமுடியாது.
* போட்டி தொடர்பான சகல தீர்மானங்களிலும் பிரதம ஆசிரியரின் முடிவே இறுதியானது.

03.10.2005 முதல் 01.11.2005 வரை
**தீபாவளி மலிவு விற்பனை**
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
SALE SALE SALE SALE
**விசேட கழிவு**
உடனே விஜயஞ்செய்யுங்கள்:
# லைடன் புடைவை நிலையம்
தீபாவளியை முன்னிட்டு, வாடிக்கையாளர்களின் நன்மை கருதி
ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் கடை திறந்திருக்கும்.
**இல.410, ஆஸ்பத்திரி வீதி,**
(பஸ்.நிலையம் முன்பாக), **யாழ்ப்பாணம்.**
222 2381 (சி.45079) (39.18.19.42)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா.இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம்
மகாவித்தியாலய மாணவியும்
திரு.திருமதி சத்தியநேசரூபன் ஞானமலர்
தம்பதியினரின் (மன்னார்) புதல்வியுமாகிய
**செல்வி சகாயவேர்ஜினி**
2005 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப் பரிசில் பர்ட்சையில் 132 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்தியமையைப் பாராட்டுவதுடன் அவர் சித்திபெற ஊக்கமளித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்குக்கும் நன்றி கூறி வாழ்த்துகின்றோம்.

சீந்திப்பந்தல்,
இளவாலை.
வாழ்த்துவோர்:
அப்பப்பா (சந்திரன்),அப்பம்மா (ராணி), சித்தப்பா (றஜீ).
(41757) (39-19-18-42)

## மகா சில்க்ஸ் ஸ்தாபனத்தின் மாபெரும் மலிவு விற்பனை

தீபாவளியை முன்னிட்டு 23.10.2005 முதல் 31.10.2005 வரை மலிவு விற்பனை என்பதனை வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

| வகை | விற்ற விலை | மலிவு விலை |
|---|---|---|
| பட்டோலா | ~~2500~~/= | 1400/= |
| சாறி | ~~1350~~/= | 875/= |
| சோலிகிற் | ~~1150~~/= | 530/= |
| பஞ்சாபி | ~~1425~~/= | 990/= |
| பஞ்சாபி | ~~1250~~/= | 575/= |
| பிளவுஸ் | ~~575~~/= | 375/= |
| பிளவுஸ் | ~~450~~/= | 150/= |
| ஸ்கேட் | ~~575~~/= | 325/= |
| ஸ்கேட் அன் பிளவுஸ் | ~~1050~~/= | 575/= |
| சேட் | ~~675~~/= | 400/= |
| சேட் (சிறியது) | ~~350~~/= | 150/= |
| சோட்ஸ்(சிறியது) | ~~390~~/= | 175/= |
| கவுண் | ~~675~~/= | 300/= |

# மகா சில்க்ஸ்
32,40 , நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(T-45802)(18-19-42)

SCRIPTNETSL

*சமாதானச் சுருள் திரைப்பட பயிற்சித் திட்டம்*
*திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிக்கான*
## தொழில்முறைப் பயிற்சி

ScriptNetSL நிறுவனமானது இலங்கையில் சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய திரைப்படத்துறை ஒன்றை உருவாக்கும் நோக்கத்துடன் பல்வேறுபட்ட பயிற்சித் திட்டங்களிலும் திரைப்பட உருவாக்க முயற்சிகளிலும் ஈடுபட்டுவருகின்றது.

அந்தவகையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தரப்பில் நிலவும் திரைப்படத்துறைசார் ஆள் வளப்பற்றாக்குறையைச் சீர்செய்யும் பொருட்டு தமிழ் மற்றும் முஸ்லிம் கலைஞர்களுக்கான சிறப்பு தொழில்முறைப் பயிற்சித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதுடன் திரைப்படத்துறைசார் வேலைவாய்ப்புக்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக்கொடுக்க முன்வந்துள்ளது.

திரைக்கதை எழுத்து (Screen writing), இயக்கம் (Direction), தயாரிப்பு (Production), தயாரிப்பு முகாமைத்துவம் (Production Management), ஒளிப்பதிவு (Camera), ஒலிப்பதிவு (Sound Recording), ஒப்பனை (Make-up), வேட உடை (Costumes), காட்சி விதானிப்பு (Set Design), ஒளியமைப்பு (Lighting), படத்தொகுப்பு (Editing) ஆகிய துறைகளில் ஏதாவது ஒன்றில் தேர்ச்சி பெற ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

ஒருவார கால முழுநேரப் பயிற்சிப் பட்டறையைத் தொடர்ந்து பயிலுநர்களுக்கு அவர்வர் துறைசார் உதவியாளர்களாகச் சிங்களத் திரைப்பட/ தொலைக்காட்சித் தயாரிப்புகளில் தற்காலிகமாக வேலைசெய்யும் வாய்ப்பு ScriptNetSL நிறுவனத்தினால் ஒழுங்கு செய்துகொடுக்கப்படும்.

**விண்ணப்பதாரிகள்**
21 வயதுக்கு மேற்பட்டவர்களாக 40 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
குறைந்தது க. பொ. த. (சா/த) வரை படித்திருக்க வேண்டும்.
தாம் தேர்வுசெய்யும் துறையை முழுநேரப் பணியாக மேற்கொள்ளும் ஆர்வம் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.
விண்ணப்பத்துடன் தங்கள் சுயவிவரக் கோவையும் இணைக்கப்படல் வேண்டும்.
மேற்குறிப்பிட்ட துறைகளில் ஒருதுறைக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
**Reel Peace Apprenticeship Scheme, ScriptNetSL,**
**46, Vaverset Place, Colombo 06** (41770)(48-18-19)
மின்னஞ்சல் விண்ணப்பங்களுக்கு: scriptnetsl.info@gmail.com
தொலைத்தொடர்பு: 011 5624300
விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதித் திகதி: ஒக்ரோபர் 30,2005

## விளையாட்டு விழா

கோண்டாவில் கிழக்கு கலைமகள் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோண்டாவில் கிழக்கு அரசடிப்பிள்ளையார் கோயில் முன்றிலில் நடபெறவுள்ளது.

ஆசிரியை திருமதி ச.இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபை செயலாளர் பொ.வைரமுத்தும் அவரது பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

கொக்குவில் இராமகிருஸ்ணா வித்தியாசாலை அதிபர் இ.சிவபாதசேகரம், கோண்டாவில் இந்துமகா வித்தியாலய பதில் அதிபர் இ.அருணகிரிவாசன், முன்னாள் அதிபர் செல்வி பா.மார்க்கண்டு, கிராம சேவையாளர்கள் எம்.தயாபரன், எஸ்.வசந்தகுமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.(204)

## பாராட்டு வாழ்த்துகின்றோம்



# பா.கௌதம்

எமது மகன் பா.கௌதம் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியமையையிட்டு அவரைப் பயிற்றுவித்த யா/ மணியகாரன் தோட்டம் (அ.த.க.) பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களுக்கும் கேம்றிஜ் கல்வி நிலைய நிர்வாகி, ஆசிரியர்களுக்கும் வள்ளுவர் ச.ச.நிலைய நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர்களுக்கும் எமது நன்றி கலந்த பாராட்டைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அண்ணாசிலையடி,
கரணவாய்,
கரவெட்டி.
தகவல்:
பெற்றோர்
பஞ்சவர்ணன் - யோகேஸ்வரி.
(41761)(42-18-19)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/கொழும்புத்துறை
இந்து மகா வித்தியாலய
மாணவி
**செல்வி விஜயலக்ஷினி**
**வேலும்மயிலும்**
அவர்கள் புலமைப்பரிசில்
பரீட்சையில்
சித்தியடைந்தமைக்காக
பாராட்டிவாழ்த்துகின்றோம்.
துணாவில். **அக்காமார்.**
(41767) (39-19-18-42)

# அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
SALE ஸ்தாபனத்தாரின் SALE
**தீபாவளி மலிவு விற்பனை**
**15.10.2005 தொடக்கம்**
**31.10.2005 வரை**

| | | |
|---|---|---|
| சைனா சீத்தை | M | 60/= |
| சைனா பப்பிளின் | M | 55/= |
| சலஞ்சர் | M | 60/= |
| பட்டசில்க் | M | 80/= |
| சில்க் பொலிஸ்டர் | M | 60/= |
| ஸ்கேட் & பிளவுஸ் | | 400/= தொடக்கம் |
| சாறிவகைகள் | | 375/= தொடக்கம் |
| சூட்டிங் வெர் | | 200/=தொடக்கம் |
| சேட் வகைகள் | | 350/=தொடக்கம் |

(C/45864)(42-18-19)

# அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
54, பெரியகடை வீதி,யாழ்ப்பாணம்.
T.P: 222 2899

**Panasonic**
ideas for life

# நீர் இறைக்கும் இயந்திரம்

விசேஷ அம்சங்கள்
- சக்திவாய்ந்ததும், பாவனை கூடியதும்
- சத்தம் குறைந்ததும், சக்தி சேமிப்பும்
- வேகம் கூடியது
- பாவனைக்கு இலகுவானது
- வெப்பத்தை தாங்கக்கூடியது



***Model GP-200JA**

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 45 liter/min (Max) |
| உயர வலு | 35 meters (Max) |

***Model GP-125JB**

| | |
|---|---|
| இயந்திரவலு | 125W |
| வெளிப்பாய்ச்சல் வலு | 30 liter/min (Max) |
| உயர வலு | 30 meters (Max) |

***Model A-200JAE**
*(Auto pressure pump)*

| | |
|---|---|
| இயந்திரவலு | 200W |
| அதிகபட்ச வெளிப்பாய்ச்சல் வலு | Max 45 L/min |
| உயர வலு | Ht12m 29 L/min |
| அழுத்த ஆளியுடன் | Max 19 meter |
| அழுத்த ஆளிஇன்றி | Max 35 meters |
| | ON 1.1kgf/cm2 |
| | OFF 1.8 kgf/cm2 |

ஏகவிநியோகஸ்தர்கள்
CAPRICORN®
* ஒரு வருட உத்தரவாதம்
(தயாரிப்பாளர் குறைபாட்டிற்கு மாத்திரம்)
* உத்தரவாதப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளவும்


## கப்ரிகோன் என்ரபிரைசஸ் பிரைவேட் லிமிட்டட்
காட்சி அறை அலுவலகம்:
வெள்ளவத்தை காட்சி அறை : 298 A & B காலி வீதி வெள்ளவத்தை தொலைபேசி: 2582154, 2360919
புறக்கோட்டை காட்சி அறை : 59, மெலிபன் வீதி கொழும்பு 11 தொலைபேசி: 4737443
காலி காட்சி அறை : 04 வாட் வீதி காலி தொலைபேசி: 091-2234104
தலைமை அலுவலகம் 47, டெம்பிளர்ஸ் வீதி கல்கிசை தொலைபேசி: 2735584, 2714631
பெக்ஸ் : 2735586 மின் அஞ்சல் : caprico1@sltnet.lk
- நாடளாவிய ரீதியிலான விநியோகம் -

# தீபாவளி வாழ்த்துக்கள்




ஐடியல் கேட்டின் டெக்கோர் 2005 தீபாவளியை புதுவிதமான டிசைன் களில் உங்கள் இல்லங்களை அலங்காித்து குதூகலமாக கொண் டாட வாழ்த்துகிறது.

அவுஸ்ரேலியாவில் இருந்து இறக் குமதி செய்யும் ( Vertical Blind) வங்கிகள், கணனி காரியாலயங் களுக்கு உடனடியாக செய்து கொடுக்கப்படும்.



## திரைசீலைகள்

நேரடியாக வந்து உங்கள் விருப்பப்படி கைதேர்ந்த தொழிலாளர்கள் மூலம் ஓடருக்கு உடனடியாக செய்து கொடுக்கப்படும்.

**ஐடியல் கேட்டின் டெக்கோர்**

96, மணிக்கூட்டு வீதி , பெருமான் கோயிலடி,யாழ்ப்பாணம்

உடன் தொடர்புக்கு,

**0773013239 , 0777563946**



**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு 3 ஆவது வாரம் சூர்யா, அசின், நயன்தாரா நடித்த

**கஜினி**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30 மட்டும்.



**விசேட விலைக்கழிவு**

யாழ். - கொழும்பு, கொழும்பு - யாழ். விமானப் பயணத்திற்கு விசேட விலைக்கழிவு. (ரூபா 11,000)

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 222 7835



**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு 3 ஆவது ஜவந்திரள் வாரம்

ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த

**மழை** (பிலிம்)

காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00



**மனோகரா** யாழ்ப்பாணம்

பார்த்தீபன், வடிவேலு, லட்சுமிராய் நடித்த

**குண்டக்க மண்டக்க**

காட்சிநேரம்:- 10.30, 2.30, 6.30, 9.30, (பு.நே.)

(அ-45593)


## ஒன்றுகூடல்

ஆசிரியர் நியமனப் போட்டிப் பரீட்சைக் குத் தோற்றியும் நிரந் தர நியமனம் கிடைக் கப்பெறாத அனைத்து பயிலுநர் அல்லாத பட்டதாரிகளையும் தங்களது ஆவணங்களு டன் இன்று ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய முன்றிலில் ஒன்றுகூடு மாறு கேட் கப்பட்டுள்ளது.

(3-9)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு எமிலியானஸ்பிள்ளை

*(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யூனியன் கல்லூரி)*



ஏழாலை மத்தி, ஏழாலையைச் சேர்ந்த முருகேசு எமிலியானஸ்பிள்ளை அவர்கள் நேற்று (22.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானம்மாவின் அன்புக் கணவரும் ஜெயநாதன், ஜெயரட்ணம், நீற்ரா (ஆயுர்வேத வைத்தியர்), ஜெயராஜா, காலஞ்சென்ற ஜெயபாலன் (முன்னாள் ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி), பற்றிமாமலர் (சைவ சன்மார்க்க வித்தியாசாலை), நித்தியானந்தராஜா (ஜசுபி பழரச தொழிற்சாலை, சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்), ஜெயந்தி (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரேசம்மா, அகிலாதேவி, யோகராஜா, லெற்றீசியா, அன்ரனிற்ரா, விக்னராஜா, மேரிறுவீனா, சுகிர்தராஜன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (23.10.2005) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணியளவில் ஏழாலை இசிதோர் ஆலயத்தில் ஆராதனை நடைபெற்றுப் பூதவுடல் ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மத்தி,*
*ஏழாலை.* (41873)(15-45-33)

தகவல்,
**எ.நித்தியானந்தராஜா (மகன்).**

## திருமதி இராசலெட்சுமி தங்கராசா

**(பெற்றி)**



வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலெட்சுமி தங்கராசா 20.10.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கராசா (E.K.T. - பிரபல மில் உரிமையாளர், ஆனைப்பந்தி) அவர்களின் அன்பு மனைவியும் சிவசுதன், திருமதி சிவதர்சனி, சிவநந்தினி ஆகியோரின் பாசமிகு தாயும் மோகன் (கனடா) அவர்களின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 56,பிறவுண் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (41869) (15-45-33)

*தகவல்:-*
*த.சிவசுதன் (மகன்).*

## கந்தையா முத்தையா

(க.மு.சுருட்டுத் தொழிலக உரிமையாளர்)



மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா முத்தையா (க.மு. சுருட்டுத் தொழிலக உரிமையாளர் )அவர்கள் நேற்று (22.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் நல்லையா, சண்முகராசா ஆகியோரின் சகோதரரும் விஸ்வலிங்கம், பரமேஸ்வரி, அன்னலட்சுமி, வள்ளியம்மை, காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2005) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மண்டான் பூவரந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மண்டான்,*
*கரணவாய் மேற்கு,* (41863)(15-45-33)
*கரவெட்டி.*

தகவல்:
**சூரியகுமார்,**
**(மகன்).**

## ஜெறாட் மாசிலாமணி (செல்வம்)

மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வதிவிடமாகவும் தற்போது கரவெட்டியில் வசித்தவருமான ஜெறாட் மாசிலாமணி (செல்வம்) அவர்கள் நேற்று (22.10.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து இரத்தினராசா - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் கிறிஸ்ரினாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றோச்பிலேமேற்திரா (யோகம்) மேரிசறோஜினி மற்றும் அன்ரன் கிறைசிஸ் (பிரதம எழுதுநர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை), ஜோசப்றீக்கிலஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கரவெட்டியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, அவரின் மிருசுவில் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 3 மணியளவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின்னர் பூதவுடல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

(41877)(15-45-33)

*கரவெட்டி வடக்கு,*
*கரவெட்டி (பெற்றோல் செற் லேன்).*

தகவல்:
**அன்ரன் கிறைசிஸ்,**
**(சகோதரன்).**

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



அமரர் கார்த்திகேசு சிதம்பரநாதன்

(முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி விடுதி மேற்பார்வையாளர்)

23.09.2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் திடீர் மறைவின்போது எம் துயரில் பங்குகொண்ட அனைத்து இதயங்களுக்கும் எம் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (23.10.2005) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கரத்தை, வட்டுக்கோட்டை.
தொ.பெ. 0777111441 (குருபோட்டோ வீடியோ நாதன் மணப்பந்தல்). (41870)(15-45-33)

**குடும்பத்தினர்.**


**NEW SCIENCE CENTRE** யாழ். நகர்

CHEMISTRY DAY CLASS

**பிரிவு II**

Mon. 2.30 - 4, Tue. 4-6, Thurs. 2.30 -4.00

இப்பிரிவில் 400 மாணவர்கள் மட்டும் அனுமதி

இப்பிரிவில் அனுமதி பெறுபவர்களிற்காக

1. **ORGANIC** பிரிவு II
   Mon., Fri. 12-1.00
2. **Inorganic** பிரிவு III
   Sat., Sun. 12-1.00
3. **THERMO CHEMISTRY**
   Sat., Sun. 12-1.00
   அயன் சமநிலை Sat., Sun. 11-12

**ஆரம்பம்: 24.10.05 திங்கள் 2.30 P.M.**

BY:- **அன்பழகன்** B.Sc.

(41723)(46)


## மெய்வன்மைப் போட்டி

கோண்டாவில்,ஒக்.23

கோண்டாவில் கிழக்கு கலைமகள் பாலர் பாடசாலையின் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 2 மணியளவில் ஆசிரியர் திருமதி ச.இராஜேந்திரன் தலைமையில் கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார்கோயில் முன்றிலில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசசபைச்செயலாளர் பொ.வைரமுத்துவும் கௌரவ விருந்தினர்களாக கொக்குவில் இராமகிருஷ்ணா வித்தியசாலை அதிபர் இ.சிவபாதசேகரம், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் பதில் அதிபர் இ. அருணகிரிவாசன், கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் பா.மார்க்கண்டு, கிராமசேவையாளர்களான எம்.தயாபரன், எஸ்.வசந்தகுமார், ஆகியோரும் கலந்துகொள்வர்.

(3-49)


Cambrian College of Applied Arts and Technology

# Welcome to the First Canadian campus in Sri Lanka

Cambrian College is the largest College of Applied Arts and Technology, in Northern Ontario, Canada.

## 2nd Intake

We are Now in Canada

**Rs. 60,000/= Limited SCHOLARSHIPS Scheme Available**

Subramaniam Thayananthan



I'm happy to declare that my ambition to study in Canada has fulfilled through Governor's College.

Prasad Rasika Mendis



I have experienced true Canadian education from Governor's College before leaving to Canada for continuing my education.

**Courses Offered**

- HOTEL AND RESTAURANT MANAGEMENT
- TRAVEL AND TOURISM MANAGEMENT
- SOFTWARE ENGINEERING TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION - ACCOUNTING

☑ Complete TWO semester (one year) at Sri Lankan campus, and transfer to CANADA
☑ Free ESL course (English as a second language)
☑ Course fee can be paid monthly (Rs. 15,000/=)
☑ Loan facilities on request
☑ Hostel Facilities

FOR THE SECOND INTAKE
Contact : Niroshini / Kavitha
**Hot Line : 0785 271 337**




# GOVERNOR'S COLLEGE

"COLLEGE CAMPUS"
376, Galle Road , Colombo 03, Sri Lanka.
Tel : +94 11 2375371, +94 11 2375222 Fax : +94 11 2375374

E-mail : governors@sltnet.lk Website : cambrianc.on.ca

Advertise 3384



மீனவர் சங்கப் [illegible]ரதிநிதிகளு[illegible] படையதிகாரிக[illegible]க்கும் இடை[illegible] நேற்று கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடந்த சந்திப்பின்போது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்:- பிரபா)

# அசைக்க முடியாத அரசியல், இராணுவ பலத்துடன் தமிழ் இனம் எழுந்து நிற்கின்றது

## திருமலை எழுச்சி நிகழ்வில் சம்பந்தன் உரை



திருமலை, ஒக்23

அசைக்க முடியாத அரசியல், இராணுவ பலத்துடன் தமிழ் இனம் இன்று எழுந்து நிற்கின்றது. சர்வதேச நியதிப்படி தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

திருமலையில் நேற்று நடைபெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது போராட்டம் இன்று ஓர் இறுதிக் கட்ட நிலையில் நிற்கின்றது. காலங்காலமாக, ஜனநாயக வழியில், சாத்வீக வழியில், ஆயுத வழியில் நாம் எமது உரிமைகளுக்காகப் போராடி நின்றோம். தமிழர்களை எவராலும் அடக்கி ஆள முடியாது என்பதை நாம் இன்று நிரூபித்துள்ளோம். தமிழர்களை அடக்கியாள முடியாது என்பதனைச் சிங்கள தேசமும் இன்று உணர்ந்துள்ளது. ஆனால், நியாயமான தீர்வுகள் கிடைக்கக்கூடாது என்பதில் அது மிக அக்கறையாகவே உள்ளது. ஆனால் சமாதானத்தீர்வு அமையவேண்டும். நாம் இதுவரை இழந்தவைகளை ஈடு செய்யும் வகையில் ஒரு நியாயமான தீர்வு வராது போனால், சர்வதேச சட்டப்படி எமது சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரித்து சர்வதேசம் எமக்கான உரிமைகளை பெற்றுத்தர வேண்டும்.

சர்வதேச சட்டப்படி ஓர் இனத்தின் உரிமைகள் வழங்கப்படாது தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டால் தமக்குரிய சுயநிர்ணய உரிமைகளை நிலைநாட்டி சர்வதேசத்தின் அங்கீகாரத்துடன் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதே வழியாகும். அந்த நிலைக்கு நாம் தள்ளப்பட்டால் எமக்கான சுயநிர்ணய உரிமைகளை நாம் அமைத்துக் கொள்ள வேண்டின், நாம் எல்லோரும் ஓரணியாக, ஒற்றுமையாக, ஒரே குடையின் கீழ் அணி திரள வேண்டும். எமது அரசியல் இராணுவ பலத்தின் முன் எம்மை யாராலும் ஏமாற்றி விட முடியாது - என்றார். (ஐ-3)




ஆனையிறவுக்கும் தட்டுவன்கொட்டிப் பகுதிக்குமிடையே லொறி ஒன்றும் பஸ் ஒன்றும் நேற்று மோதி விபத்துக்குள்ளானபோது....

## பரந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஆனையிறவுக்கும் தட்டுவன்கொட்டிப் பகுதிக்குமிடையே லொறி ஒன்றும் பஸ் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் அவற்றின் ஓட்டுநர்கள் இருவரும் படுகாயமடைந்தனர்.

இந்த இரு விபத்துக்கள் தொடர்பாகவும் தமிழீழ காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-13)


**Personal Class**

Physics - திரு.ம.ஸ்பெல்மன்

| A/L 2006 | A/L 2007 |
|---|---|
| வினா விடை<br>ஆரம்பம்-24.10.2005<br>திங்கள்<br>3.30 – 4.30 PM. | அலைகளும் அதிர்வுகளும்<br>ஆரம்பம்-26.10.2005<br>புதன்4.30–5.30PM. |

(41722)

இடம் - No 18, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P.NO: 0776116724


## சுயநிர்ணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், என்.துரைரட்ணசிங்கம், என்.ரவிராஜ், செல்வி தங்கேஸ்வரி, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றினர்.

சிறப்புரைகளைத் தொடர்ந்து நண்பகல் 12.30 மணியளவில் சட்டத்தரணி கா.சிவபாலன் எழுச்சிப்பிரகடனத்தை வெளியிட்டார்.

தமிழீழத் தேசியத் தலைவரின் உருவப் படங்களைத் தாங்கியபடி திரண்டிருந்த மக்கள் எழுந்துநின்று உரிமைக்கோஷம் முழங்க பிரகடனம் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழ்க் கூட்டமைப்பின் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். சிறுவர்கள், பெண்கள், வயோதிபர் எனப் பல தரப்பினரும் நேற்றைய எழுச்சி நிகழ்வில் திரண்டிருந்ததைக் காணமுடிந்தது.

இந்த எழுச்சி நிகழ்வையொட்டி திருமலை நகர்ப்பகுதியில் கடைகள் மூடப்பட்டுக் கிடந்தன. ஒருவித அசாதாரண நிலைமை காணப்பட்டது. மக்கள் நடமாட்டமும் குறைந்திருந்தது. எனினும் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நிகழ்ந்ததாக அறிவிக்கப்படவில்லை.

(ஐ-3-13-151)

## மீனவருக்கான பாஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் வரை நடைபெற்றது.

படையினர் தரப்பில் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.டி. சுனில் தென்னக்கோன், பிரதிக் கட்டளை அதிகாரி பிரிகேடியர் ரட்நாயக்கா, 52 ஆவது படையணியின் அதிகாரி பிரிகேடியர் ஜெகத் ஜெயசூரிய, 52 ஆவது படையணியைச் சேர்ந்த லெப் டினன்ட் கேணல் பன்னவல, 524ஆவது படை யணியின் கட்டளை அதிகாரி கேணல் அசோகா அமுனுகம, லெப்டினன்ட் கேணல் குலதுங்க, மேஜர் டி.கே.மதநாயக்க, மேஜர் ஏ.க.வகல்ல, எச்.எஸ்.ரட்ணாயக்க, கடற்படையைச் சேர்ந்த லெப்டினட் ஏ.விஜயவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தரப்பில் யாழ்.மாவட்ட கடல் கண்காணிப் புக் குழுவின் தலைவர் பேர்சான்டர் ஸ்காவிக், பிரதித் தலைவர் பிலிப் பக்குஸ் மற்றும் லாஸ் பிளேமன் ஆகியோரும் -

யாழ். அரச அதிபர் மற்றும் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தரப்பில் யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் க. தர்மலிங்கம், யாழ். கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தலைவர் எஸ்.தவரட்ணம், வடமராட்சி வடக்கு கடற்றொழில் சமாச பொதுமுகாமையாளர் சூரியகுமார், நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் ரி.விக்னேஸ்வரன் மற்றும் கடற்றொழில் சமாசத்தைச் சேர்ந்த தனபாலசிங்கம் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் 'பாஸ்' நடைமுறைகள் ஏதுமின்றி சுதந்திரமாக மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதற்கு வசதிசெய்து தரப்படவேண்டும் என்று படை அதிகாரிகளிடம் கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

இதற்குப் படை அதிகாரிகள் திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்தனர். 'பாஸ்' நடைமுறையினை கடற்தொழிலாளர்கள் பின்பற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர். படையினரின் வற்புறுத்தல் காரணமாகப் 'பாஸ்' நடைமுறையினைப் பின்பற்றுவதாக கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகள் சம்மதம் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. எனினும்-

'பாஸ்' வழங்கும் நடைமுறையை துரிதமாக மேற்கொள்ள வசதி செய்யப்படவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை படை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டனர்.

வடமராட்சி, பருத்தித்துறை, காரைநகர், மாதகல், சுழிபுரம் ஆகிய இடங்களில் மீன் சந்தை விற்பனை நிலையங்கள் அமைப்பதற்கு அனுமதிக்கவேண்டும் என்று படை அதிகாரிகளிடம் கடற்றொழில் சமாசப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டனர்.

இரவுவேளையில் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் தொழில் முடிந்தவுடன் உடனடியாக கரைதிரும்பாது காலையிலேயே கரைக்கு வர வேண்டும் என படைத்தரப்பினர் வற்புறுத்துவதற்கும் மீனவர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் கொழும்பு தலைமையகத்துடன் தொடர்புகொண்டு ஆலோசித்த பின்னர் திட்டவட்டமான முடிவு அறிவிக்கப்படும் என்று படை அதிகாரிகள் உறுதி கூறினர்.

பருத்தித்துறை வெளிச்சவீட்டுப் பகுதியில் முகாம் அமைத்துள்ள கடற்படையினரை விலக்குமாறு மீனவப் பிரதிநிதிகள் விடுத்த கோரிக்கை சாதகமாகப் பரிசீலிக்கப் படும் என்று படைத்தரப்பில் கூறப்பட்டது.

காங்கேசன்துறை, கோவளம், காரைநகர் ஆகிய வெளிச்சவீடுகளைப் புனரமைப்பதிலும் தங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

குளிரூட்டப்பட்ட வண்டிகளில் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் மீன் வகைகளை முகமாலை, ஓமந்தை ஆகிய இடங்களில் சோதனையிடுவதற்குப் பதிலாக பருத்தித்துறை மற்றும் காங்கேசன்துறை ஆகிய இடங்களில் வைத்து சோதனையிடவும் இணக்கம் காணப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-7-173)

# சந்திரிகா - ரணில் நாளை சந்திப்பு

கொழும்பு,ஒக்.23

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் நாளை சந்தித்துப் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசவிருக்கின்றனர்.

தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வழிமுறைகள், தேசிய அரசு ஒன்றை அமைக்கும் யோசனை ஆகியன தொடர்பாக இச் சந்திப்பில் இரு தலைவர்களும் விரிவாகப் பேசுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## பாடசாலை அதிபர்களுக்கு

வலி. தெற்கு,ஒக்.22

இம்மாதம் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி ஆசிரிய நிலையத்தில் நடைபெற இருந்த பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவமும் நூலக அபிவிருத்திக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமைமுதல் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மேற்படி நிலையத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-152)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிதிவண்டி எழுச்சிப் பயணத்தை ஆரம்பித்தோம். எம்முடன் வந்த ஒருவர் கிளிநொச்சியில் ஏற்பட்ட சிறிய விபத்து காரணமாக அங்கேயே தங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இருந்தபோதிலும் நாம் ஐவரும் எமது பயணத்தை மேற்கொண்டு வவுனியாவை அடைந்து வவுனியாவில் தங்கி மீண்டும் நேற்று அதிகாலை 5.45 மணிக்கு திருமலை நோக்கி எமது பயணத்தை தொடர்ந்து நண் பகல் 12.30 மணியளவில் அரங்கத்தை நாம் அடையவும் எழுச்சிப் பிரகடனம் வாசிக்கப்படவும் சரியாக இருந்தமை எங்களுக்கு பெருமகிழ்ச்சி அளித்தது. - என்று தெரிவித்தனர்.

இந்த ஐவரும் ஒரே வகையான சீருடையில் அரங்கிற்கு வருகை தந்திருந்தனர். (ஐ-3-13)


EXPOAIR your friend in the skies...

எக்ஸ்போ ஏயார் வானத்தில் உங்கள் நண்பன்...



**தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை**

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
ஞாயிறு சிறப்பம்சம்
23.10.2005

# பறந்து வரும் பயங்கரம்...



## பறவைக்காய்ச்சல்: சில தகவல்கள்

- தும்மல், இருமல் மூலம் ஒருவரிலிருந்து மற்றொருவருக்குத் தொற்றிக்கொள்ளும்.
- பறவைகளின் எச்சங்களாலும் அவை வளர்க்கப்படும் இடத்திலுள்ள தூசுக்களையும் மண்ணையும் கிளறுவதாலும் பரவ இடமுண்டு.
- பண்ணைகளிலிருந்து மற்றைய பண்ணைகளுக்கும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கும் பரவக்கூடும்.
- இறந்த மிருகங்கள் பறவைகளின் உடற் பாகங்களை ஏனைய மிருகங்கள், பறவைகள் தீண்டுவதாலும் உண்பதாலும் ஏற்பட இடமுண்டு.
- ஈக்களும் கொசுக்களும் நோய்க் காவிகளாகும் வாய்ப்புண்டு.
- கோழிகள் விற்கப்படும் இடங்கள் சுகாதாரமற்றிருத்தலும் நெரிசல் மிகுந்திருப்பதும் நோய் பரவும் வாய்ப்பை உருவாக்கும்.
- பறவைகள் ஒன்று கூடி ஒரே நீர் நிலைகளில் நீரைப் பகிர்ந்து கொள்வதாலும் நோய் பரவ வாய்ப்புண்டு.
- டிசெம்பர் 2003 - ஒக்ரோபர் 2005 இடைப் பட்ட காலத்தில் எச்5 , என் 1என அடையாளப்படுத்தப்பட்ட இத் தொற்று நோய்க் கிருமித் தாக்கத்துக்கு உட்பட்ட 117 பொதுமக்களில் 60 பேர் மரணமடைய நேர்ந்துள்ளது.
- பறவைக்காய்ச்சல் தொற்று நோய்க்கிருமி பெரும்பாலும் பறவைகளிலிருந்து பறவைகளுக்கு மட்டுமே தொற்றக் கூடியது.
- இப் பறவைக்காய்ச்சல் தொற்றுநோய்க் கிருமிகள் பூனைகளையும் தாக்கியமை தாய்லாந்தில் கண்டறியப்பட்டது.
- இந்தப் பறவைக் காய்ச்சல் நோய்க்குரிய கிருமி மூன்று வகைப்படும். இம் மூன்று வகைகளும் மனிதருக்குப் பாதிப்பை ஏற்படுத்தவல்லன.
- அறிகுறிகள் - காய்ச்சல், இருமல், தொண்டை அழற்சி, தசைவலி.
- நோய் பரவும் பகுதிகளில் தடுப்பு ஊசியோ, தடுப்பு மருந்தோ பெருமளவில் மரண விகிதத்தைக் குறைக்குமாயினும், உலக சுகாதார ஸ்தாபனத்திடம் தற்போதைய நிலையில் போதுமான அளவு நோய்த்தடுப்பு மருந்து வகைகள் கையிருப்பில் இல்லை.
- பல மருந்து நிறுவனங்கள் பெரிய அளவில் தயாரிப்பு முயற்சிகளில் ஈடுபடாமைக் கான காரணம், காலத்துக்குக் காலம் இக்கிருமிகள் வெவ்வேறு வலுமாற்றம் பெறுவதாகும்.
- தென்கிழக்கு ஆசிய வட்டகை நாடுகளில் எந்தவொரு மருந்துத் தயாரிப்பு நிறுவனமும் இத்தகைய தடுப்பு மருந்துத் தயாரிப்பு முயற்சியில் இதுவரை ஈடுபடவில்லை.
- அதேபோன்று ஆசிய வட்டகை நாடுகளில் எந்தவொரு நாடும் இத்தகைய தொற்றுநோய்க்கெதிரான தடுப்பூசி முறையைக் கைக்கொள்ளவில்லை.
- இலங்கையில் தற்போது 75 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளன.
- இலங்கையில் தற்போது 6மில்லியன் கிலோ கோழி இறைச்சி வருடாந்தம் உற்பத்தி செய்யப் படுகிறது.

இன்று உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் 'பறவைக்காய்ச்சல்' என்ற பயங்கரத் தொற்றுநோய் குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் கடும் எச்சரிக்கை விடுத்து வருகின்றது. இது தொற்றுநோய் குறித்த எச்சரிக்கையாகக் கொள்ளப்படுவது மட்டுமன்றி குறுகியகால இடைவெளிக்குள் கோடிக்கணக்கான உயிர்களைக் காவு கொள்ளத்தக்க அதன் பயங்கரத் தன்மை குறித்தும் விடுக்கப்படும் முன்னெச்சரிக்கையாகக் கொள்ளத்தக்கது.

பறவை இனத்தையே ஒட்டுமொத்தமாக அழித்து விடத்தக்க 'எச்5 என்1' என அடையாளப்படுத்தப்பட்டுள்ள இந்த நோய்க்கிருமி மூலம் பரவும் பறவைக்காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாகி 1997ஆம் ஆண்டு முதல் ஆசிய வட்டகை நாடுகளைச் சேர்ந்த பொதுமக்களும் மரணமுற நேர்ந்துள்ளது.

இப் பறவைக் காய்ச்சல் கிருமியினால் மனிதர்கள் இலேசில் பாதிப்புக்கு உள்ளாவதில்லையாயினும், இதன் வலுத்திரிபு மற்றும் மரபணு மாற்றம் ஆகிய மாற்றங்களால் இதன் தாக்கம் வலுவடையக் கூடுமென மருத்துவ ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

அநேகமாக கோழி இனங்களைத் தொடர்ச்சியாக மனிதர்கள் கையாளும் சந்தர்ப்பங்களிலேயே இத் தொற்றுநோய் மனிதர்களிலும் தொற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுவதாக மிக அண்மைய ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பறவையினங்கள் மட்டுமன்றி, அவற்றிலிருந்து நோய்த்தொற்றைப் பெற்றுக்கொள்ளும் பன்றிகள், காட்டுப்பன்றிகள் என்பவற்றினூடாகவும் இக் கிருமிகள் மனித உடற் கலங்களில் சேர்ந்து கொள்வதாக உலக சுகாதார ஸ்தாபன அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த 20ஆம் நூற்றாண்டில் இவ்வித பயங்கரத் தொற்றுநோய் மூன்று தடவைகள் உலகின் பல நாடுகளில் பரவி பெரும் உயிர்ச்சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. 1918 - 1919ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்பானியக் காய்ச்சல் என்ற பெயரில் பரவிய இத் தொற்றுநோயினால் 40 முதல் 50 மில்லியன் தொகையினரான பொது மக்கள் உயிரிழக்க நேர்ந்தது. 1957-1958ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆசியக் காய்ச்சல், மற்றும் ஹொங்கொங் காய்ச்சல் என்ற பெயர்களில் பரவிய இத் தொற்றுநோயால் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் உயிரிழக்க நேர்ந்தது.

### இலங்கையிலும் எச்சரிக்கை

அண்மைக் காலமாக ஆசியப் பிராந்திய நாடுகள் சிலவற்றில் இத் தொற்றுநோய்த் தாக்கம் இனம் காணப்பட்டமையையடுத்து இலங்கை சுகாதாரத் திணைக்களம் இலங்கையில் இந்நோய் பரவவிடாது தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்துடன் இணைந்து இந்நோய் பரவலைத் தடுக்கும் தொடர்ச்சியான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்கான திட்டங்களைச் சுகாதார அமைச்சு வகுத்து வருகின்றது. இதற்கென வகுக்கப்பட்ட தேசிய திட்ட வரைபு பூர்த்தியாகும் நிலையில் இருப்பதாக சுகாதாரத் திணைக்களத்தின் தொற்றுநோய்த் தடுப்பு நிபுணர் டாக்டர் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய நடவடிக்கைக்குழு, தொழில்நுட்பக்குழு, தேசிய நடத்துமையம் என முப்பிரிவுகளை அடக்கியுள்ள இத்திட்டத்தினூடாக குறிப்பிட்ட இலக்கைத் துரிதமாக எட்டும் வகையிலான செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவசியம் ஏற்படுமிடத்து இந்த ஆலோசனைச் சபையில் துறைசார் வல்லுநர்களும் இணைந்து செயலாற்றுவர். அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு பொதுமக்கள் மத்தியில் இப் பயங்கரத் தொற்றுநோய்த் தாக்கம் குறித்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளது.


விவசாயத் திணைக்களமும், சுகாதார மற்றும் கால்நடை உற்பத்தித் திணைக்களமும் இணைந்து பொதுமக்களுக்கு - குறிப்பாக விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர், கோழிப்பண்ணை உரிமையாளர்கள் ஆகிய தரப்பினர்களுக்கு - அறிவுறுத்தல்கள் வழங்கும் வகையிலான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. இவ் விடயத்தில் பொது நலன் நாடும் அமைப்புகளதும் குறிப்பாக செய்தி ஊடகங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயங்கரத் தொற்றுநோய் இலங்கையில் பரவவிடாது தடுக்கும் முன்னெச்சரிக்கை



நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குச் சுகாதாரத் திணைக்களம் தீவிரமாகச் செயலில் இறங்கியுள்ளது.

இத் தொற்றுநோய்த் தடுப்பு மருந்து வகைகளைப் பெருமளவில் தருவித்துக் களஞ்சியப்படுத்தவும்,



தட்டுப்பாடு ஏற்படாது பார்த்துக் கொள்ளவுமான நடவடிக்கையில் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் என்பன நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. கால்நடை உற்பத்தித் திணைக்களமும் சுகாதாரத் திணைக்களமும் இந்த நடவடிக்கையில் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

இவற்றின் ஒரு கட்டமாகத் தற்போது கோழிகள், கோழி இறைச்சிவகை மற்றும் கோழி இறைச்சியிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் என்பன இப் பறவைக்காய்ச்சல் நோய்ப் பாதிப்பு ஏற்படாத நாடுகளிலிருந்து மட்டுமே இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டு வருகின்றன.

### கோழி இறக்குமதித் தடை

இப் பறவைக்காய்ச்சல் அச்சுறுத்தல் காரணமாக கடந்த ஆண்டு முதல் பறவைக் காய்ச்சல் பாதிப்புக்குள்ளான நாடுகளிலிருந்து கோழிகளை இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டிருப்பதோடு செல்லப் பிராணிகளாக வளர்ப்புப் பறவை இனங்களின் இறக்குமதியும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், பறவைக் காய்ச்சல் பாதிப்புக்கு உட்படாத நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கோழிகள், கோழி இறைச்சித் தயாரிப்புகள் மற்றும் சோபாக்கள், மேலங்கிகள் என்பவற்றின் தயாரிப்புக்குப் பயன்படுத்தப்படும் பறவைகளின் சிறகுகள், செட்டைகள் என்பவற்றின் மாதிரிகள் ஆய்வுகூடப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே துறைமுகத்திலிருந்து விடுவிக்கப்படுவதாக சுகாதாரத் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார். இதற்கு சுங்க இலாகாவினரின் ஒத்துழைப்பும் தமக்குக் கிட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**வியெஸ்ரீ**

சுகாதார அமைச்சின் இந்த முன்னெச்சரிக்கைத் திட்டத்தின் ஒரு பகுதியாக மிருகவைத்திய அதிகாரிகள் மற்றும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் ஆகிய தரப்பினர் பொதுமக்களது வளர்ப்புப் பறவை இனங்களில் இந்தப் பறவைக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் அவதானிக்கப்பட்டால் அது குறித்து விரைவான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் டாக்டர் ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

### வலசை போகும் பறவைக் கூட்டங்கள்

இவை யாவற்றுக்கும் புறம்பான வகையில்,

(VIIIபக்கம் பார்க்க)

# உலகின் கவனத்தை தமிழர் பக்கம் திருப்பிவிட்ட வரலாற்று நாயகிகள்!

உலக விடுதலைப் போராட்டங்கள் பலவற்றில் பெண்கள் பங்கெடுத்துக் கொண்ட வரலாறுகள் பல இருக்கின்றன. தமது இனத்தின் விடுதலைக்காகவும் தாம் சார்ந்த சமூகத்தின், மதத்தின், தமது மொழியின் சுதந்திரத்துக்காவும் உலகில் நடந்த போராட்டங்கள் பலவற்றில் பெண்களும் பங்கேற்றிருக்கின்றார்கள்.

இவற்றைவிட பெரும்பாலான நாடுகளின் தேசிய படைக் கட்டமைப்புகளிலும் பொலீஸ்படை, ஊர் காவல் படை போன்ற கட்டுமானங்களிலும் பெண்களுக்கென்று இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகளும் தமது இராணுவத்தில் நீண்ட காலமாகவே பெண்களை இணைத்த வைத்திருக்கின்றன.

ஆனால், இராணுவம் போன்ற கட்டமைப்புக்களிலும் பெரும்பாலான விடுதலைப் போராட்ட அமைப்புகள், குழுக்களிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக அன்றி, அவர்களுக்கு உதவியாக - சாதாரண சிவில் பணிகளைச் செய்கின்ற வெறும் ஆளணியினராகவே செயற்பட்டு வந்திருக்கின்றனர் - செயற்படுகின்றனர் - என்பது உலக வரலாற்று உண்மை.

**வித்தியாசமான பங்கு!**

ஆனால், ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் பெண்களின் பங்கு சற்று வித்தியாசமானது; வியக்கத்தக்கது.

உலகில் வெவ்வேறு துறைகளில் பல்வேறுபட்ட வியத்தகு சாதனைகளைப் பெண்கள் படைத்திருக்கின்றார்கள்தான். எனினும், போராட்டம் என்ற விடயத்தில் - அதிலும் குறிப்பாக ஆயுதம் ஏந்திப் போராடுவதில் உலகப் பெண்களுக்கு முன்மாதிரியாக, வழிகாட்டியாக ஈழப்பெண்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இது வெறுமனே வாய்ப்பேச்சல்ல; வரலாற்று ரீதியான நிரூபண உண்மை.

இந்த இடத்தில் இன்னுமொரு விடயம் நோக்கப்பட வேண்டியதாகிறது. அதாவது உலக நாடுகளைப் பொறுத்தவரையில் குறிப்பாக மேலை நாடுகளில்

**மூத்த பெண்புலிகளின் அனுபவப் பகிர்வுகள் 10**

பெண்களைவிட ஆண்கள் கடின வேலைகளிலும் கண்டுபிடிப்புகளிலும் அதிகளவில் ஈடுபட்டிருந்தாலும் சமூக நிலையில் ஏறத்தாழ ஆண்களுக்கு நிகராக சகல விடயங்களிலும் பெண்களுக்கும் உரிமைகள் இருந்திருக்கின்றன. அப்படியான ஒரு நிலையில் ஆண்களைப் போன்று பெண்களும் சாதனையாளர்களாவது ஒன்றும் பெரிய விடயமாகாது. ஏனென்றால், அந்தப் பெண்களின் முன்னேற்றத்துக்கு சமூகத்திலிருந்தோ - அவர்களது குடும்பத்திலிருந்தோ எந்தத் தடைகளும் இல்லை. எத்தகைய ஒடுக்கு முறைகளையும் அவர்கள் எதிர்நோக்கவில்லை.

**சமுதாயத்தின் தடைகள்**

ஆனால், ஈழத்தமிழ்ப் பெண்கள் சமூகத்தில் முன்வருவதற்கு சமூகப் புறநிலைகள் சாதகமானவையாக இருந்திருக்கவில்லை.

குறிப்பாக, பண்பாட்டு அடிப்படைவாதச் சிந்தனைகளுக்குள் புதையுண்டு போயிருந்த யாழ்ப்பாணத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்து ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு பெரும் சவாலை எதிர்கொண்டனர். எனினும் போராடியே தீர வேண்டும் என்ற காலத்தின் தேவையை அவர்கள் ஊதாசீனம் செய்யவில்லை.

1990களின் ஆரம்பத்தில் பெண்போராளிகள் சீருடைதரித்து ஆயுதம் ஏந்திக் கொண்டு கம்பீரமாக வெளியே வந்தபோது சமூகம் அவர்களை ஒரு புரட்சியாளர்களாக - புதுமைப் பெண்களாக - நோக்கினாலும் அது குறித்து சர்ச்சைக் குரிய விவாதங்களிலும் ஈடுபடத் தவறவில்லை. உரிமைக்கான போராட்டத்தில் பெண்கள் துணிந்து பங்கேற்றது இனத்தின் பலத்தை உயர்த்தும் என்று ஒருசாரார் வாதித்தாலும், அது தமிழ்ப் பாரம்பரிய கட்டமைப்புகளை மாற்றியமைத்துவிடும் - மழுங்கடித்துவிடும் என்ற சாரப்பட மற்றொரு சாரார் அதனை எதிர்க்கவும் தலைப்பட்டிருந்தனர்.

நீளமான முடி வளர்த்து சேலை உடுத்தி தலை குனித்து பணிவடக்கத்துடன் செல்லும் பாவையர்களாக பெண்களை நோக்கிய சமூகம் ஆண்களைப்போலவே முடிவெட்டி சீருடை தரித்து ஆயுதம் ஏந்தி



வந்த பெண்களை ஏற்றுக்கொள்வதற்கு சற்றுத் தயங்கியது; தாமதித்தது.

'பெண்விடுதலை' பற்றிய கருத்துகள் ஆரம்ப காலங்களில் இருந்தே ஆங்காங்கு தலைதூக்கியிருந்தாலும் கூட அப்படியொரு விடுதலையே அவசியமற்றது என்ற கருத்து நிலையும் ஒருபுறம் இருக்கத்தான் செய்தது.

**மூடநம்பிக்கையை தகர்த்தவர்கள்!**

இத்தகைய பிற்போக்கான சமூக மரவுப் படிமங்களிலிருந்து வெளிவந்த பெண்கள் பின்னாளில் உலகே வியந்து நிற்கக் கூடிய - உலகின் கவனத்தை தமிழர் பக்கம் திருப்பிவிடக்கூடிய சாதனைகளை நிகழ்த்திக் காட்டியபோதுதான் தமிழ்ச் சமுதாயும் தெளிவடைந்தது.

பெண்கள் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று வரையறை செய்து வைத்திருந்த மூடநம்பிக்கை

**சந்திரமதனா**

பெண்புலிகளின் தீரம்மிக்க - துணிச்சலான சாதனைகளினால் தகர்ந்தது போனது.

நவீன ஆயுதங்களை இயக்குபவர்களாக - கனரக வாகனங்களின் சாரதிகளாக - கடின வேலைகளையும் நொடியில் முடித்துவிடும் ஓர்மம் மிக்கவர்களாக - களத்திலே துணிந்து நின்று தாமே திட்டங்களை வகுத்து போர் செய்து வெற்றியீட்டக் கூடியவர்களாக - எல்லாவற்றுக்கும் மேலாக தமது உடலில் வெடிகுண்டைக் கட்டிக் கொண்டு சாவையே மரணிக்க வைக்கும் அசாத்தியக்காரிகளாக ஈழப்பெண்கள் இன்று வளர்ந்து நிற்கின்றார்கள்.

உலகப்பெண்களின் வரலாற்றிலேயே முத்திரை பதித்துவிட்ட ஈழப்பெண்களின் வீரவரலாறு இனி எப்போதும் உலகில் பேசப்படும் என்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில், தமிழர்களும் தங்கள் எதிர் கால சந்ததிகளுக்கு எமது பெண்களின் துணிச்சல் மிக்க பேராற்றலைத் தெரியப்படுத்தவேண்டும்; தெளிவுபடுத்த வேண்டும்

ஈழத்துப் பெண்களின் வரலாறுகளும் அவர்களது வியத்தகு சாதனைகளும் காலத்தால் அழியாத காவியங்களே. இத்தகைய வரலாறுகளை ஆவணப்படுத்தி அவை அடுத்த சந்ததிக்கும் போய்ச் சேர்வதற்கு வழி செய்வது ஈழத் தமிழர்கள் அனைவரதும் தலையாய கடமையாகும்

(முற்றும்)

## தொடங்குவதற்கு முன்னரே முடிவடைந்த தாக்குதல்!

1998 ஆம் ஆண்டு ஜெயசிக்குறு சமர் அம்பகாமம் காட்டுப் பகுதிக்குள் நடந்து கொண்டிருந்தது.

காட்டுக்குள் பெண்புலிகளின் அணி ஒரு பகுதியில் காப்பரண் தொடர்களை அமைத்து நிலை கொண்டிருந்தது. அந்த அணியின் மீது திடீர்த்தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு இராணுவத்தினர் திட்டமிட்டிருந்தனர். குறிப்பிட்ட தூர இடைவெளிகளில் நிலைகளை அமைத்து விட்டு இராணுவத்தினரின் தாக்குதலை எதிர்பார்த்துப் பெண் போராளிகள் அங்கு காத்திருந்தனர்.

முன்னணிக் காவலரனுக்குச் சற்று முன்னால் இராணுவத்தின் வருகையை - அதற்கான அறிகுறிகளை அவதானித்து, அதனைத் தமது முன்னணிக் காவ லரனுக்குத் தெரியப்படுத்துவதற்காக உருமறைப்புச் செய்து கொண்டு போராளிகள் அணி ஒன்று மறைந்திருப்பது வழக்கம்.

அதற்குப் பெயர் முன்னணி அவதானிப்பு அணி.

எதிராளியின் வருகையை விரைவாகவே அறிந்து முன்னணிக் காப்பரனுக்குத் தெரியப்படுத்தி அதன் மூலம் ஏனைய காவலரண்களில் இருப்பவர்களையும் தயார்ப்படுத்துகின்ற பணியை அந்த உருமறைப்பு அணி செய்து முடிக்கும். அதற்கென அந்த அணிக்கு விசேட பயிற்சிகளும் உண்டு.

அம்பகாமம் காட்டில் இராணுவத்தின் வருகையை எதிர்பார்த்த படி நின்றிருந்த பெண்புலிகளின் முன்னணிக் காவலரனுக்கு முன்பாக உருமறைப்பு செய்யப்பட்ட முன்னணி அவதானிப்பு அணியில் 'புதுமுகமாக' இடம் பெற்றிருந்தவள் இன்குறிஞ்சி என்றொரு போராளி.

இராணுவத்தினர் அந்தப் பகுதியில் பதுங்கியபடி முன்னேறிவரத் தொடங்கினர். அப்போது முன்னணி அவதானிப்பில் நின்றிருந்த இன்குறிஞ்சி இராணுவத்தினர் நகர்ந்து வருவதை அவதானித்து விட்டாள்.

முன்னணிக் காவலரனுக்கு அதனைத் தெரியப்படுத்துவதற்காக - ஏற்கனவே கூறப்பட்டிருந்தபடி - இன்குறிஞ்சி இராணுவத்தினரை நோக்கி சுடத் தொடங்கினாள்.

அந்தச் சத்தத்தைக் கேட்டதுமே புலிகளின் அணிகள் இராணுவத்தின் வருகையை உணர்ந்து தாக்குதலுக்கு தயாராகிவிட்டனர்.

அவதானிப்பு நிலையில் இருந்த போராளிகளும் முன்னணிக் காவலரண் பகுதிக்கு வந்து சேர்கிறார்கள். இன்குறிஞ்சியை மட்டும் காணவில்லை.

தாக்குதலுக்குத் தயாராக நின்றபோராளிகள் இன்குறிஞ்சியைப் பின்னுக்கு வந்து விடுமாறு அழைக்கின்றார்கள்.

ஆனால், இன்குறிஞ்சி வரவேயில்லை.

காப்பரணில் இருந்த போராளிகளைக் காப்பாற்றவேண்டும் - படைகளை காவலரண் வரை முன்னேற விடக்கூடாது - என்று முடிவு செய்த இன்குறிஞ்சி, தன்னிடம் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட ரவைகள் தீரும் வரை நின்ற இடத்திலிருந்தே சுட்டுக் கொண்டிருக்கிறாள்.

இராணுவத்தினரும் பதிலுக்குத் தாக்கத் தொடங்கினர்.

தமக்கு மிக அருகிலிருந்து சரமாரியான துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதை அறிந்த படையினர் புலிகளின் ஓர் அணியினரே தம்மீது தாக்குதல் நடத்தத் தொடங்கி விட்டார்கள் என்று உணர்ந்து கொண்டு தமது நோக்கத்தைக் கைவிட்டுத் திரும்பினார்கள்.

தன்னிடமுள்ள ரவைகள் தீர்ந்துபோகும் வரைக்கும் சுட்டுத்தள்ளி விட்டு வெறும் துப்பாக்கியோடு காவலரணுக்குத் நகர முயன்றவேளை படையினரின் தோட்டா ஒன்று இன்குறிஞ்சியின் உயிரைக் குடித்தது. அத்தோடு, முன்னேறி வந்த படையினரும் பின்வாங்கித் திரும்பினர். முன் னணி நிலையில் தாக்குதலுக்குத் தயாராக இருந்த போராளிகளுக்கு அன்று வேலையே இருக்கவில்லை....

தாக்குதல் நடத்திக் கொண்டு வந்த இராணுவ அணியைத் தனித்து நின்று விரட்டினாள் இன்குறிஞ்சி.

சண்டை தொடங்குவதற்கு முன்னரே முடிவடைந்த புதுவிதமான வரலாறு அன்று நடந்தேறியது.

தனது தீரம்மிக்க - துணிச்சல் மிக்க தாக்குதலினால் தனித்து நின்று படைகளைத் திணறடித்து ஓட வைத்தாள். 2ஆம் லெப்ரினன்ட் இன்குறிஞ்சி...

# சுந்தர ராமசாமி : தனித்துவமான படைப்புலக ஆளுமையாளன்

தமிழ் இலக்கிய உலகு, ஒரு பிரதானமான ஆளுமை மிகுந்த அக்கறையுடன் படைப்புத் துறையின் செயற்பட்டு வந்த படைப்பாளியாகிய சுந்தர ராமசாமி அவர்களை இழந்து விட்டது.

ஐம்பதுகளில் எழுத்துப் பணியை ஆரம்பித்து இன்றுவரை சலியாது படைப்புப் பணியாற்றி வந்த ஓர் அரிய கலைஞர் சுந்தர ராமசாமி. தமிழில் நல்ல இலக்கியத்தைத்தேடி வாசிக்கும் ஆர்வமுடைய எவருடைய கவனத்துக்கும் ஆட்படத் தவறிவிடாத, ஒருவகையில் தவிர்க்கவே இயலாத நல்லதோர் படைப்பாளியாகிய இவர் சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, மொழி பெயர்ப்புக் கவிதை எனப் பல துறைகளில் படைப் புக்களை அளித்துள்ளார்.

இவரது 'ஜே.ஜே.சில குறிப்புகள்' நாவல் தமிழ் நாவல்களுள் தனியானதோர் இடத்தை வகிப்பதாகும். 'பசுவையா' என்னும் பெயரில் கவிதை நூல்களை எழுதிய இவரது ஆரம்ப காலக் கவிதைகள் 'நடுநிசி நாய்கள்' 'யாரோ ஒருவனைத்தேடி...' என்பன முதலாக இன்றுவரை அவரது கவிதைகள் வெளிவந்து கொண்டுள்ளன.

சுந்தர ராமசாமி கட்டுரைகள், விரிவும் ஆழமும் தேடி, காற்றிற் கலந்த பேரோசை முதலான கட்டுரைகள் தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. இவை தவிர அண்மைக் காலத்தில் இவரது முழுக் கட்டுரைகளையும் உள்ளடக்கிய பெருந்தொகுப்பொன்றும் வெளியாகியுள்ளது.

'காகங்கள்' என்ற பெயரில் இவரது இதுவரை வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பு அண்மையில் வெளியிடப்பட்டது. 'காலச்சுவடு' இதழின் ஆரம்பகால ஆசிரியராகவும் இவர் விளங்கியுள்ளார்.

அக்கறையுடனும் மிகுந்த சிரத்தையுடனும் எழுதவேண்டும் என்பதில் உறுதியாகத் தொழிற்பட்டமை சுந்தர ராமசாமியின் தனித் தன்மைகளில் ஒன்றாகும். எழுத்தானது தனக்கேயான தனித்துவத்தை நிறுவுவதாகவும் தேவைக்கு அதிகமான சொற்களைக் கொண்டிராததாகவும் அமைய வேண்டுமென்பதை அவர் எப்போதுமே வலியுறுத்தி வந்துள்ளார்.



சுந்தர ராமசாமியின் மிகச்சிறந்த படைப்புலகப் பண்புகளிலொன்று கட்டுரை இலக்கியத்தைக் கூட சுவாரஸ்யம் குன்றாத வகையில் படிப்போரைப் பிணைக்கும் வகையில் எழுதுவதாகும். மனிதாபிமானமும் சமூக அக்க றையும் மிகுந்த ஒரு தலைவராகிய ஜீவா அவர்கள் (ப.ஜீவானந்தம்) காலமான போது அவர் குறித்து சுந்தர ராமசாமி அவர்கள் எழுதிய 'காற்றில் கலந்த பேரோசை' என்ற கட்டுரை படிப்பவரின் மனசுதொட்டு நெகிழ்த்தும் மொழியில் உயிர்த்துவத்தோடு திகழ்கிற ஒரு கட்டுரை யாகும்.

பசுவய்யா என்ற பெயரில் இவர் படைத்த கவிதைகளும் தனித்துவம் வாய்ந்தவை. தெளிவும் கூர்ந்த நோக்கும் கொண்ட இவரின் கவிதைகளும் மொழி பெயர்ப்புகளும் தமிழுலகில் தனியிடம் கொள்பவை.

இவ்வாறு பல துறைகளிலும் அயராது உழைத்த இவர் 'என் கலைத்திறன் மிகவும் சொற்பமானது' எனக் கூறுகின்ற தன்னடக்க மிகுந்த அரிய கலைஞராக வாழ்ந்தவர். 15.10.2004 இல் காலமான இந்த உயர்ந்த படைப்பாளியை நல்ல தமிழ்நெஞ்சங்கள் என்றும் மறவாதிருக்கும்.

- ந.சத்தியபாலன்

# சமயக் கிரியைகளைக் கேலியாக நோக்கும் நிலை மாறவேண்டும்



கௌரவ கலாநிதி
சைவப்புலவர் வ.கந்தசாமி

❖ உங்கள் ஆரம்பகால சமயப்பணிகள் பற்றிக் கூறுங்கள்?

✱ 1953ஆம் ஆண்டில் சாந்தையர் மடம் பிள்ளையார் கோயில் செயலாளர் ஆக இருந்து இளைஞர்களுக்கு சமயம், தமிழ் என்பவற்றில் பயிற்சி கொடுப்பதற்காக 'சைவசமய அபிவிருத்திக்கழகம்' ஒன்றை ஆரம்பித்து அதன் மூலம் சமயவகுப்புகள், சமயப் பரீட்சைகள், கோலம்போடல், தோரணம் கட்டுதல் போன்ற சமய அறிவுப்போட்டிகள் என்பவற்றை நடத்தினேன். சைவகலாசார உடை, ஒழுக்கநெறி என்பவற்றையும் புகட்டி வந்தேன். பின்னர் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையேற்று சமயம்,தமிழ் போன்ற பாடங்களைக் கற்பித்தேன்.

தொடர்ந்து சைவபரிபாலான சபையுடன் இணைந்து சமயப்பணிகள் ஆற்றத் தொடங்கி னேன். அந்தக்காலத்தில் சிறைகளுக்குச் சென்று சிறைக்கைதிகளுடன் உரையாடி அவர்களுக்கு நல்ல போதனைகளைப் புகட்டி அவர்களை நல்வழிப்படுத்தும் முயற்சியில் இறங்கினேன். இதற்காக நாங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் முற்பகல் 8.30 மணிமுதல் 9.30 மணி வரை நேரத்தை ஒதுக்கியிருந்தோம். அத்துடன், சமய அறிவை வளர்ப்பதற்காக பரிசுத்திட்டம் ஒன்றை உருவாக்கிச் செயற்படுத்தினோம்.

1972 ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டது. அப்போது 6ஆயிரத்து 720 மாணவர்கள் பரீட்சையில் பங்குபற்றினர். ஆனால், தற்போது 89ஆயிரத்து 720 மாணவர்கள் பரீட்சையில் தோற்றுகின் றனர். தரம் 11, தரம் 12 வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்கள் இப்பரீட்சைகளில் தோற்றி சான்றிதழ்களைப் பெறுவதனால், வேலை வாய்ப்பு, மேற்படிப்பு போன்றவற்றிற்கு இச்சான்றிதழ் உதவுகின்றது.

❖ உங்களுடைய ஆன்மீகப்பணியில் நீங்கள் வழங்கும் பட்டங்கள் பற்றி...?

✱ சமய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சமய அறிவை மேலும் வளர்க்கும் முகமாக சைவசித்தாந்த பிரவேச பாலபண்டிதர், பண்டிதர் போன்ற பட்டங்களுக்கான பரீட்சைகளை நடத்தி அதில் சித்தி பெறுபவர் களுக்கு பட்டமும், சான்றிதழும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான ஆசிரியர்களுக்கு சமய தீட்சைகள், சமயவகுப்புகள் என்பனவும் நடத்தப்படுகின்றன. சமயக்கல்வியின் நோக்கமே வாழ்க்கையை ஒழுக்கநெறியுடன் பின்பற்றுவதைச் சொல்லிக்கொடுத்தல் ஆகும்.

❖ சைவப்புலவர் சங்கம் பற்றி...?

✱ 1960 ஆம் ஆண்டு சைவப்புலவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கும் வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டு, பரீட்சை வைத்து சான்றிதழ்களும் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பட்டங்களும் வழங்கப்படுகின்றன.

❖ சைவபரிபாலன சபையின் தற்போதைய பணிகளைக் கூறுங்கள்?

✱ சைவபரிபாலனசபை ஆறுமுகநாவலர், சைவப்பெரியார் சிவபாதசுந்தரம் ஆகியோர் இயற்றிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டுள் ளது. சைவபரிபாலன சபை ஊடாக சைவ மாநாடு , திருமுறைமாநாடு, அறநெறிப்பாட சாலை என்பவற்றை நடத்தி வருகின்றோம்.

உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு நாவலர் மகாவித்தியாலயத்தில் சமயம், தமிழ் போன்ற பாடங்களை சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2மணிவரை நடத்துகிறோம். இதில் பல மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அத்துடன் ஆரிய திராவிட பாசாபிவிருத்திச் சங்க பண்டிதர் பரீட்சைகளுக்கும் வகுப்புகள் நடைபெறுகின்றன.

❖ தற்போதைய மாணவர்களின் ஆன்மீகப் போக்கு எவ்வாறு உள்ளது?

✱ தொலைக்காட்சி மோகம் அதிகரித்துக் கொண்டு செல்வதால் பிள்ளைகள் கோயிலுக்குச் செல்வதற்குப் பின்னடிக்கின்றனர். அறநெறிப் பாடசாலைகளுக்கோ , ஆன்மீக நிகழ்வுகளுக்கோ செல்வதில்லை. இதனைப் பெற்றோரும் கண்டு கொள்வதில்லை என்பது வேதனைக்குரியது. ஆரம்பகாலத்தில் பெற்றோருடன் பிள்ளைகள் கோயிலுக்குச் செல்வார்கள். ஆனால், அந்தநிலை மாறிவிட்டது. அதனை மீண்டும் கொண்டுவர முயற்சிசெய்யவேண்டும்.

தனியார் கல்வி நிறுவனங்கள் வெள்ளிக்கிழமைகளில் இயங்குவதும் பிள்ளைகளின் ஆன்மீக ஈடுபாடு குறைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்களை வெள்ளிக் கிழமைகளில் மாலைநேரங்களில் நிறுத்தவேண்டும். இது எனது மனப்பூர்வமான வேண்டுகோள். உரிய தரப்புகள் இதனைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

❖ சமய பாடத்தைக் கற்பிக்க முன்வரும் ஆசிரியர்களுக்கு நீங்கள் கூறக்கூடிய விடயம் என்ன?

✱ தன்னைத் தாங்கிக் கொள்ளக்கூடிய ஆற்றல், சக்தி என்பன சமயக் கல்வியில்தான் இருக்கிறது. அந்தப் போதனைமுறை மாற்றி அமைக்கப்படவேண்டும். பரீட்சைக்கு மட்டும்தான் கல்வி என நினைக்கக்கூடாது. உதாரணமாக உயிர்களுக்கு இரங்குதல் எனும் போது எங்கு, எப்படி என்பதை எடுத்துக் காட்டுதல் வேண்டும். சமயபாட ஆசிரியர்கள் சீருடையுடன் செல்லவேண்டும். சமயபாட ஆசிரியர் ஒழுங்காக நடந்தால் அவரையே பிள்ளைகள் நம்புவர். நம்பிக்கைதான் வாழ்க்கை.

❖ உங்களுக்கு இதுவரை கிடைத்த பட்டம் பதவிகள் பற்றி...?

✱ ஆத்மநாத சர்மா ஆசிரியரின் நினைவாக 'சிவநெறிக்காவலர்' எனும் பட்டமும் நல்லை ஆதீனத்தால் 'சித்தாந்த வித்தகர்' எனும் பட்டமும் மதுரை ஞானசம்பந்தர் ஆதீனத்தால் 'சிவநெறிச் செம்மல்' எனும் பட்டமும் சைவப் பாதுகாப்புச் சபையால் 'சிவனடியார் மணி' எனும் பட்டமும் கொட்டடி சனசமூக நிலையத்தினரால் 'சமூகதிலகம்' எனும் பட்டமும்' நல்லை ஆதீனத்தால் 'சித்தாந்த சிரோன்மணி' எனும் பட்டமும் சைவப்புலவர் சங்கத்தினால் 'சைவபூசணம்' எனும் பட்டமும் எனக்கு வழங்கப்பட்டன.

❖ நீங்கள் இதுவரை வெளியிட்ட நூல்கள் குறித்து?

✱ முதல் முதலாக 1958 ஆம் ஆண்டில் 'மாணிக்கவாசகர் வரலாறு' எனும் நூலை வெளியிட்டேன். பின்னர் 'கூட்டுப்பிராத்தனைப் பாடல்கள்', 'தரம் 8 சமய பாட விளக்கம்' ஆகிய நூல்களை வெளியிட்டேன். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் சமயம் சம்பந்தமான ஆக்கங்களை எழுதியுள்ளேன்; எழுதி வருகிறேன்.

❖ வெளிநாடுகளுக்கு நீங்கள் மேற்கொண்ட ஆன்மீகப் பயணம் பற்றி...?

✱ கனடா,பிரான்ஸ், லண்டன், நோர்வே ஆகிய நாடுகளுக்கு நான் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளேன். இந்த நாடுகளில் அனைத்து தெய்வங்களின் ஆலயங்களும் உண்டு.

இந்த ஆலயங்களில் மிகவும் பத்திபூர்வமாக பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன. நாடுவிட்டு நாடுசென்றாலும் இந்தளவிற்கு மக்கள் காட்டும் தெய்வதரிசன ஈடுபாடு என்னை வியப்பில் ஆழ்த்தியது. அன்னதானங்கள்,சக்கரைத்தண்ணீர் வார்த்தல் எல்லாம் ஒழுங்கான முறையில் நடத்தப்படுகின்றன.

எமது நாட்டில் சுவாமி தூக்குவதற்குப் போட்டி போட்டுக்கொள்கின்றனர். ஆனால், அங்கு அப்படி அல்ல. ஓர் ஒழுங்குமுறையில் போட்டி எதுவுமின்றி சுவாமியை அமைதியான முறையில் காவுகின்றனர்.

கொடியேற்றம் நடைபெறும்போது அது தொடர்பாக பூசகரால் விளக்கம் அளிக்கப்படுகின்றது. இது வரவேற்கப்படவேண்டிய விடயம்.

❖ உங்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவ கலாநிதிப் பட்டம் பற்றி...?

✱ நான்செய்த ஆன்மீக பணிகளுக்குக் கிடைத்த பெறுமதி என்றே கருதுகிறேன். சைவசித்தாந்த வளர்ச்சிக்குக் கிடைத்த கௌரவமாக இதைக் கருதும் அதேவேளை யாழ்.பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்திற்கு என ஒரு தனியானதுறை நிறுவப்படவேண்டும். அவ்வாறு நிறுவப்பட்டால் இந்தக் கௌரவம் நிறைவுபெறும் எனக் கருதுகிறேன்.

❖ எமது மக்களுக்கு நீங்கள் கூறும் போதனைகள் என்ன?

✱ இன்று எமது சமயம் வளரவேண்டுமாயின் அறிவியல் ரீதியில் தெளிவு வரவேண்டும்.

**செவ்வி: கந்தரதன்**

அறிவியலும் அருளியலும் இணைந்தால் வெற்றி வரும் எனக் கூறும் அதேவேளை- சைவ சமூகத்துக்கு முக்கியமாக ஒன்றைக் கூறவேண்டும். அதாவது சைவ, சமூக, பண்பாடு பாதுக்கப்படவேண்டும். இதனை மக்கள் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும். தனித்து நின்று ஒரு நிலையான உறுதிப்பாட்டுடன் தொழிற்படுவதற்கு இளைஞர்களுக்கு ஏற்ற சமயக்கல்வியை அளித்தல் வேண்டும். எங்களுடைய சமயக்கிரியைகளெல்லாம் மக்களுக்குத் தெளிவாக விளங்கப்படுத்தப்படவேண்டும். ஏனென்றால் , சமுதாயம் அனைத்தையும் கேலியாகவே பார்க்கின்றது. இந்தநிலை மாற்றி அமைக்கப்படவேண்டும்.

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 24ஆவது பட்டமளிப்பு விழாவில் அறுவருக்கு கௌரவ கலாநிதிப் பட்டங்கள் வழங்கப்பட்டன.**
**அவர்களின் திறமைகள், சேவைகள், அனுபவங்களை வெளிக்கொணரும் பொருட்டு கலாநிதிகளுடன் காணப்பட்ட செவ்விகள் உதயனில் தொடர்ந்து பிரசுரமாகின்றன.**
**02**

# தமிழைத் திருத்தமாகப் பேசும், எழுதும் சந்ததியை உருவாக்குவோம்!

❖ உங்களைப் பற்றிக் கூறுங்களேன்?

✱ முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை என்னும் இடத்தில் 03.05.1933 ஆம் ஆண்டு பிறந்தேன். ஆரம்பக்கல்வியை முள்ளியவளை சைவப்பாடசாலையிலும் உயர்கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றேன். தொடர்ந்து மகரஹம ஆங்கில ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி பெற்றேன். வெளிவாரியாகப் பயின்று கலைமாணிப் பட்டத்தைத் தமிழ்ச் சிறப்புப் பட்டமாகப் பெற்றேன்.

மட்டக்களப்பு ஆசிரியகலாசலையில் 4ஆண்டுகளும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 10ஆண்டுகளும் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றிய நான், தொடர்ந்து கல்வி நிர்வாக சேவையில் சேர்ந்து முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் அதிபராக் மூன்றரை வருடங்கள் சேவையாற்றினேன். பின்னர் பதவியுயர்வு பெற்று கல்வி நிர்வாக சேவை தரம் 11 சித்தி பெற்று பிரதம கல்வி அதிகாரியாக இணைந்து 3வருடங்களாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி 1993ஆம் ஆண்டு ஓய்வுபெற்றேன்.

❖ இலக்கியத்துறையில் உங்களுக்குள்ள ஈடுபாடுகள் பற்றி....?

✱ சின்னவயதில் இருந்தே எதை எடுத்தாலும் வாசிக்கவேண்டும் என்ற ஆவல் எனக்கு மிகையாக இருந்தது. அதனால், சிறுவயது முதலே எனக்கு இலக்கியத் துறையில் ஈடுபாடு இருந்தது. முல்லைத்தீவு மாவட்டம் அப்போது எல்லாத் துறைகளிலும் பின்தங்கிய மாவட்டமாக விளங்கியது. அங்கு நூல் நிலையமோ, புத்தகங்களோ, பத்திரிகைகளோ கிடைப்பது மிகவும் அரிதாகவே இருந்தது. அப்படியிருந்தும் தேடித்தேடி வாசிப்பேன். பின்னர் சாவகச்சேரி வந்த பின்னர்தான் எல்லாவற்றையும் இலகுவாகப் பெறமுடிந்தது; அறிய முடிந்தது. அத்துடன் அறிஞர்கள் பலரையும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

❖ பத்திரிகைத்துறையில் பங்காற்றிய அனுபவம் பற்றி...?

✱ சிறுவயதில் பத்திரிகைகளுக்கு நிறைய எழுதினேன். ஆனால், ஒன்றும் வெளிவர வில்லை. 1951ஆம் ஆண்டாக இருக்கவேண்டும். அப்போது முதல்முதலாக எனது ஆக்கம் ஒன்று பத்திரிகையில் வந்தது. அதில் எமது ஊரின் நிலைபற்றி எழுதியிருந்தேன். அன்றுமுதல் ஒரு நம்பிக்கையுடன் எழுத ஆரம்பித்தேன். அதன்பின்னர் 1956 ஆம் ஆண்டு இலக்கிய சம்பந்தமான ஒரு கட்டுரை வெளிவந்தது. இதன் பின்னர் எனது ஆக்கங்கள் தொடர்ந்து பத்திரிகைகளில் வெளிவர ஆரம்பித்தன. 1957-1958 காலப்பகுதிகளில் செய்தியாளரா கவும் இருந்துள்ளேன். எனது ஆக்கங்களைப் பார்த்த பின்னர் என்னைச் செய்தியாளராக இணைத்துக் கொண்டனர். இதன் பின்னர் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள் என நிறையவே எழுதினேன். 52 கட்டுரைகளைத் தொடராக எழுதினேன். அவை அனைவராலும் விரும்பி வாசிக்கப்பட்டன.

❖ கலைத்துறையில் உங்களுக்குள்ள பங்கு எப்படி?

✱ முல்லைத்தீவு , கலை ஆர்வம் மிக்கவர்கள் அதிகமாக உள்ள பிரதேசமாகும். நாடகங்களை எழுதித்தரும்படி பலர் என்னிடம்தான் வருவார்கள். நான் பல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியுள்ளேன். படித்த காலத்தில் நடித்த அனுவமும் உண்டு. 'மலர்ந்த வாழ்வு', 'இருள் நீங்கியது' 'இரவில் முல்லைத்தீவு', 'நன்னித்தீவு கீரன்' 'பண்டாரவன்னியன்', இராஜ ராஜ சோழன்' போன்ற நாடகங்கள் நான் மேடையேற்றிய நாடகங்களுள் குறிப்பிடத்தக்கவை. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 'சிதையா செல்வம்', 'வெற்றித்திருநகல்' என்ற வரலாற்று நாடகம், 'கந்தவராயன் ' நாடகம், 'வாசவதத்தை' எனும் சமஸ்கிருத நாடகம் போன்றவற்றை மேடையேற்றினேன்.

முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வைகாசிப் விசாகப்பொங்கல் விழாவை முன்னிட்டு 'கோவலன் நாடகம்'' நடத்தப்படுவது வழமை. அதனைச் சுருக்கி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவைக்கு எழுதி அனுப்பியிருந்தேன். சில வாரங்களில் அந்த நாடகம் ஒலி பரப்பட்டது.

'கோவலன் கூத்து', 'காத்தவராயன் கூத்து' என்பன தொடர்பாக ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியிருந்தேன். அது பத்திரிகையில் வெளிவந்திருந்தது.

❖ உங்களை ஆதங்கப்படுத்திய விடயங்கள் ஏதாவது உள்ளனவா?

✱ அவ்வாறாயின் நிறைய விடயங்களைக் குறிப்பிடவேண்டும். 'பறைமேளம்' பற்றி எழுதியிருந்தேன். எல்லாவற்றிற்கும் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் அந்த இசைக்கருவி ஏன் ஒதுக்கப்பட்டுள்ளது? அதன் காரணம் என்ன? என்பது பற்றி மறுமலர்ச்சிக் கட்டுரையாக எழுதினேன். அத்துடன், இன்னொரு முக்கிய விடயத்தைக் குறிப்பிட வேண்டும். ஈழத்து இலக்கியம் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. சிங்களவர்களுக்கு கண்டிய நடனம் உள்ளது. எமது தமிழ் ஈழத்திற் குரிய இசை, நடனம் என்று கேட்டால் எதனைக் குறிப்பிடுவது. இது எனக்கு பெரும் ஆதங்கமாக உள்ளது.



கௌரவ கலாநிதி முல்லைமணி

❖ சொற்பொழிவாற்றுவதில் நீங்கள் தேர்ச்சி பெற்றவர் எனக் கூறப்படுகிறதே அதுபற்றி...?

✱ இலங்கை வானொலியில் 'மக்கள் கலைகள்' என்ற தலைப்பில் தொடராக 12 சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளேன். எமது நாட்டார் பாடல்கள் மற்றும் நாட்டார் கலைகள் என்பனவற்றை அறிமுகப்படுத்துவதாக இந்த சொற்பொழிவு அமைந்தது.

முல்லைத்தீவில் நடைபெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கட்டுரைகள் வாசித்துள்ளேன். அவை விமர்சனக் கட்டுரைகளாகவும் சமயக் கட்டுரைகளாகவும் அமைந்தன. யாழ்ப்பாணத்தில் கவியரங்கு நிகழ்வுகளிலும் பங்குபற்றியுள்ளேன்.

❖ நீங்கள் இதுவரை வெளியிட்ட நூல்கள் பற்றி...?

✱ இது வரை 13 நூல்கள் வெளியிட்டுள்ளேன். 'பண்டாரவன்னியன்', 'அரசிகள் அழுவதில்லை' என்ற பெயரில் 12 சிறுகதைத்தொகுதிகள், 'கொண்டுவந்த சீதனம்' என்ற பெயரில்

(VII பக்கம் பார்க்க)

# மனம்விட்டுப் பேசினால் மகிழ்வுடன் வாழலாம்!

கவலை என்பது பெரும்பாலும் பெண்களை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் ஒரு நோயாகக் காணப்படுகின்றது. ஆண்களைவிட பெண்கள்தான் கவலைகளைத் தினமும் நினைத்துக்கொண்டு இருப்பவர் களாக உள்ளனர்.

கவலை ஒரு மனிதனின் ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் உற்சாகத்தையும் குறைத்துவிடும் என்பது உண்மைதான். கவலைகள் மறக்க முடியாதவைதான். அதனால், எந்த நேரமும் அதனையே நினைத்துக் கொண்டிருந்தால் ஏனையவை பற்றி யார் சிந்திப்பது.



ஒரு குடும்பப் பெண் எந்த நேரமும் ஏதாவ தொன்றை நினைத்துக் கவலையடைகின்றாள். அவ்வளவுதான். அந்தக் குடும்பத்தின் நிம்மதியே கெட்டுவிடும். தனது கவலைகளை மட்டும் நினைத்தே அவள் வருந்து வாள். அதனால், அவளது கணவனின் நிம்மதி, பிள்ளைகளின் எதிர்காலம் என எல்லாமே தலைகீழாகிவிடும் என்பதைச் சற்றும் நினைத்துப் பார்ப்பதில்லை. சாதாரணமாகத் தற்போதைய பெண்களிடம் வீணான கவலைகளே உள்ளன. அதனால் எந்தப் பயனும் எவருக்கும் ஏற் படாது.

ஆடம்பர வாழ்க்கையை விரும்பும் எங்கள் பெண்களுக்கு என்ன கவலை தெரியுமா? என்னைவிடப் பக்கத்து வீட்டுப் பெண் நிறைய நகை போட்டிருக்கா. அடுத்த வீட்டு அன்ரி நல்ல சாறி வைத்திருக்கிறா என்பதுதான். ஆனால், உண்மையில் நாம் எம்மிடம் உள்ள வசதி வாய்ப்புகளை வைத்து சந்தோசமாக வாழப்பழகிக்கொள்வோமேயானால் பாதிக் கவலை அதாவது வீணான கவலை தானாகச் சென்றுவிடும். இன்னும் பலருக்கு நிஜமாகவே வாழ்க்கையில் பெரும் இழப்புகள், துன்பங்கள் ஏற்பட்டிருக்கலாம். அவர்களால் அதனை மறக்கமுடியாது என்பது உண்மையிலும் உண்மையானது.

அவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் முதலில் தனிமையிலிருந்து விலகிவிடவேண்டும். அல்லது தனிமையாக இருக்கும் நேரங்களில் வீட்டு வேலைகள், குழந்தைகளின் வேலைகள் என ஏதாவதொன்றைச் செய்த வண்ணம் இருந்தால் நேரம் தானாகப் போய்விடும். மனமும் இலோசாக இருக்கும். சிலர் நடக்காத ஒன்றை நினைத்து அது நடந்துவிடுமோ, இது நடந்துவிடுமோ என்று கூடக் கவலையடைவார்கள். இது ஒரு வீண் சிந்தனை என்றுதான் சொல்லவேண்டும். வாழ்க்கை என்பது போராட்டங்கள், துன்பங்கள், இன்பங்கள், வெறுப்புகள், விருப்புகள் என்ற அனைத்தும் கலந்திருக்கும் ஒன்றாகத் தான் உள்ளது.

எனவே,ஏதாவதொரு கவலை, மன அழுத்தம் என்பன ஏற்படும் போது அதை உங்கள் நண்பியிடமோ, நண்பனிடமோ, கணவனிடமோ, மனைவியிடமோ அல்லது உங்களுக்கு மிக நெருக்கமான - உங்களைப் புரிந்து கொண்ட - எவரிடமாவது கூறலாம். அவ்வாறு கூறும்போது மனச் சுமை ஓரளவு குறைந்து ஆறுதல் கிடைக்கும். கவலைகளுக்கு அதிகம் ஆட்படுபவர்கள் பெண்களாகத்தான் இருக்கிறார்கள்.

எனவே, சகோதரிகளே! கவலையை விடுங்கள். என்ன கவலையென்றாலும் உங்கள் அன்பானவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களுக்கு ஆறுதல் தரக்கூடிய ஒரு நல்ல உறவிடம் உங்கள் கவலைகளைக் கூறுங்கள். மனம் விட்டுப் பேசுங்கள். சந்தோசமாக இருங்கள்.

**கங்கா.**



# சந்தியாவின் கடிதங்கள்

**பிரியமுள்ள பிரியாவிற்கு,**

இன்று பத்திரிகைகளில் மட்டுமல்ல, நம் அயலில் கூட பேசப்படும் ஒரு விடயமாகத் தொலைக்காட்சி மாறிவிட்டது. அதாவது, தொலைக்காட்சி பார்ப்பதால் பெண்கள் சோம்பேறிகளாக மாறிக்கொண்டே வருகின்றார்கள். இந்தத் தொலைக்காட்சியைப் பார்ப்பதால் எந்தப் பலனும் கிட்டப்போவதில்லை என்று விமர்சிப்பதைக் கேட்டிருக்கின்றோம்.

ஆனால், எந்த ஒரு செயலுக்கும் இரு பக்கங்கள் உண்டு என்பதை நாம் உணர மறுக்கின்றோம்.

தொலைக்காட்சி பார்ப்பதால் எவ்வளவுக்கெவ்வளவு தீமையுண்டோ அதே அளவிற்கு நன்மையுமுண்டு என்பதை நாம் மறுக்க முடியாது. எந்தப் பத்திரிகை, சஞ்சிகையை எடுத்தாலும் பெண்கள் தொலைக்காட்சியில் தொடர் நாடகங்களைப் பார்த்து அழுது கொண்டிருக்கிறார்கள் என்ற கேலி இடம்பெற்றிருக்கும்.

தொலைக்காட்சியில் தொடர் நாடகங்கள் மட்டுமா ஒளிபரப்பாகின்றன? எத்தனையோ நல்ல விடயங்கள், சமுதாயத்திற்குப் பயன்தரக்கூடிய சிந்தனைக் களங்கள் ஒளிபரப்பப்படுவதை யாருமே கண்டுகொள்வதில்லை.

உலகில் எத்தனையோ வகையான நாகரிகம், சமுதாயப் பண்பு பரவிக் கிடக்கின்றன. இவற்றையெல்லாம் ஒவ்வொருவரும் நேரில் சென்று காண்பதென்பது இயலாத காரியம். அவற்றை உலகுக்கு - அனைவருக்கும் தெரியப்படுத்தியது,தெரியப் படுத்திக் கொண்டிருப்பது இந்தத் தொலைக்காட்சியே. இதை நாம் மறுக்கமுடியாது.

உலகத்தையே ஓர் அறைக்குள் கொண்டுவந்து காட்சிப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

உலகின் நடப்புகள், அரசியல் என்பவற்றை நேரடியாக நாம் பார்ப்பதைப் போன்றே நமக்கு வெளிப்படுத்தி நிற்கின்றது தொலைக்காட்சி.

இவை மட்டுமா, பாடசாலை மாணவர்கள், இளம் சமுதாயத்தினர், கல்வியியலாளர்கள் எனப் பலரின் தேவைகள், கேள்விகள் என்பவற்றுக்கு விளக்கம் அளித்து நிற்கின்றது.

நமக்கு நிறைய ஆற்றல்கள் இருக்கலாம். ஆனால், அவற்றை வெளிப்படுத்துவதற்கு வேண்டிய ஒரு களம் இல்லாமல் தவித்திருக்கும் நிலையில் அனைத்திற்கும் களம் அமைத்து வெளிப்படுத்தும் ஒரு தளமாகத் தொலைக்காட்சி அமைகின்றது.

உதாரணமாக மாணவர்களுக்கான வினாடிவினா, நாட்டிய - சங்கீதத் திறமையை வெளிப்படுத்தும் களம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றைவிட குடும்பத் தலைவிகளுக்கான ஆலோசனை, குழந்தை வளர்ப்புத் தொடர்பான ஆலோசனை என்பவையும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படுகின்றன.

மொத்தத்தில் ஒரு பொருளுக்கு இதுதான் தன்மையென்று இல்லை. அதனைப் பயன்படுத்துபவர்களைப் பொறுத்தே அந்தப்பொருளில் இருந்து கிடைக்கும் நன்மை, தீமை என்பன பலனாகக் கிடைக்கின்றன.

எனவே, தொலைக்காட்சியைத் தனியாக தொடர் நாடகங்கள் பார்ப்பதற்கு மட்டுமே பயன்படும் சாதனம் என யாருமே கருதக்கூடாது. அதிலிருந்தும் பயனைப்பெற முயற்சிப்பதே நன்மை பயக்கும்.

பிரியமுடன் சந்தியா



# பளிச்சிடும் வதனத்திற்கு...

என்னதான் 'சோப்' போட்டு எத்தனை தடவை கழுவினாலும் சிலருக்கு முகத்தில் எண்ணெய் வடிவது தவிர்க்கமுடியாததாகிவிடுகின்றது. குறிப்பாக வேலைக்குப் போகும் பெண்கள் இதனால் அதிகம் பாதிப்படைகின்றார்கள். வாரத்தில் இரண்டு தடவை - நித்திரை கொள்வதற்கு முன் சந்தனத் தூளைக் குழைத்து முகத்தில் பூசிவிட்டு காலையில் எழுந்ததும் தண்ணீரால் கழுவி மெதுவாகத் துடைத்தால் சில நாள்களில் உங்கள் எண்ணெய் வடியும் முகம் ஓடிப்போய் பளிச்சிடும், அழகிய முகம் வந்து ஒட்டிக்கொள்ளும்.

**அர்த்தமுள்ள வாழ்விற்கு...**

வாழ்க்கையை நேசிக்கக் கற்றுக் கொள்வது ஒரு கலை. துரதிர்ஷ்ட வசமாக அந்தக் கலை சிலருக்கு கைவராமலே போய்விடுகிறது.



# பெண்களின் விடுதலையே சமூகத்தின் விடுதலை

1970 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெண்கள் என்ற விடயம் முக்கியமாக கருதப்படவில்லை. ஆனால், 1975இல் மகளிர் வருடம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் தான் பெண்களின் பங்கு, பெண்களின் பிரச்சினைகள் என்பன கருத்தரங்குகளினூடாக வெளியுலகிற்கு கொண்டு வரப்பட்டன. இதனுடாக 1990ஆம் ஆண்டை பெண்கள் ஆண்டாகப் பிரகடனப்படுத்தினர்.

அடுத்து பெண்விடுதலை - பெண்ணியம் - பெண் உரிமை என்பது தனித்து பொட்டு வைத்தல், பூ வைத்தல், சாறி உடுத்தல், ஜீன்ஸ் போடுதல், சுரிதார் அணிதல் போன்றன அல்ல. ஆண்களும் பெண்களும் அபிவிருத்தி, சமத்துவம், சமாதானம் என்பவற்றில் சமனானவர்கள் என்பதையே காட்டுகின்றது. உலகத்திலே உள்ள சனத்தொகையில் அரைப்பங்கினர் பெண்கள். இதனால், பெண்கள் பூரண விடுதலையடையும் போதே தேச விடுதலையாயினும் சமூக விடுதலையாயினும் முழுமைபெறும். இது வரலாறு கண்ட உண்மை. உதாரணமாக காள்மாக்ஸ், லெனின் போன்றோர் இக்கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவ்வகையில் நோக்கும் போது பெண் முதன்மைப்படுத்தப்பட வேண்டிய ஒருவராகவே உள்ளாள். ஒரு பெண் பல்வேறு பாத்திரங்கள் எடுக்கின்றாள். குழந்தையாக, இளம்பெண்ணாக, மனைவியாக, தாயாக என்றவாறாக அமைந்துள்ளது. உலகத்திலே தோன்றிய அனைத்து உயிர்களிலும் பெண்ணினமே போற்றப்பட வேண்டிய இனம். ஏனெனில், உலகத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணமாக இருப்பவள் பெண்ணே என்றால் அது மிகையாகாது.

உயர்ந்த நிலையில் உள்ள பெண்ணின் வாழ்வானது அவளின் அறிவு, திறன், ஆற்றல் என்பவற்றிலும் பெற்றோரிலும், வாழும் சமூகத்திலும் அவள் வாழ்க்கையில் புகுந்த கணவனிலும் பெற்றெடுத்த பிள்ளைகளிலும் தங்கியுள்ளது.

ஆணின் துணை பெண்ணிற்குத் தேவையாக இருந்தாலும் ஆணை விட பெண்ணே உயர்த்தப்படுகின்றாள். நடைமுறையில் தாய்நாடு, தாய்மொழி என்று நாம் பேசும் மொழிகளில் எல்லாம் தாய் என்ற வார்த்தையே முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்", 'தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை" என்ற ஔவையாரின் பொன்மொழிகளும் தாயின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன.

வீரத்துறவி விவேகானந்தர் சிக்காக்கோ நகரில் உரையாற்றும்போது பெண்களைப் பார்த்து தாய்மார்களே என்று பேசினார். இதனால், அங்கிருந்த பெண்கள் நாங்கள் இன்னும் திருமணம் கூட ஆகாத பெண்களாகவே இருக்கின்றோம். இவர் என்ன எங்களைப் பார்த்து தாய்மார்களே எனக் கூறுகிறார் என்று கதைத்தனர். இதை அவதானித்த விவேகானந்தர் பெண் என்றால் இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளில் 'தாய்' எனப்பொருள்படும். ஆனால், மேலைத் தேய நாடுகளில் 'காதலி' எனப் பொருள்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்...' என்பதனூடாக முதலில் தாயே முதன்மைப்படுத்தப்படுவதைக் காணமுடிகிறது. நாம் இன்ன தாயின் வயிற்றில் பிறந்தோம் என்பது மட்டுமே எமக்குத் தெரிந்த உண்மை. தாய்காட்டித்தான் தந்தையை அறிவோம். தந்தை குருவிடம் பாடம் கற்க விட்ட பின்னர் குருவை அறிகின்றோம். குரு சொல்லித் தந்து தான் தெய்வத்தை அறிகின்றோம். எனவே, இங்கு முதன்மையானது, நிச்சயமானது தாய்.

பிள்ளைகள் தாயிடமே கூடுதலான அன்பைக் காட்டுகின்றனர். தாயானவள் குழந்தையின் உடல் வளர்ச்சியைக் கவனிப்பதுடன் அறிவு வளர்ச்சியையும் கவனித்தல் வேண்டும்.

'எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல பிள்ளைதான். அவன் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே' எனக் குறிப்பிடலாம். இதனால் பெண்களுக்கு கல்வி அவசியம். பெண் ஒரு குடும்பத்தின் ஒளியூட்டும் விளக்கு போன்றவள்.

ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நான்கு குணங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அச்சத்தினால் அஞ்சுபவருக்கு அஞ்சவேண்டும். நாணத்தினால் எமது கற்பைப் பாதுகாக்க வேண்டும். மடம் அதாவது அறியாமையினை வேரொடு பிடுங்கி எறிதல் வேண்டும். பயிர்ப்பு என்பது நன்மை - தீமைகளைப் பகிர்ந்து வாழப்பழக வேண்டும்.

இத்தகைய பெண்கள் அன்பு இதயம் கொண்டவர்களாக, நல்லதையே பேசுபவர்களாக, பொறுமை என்ற நகையணிந்து பெருமை கொள்பவர்களாக வாழ்தல் வேண்டும். ஒவ்வொரு ஆணின்வெற்றிக்குப் பின்னும் துணை நிற்பது பெண்ணே.

இதனால், பெண் 'தற்காத்து தற்கொண்டான் பேணித்தகை சான்ற ,சொற்காத்து சோர்விலாள் பெண்' என்ற வள்ளுவரின் வாக்கிற்கு அமைய நடத்தல் வேண்டும். ஒருவரையொருவர் மதித்தல் வேண்டும். வாழ்க்கை என்பது 'எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது அல்ல. எப்படி வாழ்ந்தோம் என்பது தான் வாழ்க்கை'

**- நா.சசிகலா - ஆசிரியை**
**சுண்டுக்குழி மகளிர் கல்லூரி.**

# சிங்கங்களின் காட்டிலே ஒரு கார்ப் பயணம்...

டென்மார்க்கின் 'கீவெ' (Give) என்ற நகரம் காடுகள், வயல்கள், தோட்டங்கள் நிறைந்த பிரதேசமாகும். இங்கு அப்பிள் மரங்கள் எமது நாட்டில் பற்றை வளவுகளில் கொய்யா நிற்பது போல் ஆங்காங்கே காணப்பட்டன. வழிநெடுகிலும் இவ்வாறான காட்சிகளைக் காணமுடிந்தது. இவற்றின் மத்தியிலேதான் 'சிங்கப்பூங்கா' அமைந்துள்ளது. இங்கு ஒரு வித்தியாசம் என்னவென்றால் கார்களில் செல்பவர்கள் அந்தப் பூங்காவைக் காணக் காரிலேயே உள்ளே செல்ல வசதி செய்யப்பட்டுள்ளது. காரினில் இருந்தபடியே அனைத்தையும் ரசிக்கலாம். நடக்கமுடியாதவர்கள், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு இது வரப்பிரசாதம்தான்.


கார்களை அவதானிக்கும் பெண் சிங்கம் ஒன்று

மூன்று பிரிவுகளாக இந்த மிருகக் காட்சிச்சாலை பிரிக்கப்பட்டிருந்தது. மூன்று பிரிவுகளிலும் கார் நிறுத்துவதற்குத் தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான தரிப்பிடங்களில் காரை நிறுத்திவிட்டு, நடந்துசென்று மிருகங்களைப் பார்க்கவும் முடியும். ஒவ்வொரு தரிப்பிடங்களுக்கு அருகிலும்


ஒட்டகச் சிவிங்கிகள் இளைப்பாறுகின்றன

சிற்றுண்டிச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மிருகக்காட்சிச்சாலையில் சிங்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும் இங்கு ஒட்டகம், வரிக்குதிரை, ஒட்டகச் சிவிங்கி, மனிதக் குரங்கு, காண்டாமிருகம், கவரிமான், நெருப்புக்கோழி, நரி, கரடி போன்ற மிருகங்கள் இயல்பாகவே வலம் வருகின்றன. டென்மார்க் நாட்டின் காலநிலைக்கு ஒத்துவராத இந்தப் பிராணிகள் இங்கு இயல்பாக வாழ்வது அபூர்வமானதுதான்.

இன்னொரு விடயம், எமது யாழ்ப்பாணத்தில் வளர்க்கப்படுகின்ற ஆடுகள், மாடுகள் இங்கு தாராளமாகக் காணப்படுகின்றன. இவற்றை டெனிஸ் மக்கள் அதிசயமாகப் பார்ப்பது எம்மை ஆச்சரியப்படுத்துகிறது. மாடுகளின் எச்சமான சாணத்தையும் அவர்கள் ஆச்சரியமாகப் பார்த்து நிற்கின்றனர்.

சில டெனிஸ் சிறுவர்கள் ஆடுகளைக் கட்டியணைத்து மகிழ்ந்தனர். வரிக்குதிரைகள், காண்டாமிருகங்கள் போன்ற அரிதான விலங்குகள் இங்கு புல் மேய்ந்துகொண்டிருக்கும். இங்கு மிருகங்கள் எதனையும் கூண்டுகளில் அடைத்து வைக்கவில்லை. அவற்றுக்குப் பூரண சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கிறது. நாம் ஒன்றையும் தவறவிடாதிருப்பதற்காக எமக்கு வழிகாட்டிக் கையேடும் தரப்பட்டிருந்தது. ஒவ்வொரு பிரிவையும் பார்த்து ரசித்தபின் அவற்றுக்கு அடையாளம் இட்டவாறு மிருகக் காட்சிச் சாலையை வலம் வந்தோம். இங்குள்ள தாவரங்களும் புதுவிதமானவையாகவே இருந்தன.

**டென்மார்க்கிலிருந்து**
**பகீர்**

எல்லாவற்றையும் கண்டுகளித்த நாம் இறுதியில் ஒரு முக்கியமான - ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த - பகுதிக்கு விரைந்தோம். ஆம். அதுதான் சிங்கங்கள் உள்ள பகுதி. இப்பகுதியில் பாரியளவிற்கு கம்பிவேலிகள் அமைத்து அவற்றின் உள்ளேயே சிங்கங்களை விட்டுள்ளனர். அவற்றுக்கு தாம் அடைக்கப்பட்டுள்ளோமே என்ற உணர்வே இருக்காத அளவுக்கு அந்தப் பிரிவு பாரிய மரங்களைக் கொண்ட பகுதியாக அமைக்கப்பட்டிருந்தது.

சிங்கப் பூங்காவினுள் செல்வதற்கு முன்னர் ஒலிபெருக்கியில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆங்கிலத்திலும் டெனிஸ் மொழியிலும் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. உள்ளே சென்றதும் கார்களின் பூட்டுகளை இறுகப்பூட்டவேண்டும் எனவும் - எக்காரணம்கொண்டும் காரைவிட்டு வெளியில் எவரும் இறங்கக் கூடாது எனவும் - ஆபத்து ஏற்பட்டால் 'ஹோர்ன்'களில் ஒலி எழுப்பும்படியும் அந்த அறிவுறுத்தலில் தெரிவிக்கப்பட்டது.

சிங்கப் பூங்காவின் வாயிலை அடைந்ததும் சிவப்பு விளக்கு ஒன்று எரிந்தது. வாயிலில் நின்றவர்கள் பட்டனை அழுத்தினர். பச்சை விளக்கு எரிந்தது. உடனே தடித்த இரும்புக் கம்பிகளினாலான கதவுகள் தன்னியக்கமாகத் திறக்கப்பட்டன. எமது காருடன் சேர்ந்து 10 கார்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டன. நாங்கள் முன்னால் சென்றோம்.


காண்போரைக் கவரும் வரிக் குதிரைகள்

உள்ளே செல்ல மனதுக்கு அச்சமாகவே இருந்தது. எந்தநேரமும் சிங்கம் எம்மீது பாயுமோ (கார்மீது) என்ற அச்ச உணர்வு எம்மை அறியாமலே ஏற்பட்டது. எல்லா இடங்களிலும் மிருகங்களைக் கூண்டில் அடைத்துவிட்டுத்தான் எம்மைப் பார்க்க அனுமதிப்பார்கள். இங்கு எம்மைக் கூண்டில் அடைத்துவிட்டு மிருகங்களைப் பார்க்க அனுமதித்திருப்பது வேடிக்கைதான்.

கார் மெதுவாக உள்ளே நுழைகின்றது. தொடர்ந்து உள்ளே அமைக்கப் பட்டிருந்த கிரவல் பாதை வழியே புழுதியைக் கிளப்பிக்கொண்டு எமது கார் செல்ல பின்னே அணி வகுத்தபடி ஏனைய கார்கள் அழகாக எம்மைத் தொடர்ந்து வந்தன. இந்த அழகை இரசிக்கும் எண்ணம் எமக்கில்லை. காரணம் சிங்கத்தை நோக்கியே எமது பார்வை இருந்தது. திடீரென எமது காரினுள் இருந்த ஒரு சிறுவன் சிங்கம்... சிங்கம்... எனக் கத்தினான். பெரிய சிங்கம் ஒன்று மரம் ஒன்றின் கீழ் இளைப்பாறிக்கொண்டிருந்தது. அது எமது காரை நிமிர்ந்து பார்த்து தலையசைத்தது. நாம் தயாராக வைத்திருந்த கமெராவினால் அதனைப் படம் பிடித்தோம். பின்னர் கார் மெதுவாக நகர்ந்தது. எமது காரினுள் பயணித்த டென்மார்க்கில் நீண்டகாலமாக வசிக்கும் ஒருவர் அதிர்ச்சியான தகவல் ஒன்றைக் கூறினார். கடந்த ஆண்டு இவ்வாறு சிங்கத்தைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் தூரத்தில் இருந்த சிங்கம் ஒன்றைப் படம்பிடிப்பதற்காகக் காரைவிட்டு இறங்கியுள்ளார். அவர் தூரத்தில் உள்ள சிங்கத்தை நோக்கியபடி இருந்ததால் அருகில் பற்றைகளுக்குள் மறைந்திருந்த சிங்கங்களை அவரால் அவதானிக்க முடியவில்லை. அவை திடீரென வெளியேவந்து அவர்கள் மீது பாய்ந்தன. அவரது காரில் வந்தவர்கள் தமக்கும் ஆபத்து நேரும் என அஞ்சிக் கார்க் கதவை மூடிவிட்டனர். அவர்கள் 'ஹோர்ன்' எழுப்பியும் நீண்டநேரத்தின் பின்னரே அங்கு கடமையில் நின்ற ஊழியர்கள் வந்துள்ளனர். அவரின் உயிரைக் காப்பாற்ற முடியவில்லையாம்.

இதனைக் கேட்டதும் எமக்கு நடுக்கமாக இருந்தது. தொடர்ந்து எமது கார் சென்றுகொண்டிருந்தது. திடீரென குறுக்கே சிங்கங்கள் கடந்து சென்றன. எமது காரின் வேகத்தைக் குறைத்துக்கொண்டு அவை செல்வதற்கு இடங்கொடுத்தோம். அவை கடந்து சென்றதும் கார் நகர்ந்தது. வேறோர் இடத்தில் பெரும் எண்ணிக்கையான சிங்கங்கள் காணப்பட்டன. ஓர் இடத்தில் காரை நிறுத்தியபோது பெரிய சிங்கம் ஒன்று எமது காரின்


புல்மேயும் காண்டா மிருகங்கள்

அருகில் வந்து எம்மை முறைத்துப் பார்த்தது. 'யுரேசிக் பார்க்' படத்தில் டைனோசர் காரினுள் இருந்தவர்களை நெருங்கிப் பார்த்ததுபோல் ஓர் உணர்வு எமக்கு ஏற்பட்டது. பின்னர் எமது காரை வலம்வந்த சிங்கம் போய்விட்டது. அதன் பின்னர்தான் எமக்கு சுய உணர்வே வந்தது. வேறோர் இடத்தில் மாடு ஒன்றைப் பல சிங்கங்கள் ருசி பார்த்துக்கொண்டிருந்தன. பின்னர்தான் அறிந்தோம் தினமும் அவற்றுக்கு மாடுகளைத்தான் உணவாகக் கொடுப்பார்களாம். ஆங்காங்கே மாடுகளின் எச்சங்களும் பரவிக் காணப்பட்டன. துர்வாடை வீசியது.

மூன்று முறை காரில் சிங்கப் பூங்காவை வலம்வந்தவர்களாய் வெளியே வந்தோம். இது ஒரு புது அனுபவம் தான். வருடத்தில் குறிப்பிட்ட சில மாதங்கள் மட்டுமே இந்த மிருகக் காட்சிச்சாலை திறக்கப்படும். பின்னர் பனிகொட்டும் மாரி காலத்தில் மிருகங்கள் இங்கிருந்து கொண்டுசெல்லப்பட்டு பாதுகாப்பான இடங்களில் வைக்கப்படுகின்றன. இவற்றை எல்லாம் கண்ணுற்ற நாம் மறுநாள் டென்மார்க்கின் 'எஸ்பெயா' (Esbjerg) நகரத்தில் மீன்களுக்கென தனியாக அமைக்கப்பட்ட நூதனசாலை ஒன்றுக்குச் செல்ல ஆயத்தமானோம். இந்த நூதனசாலை பற்றிய பல சுவாரஸ்யமான விடயங்களை அடுத்த தொடரில் பார்ப்போம்.

(வளரும்)

## தமிழைத் திருத்தமாகப்...

(III ஆம் பக்கத் தொடர்ச்சி)

14 சிறுகதைத் தொகுதிகள், 'தான்தோன்றீஸ்வரர் பாமாலை', 'வில்வையடிப்பிள்ளையார் பாமாலை', 'காவத்தை நீலகாமம் முத்துமாரி அம்மன் திருவூஞ்சல்' என்பனவும் மற்றும் 'மல்லிகை வனம்', 'வன்னியர் திலகம்', 'கமுகஞ் சோலை', மழைக்கோலம்' ஆகிய நாவல்களும், க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான தமிழ்மொழிப் பயிற்சிப் புத்தகம் ஆகியவற்றையும் வெளியிட்டேன். இது 1975ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

❖ உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றிக் கூறுங்களேன்?

✱ வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினால் 'அரசிகள் அழுவதில்லை', 'வன்னியர் திலகம்' ஆகிய நூல்களுக்கு 'சாகித்திய மண்டலப்பரிசு' வழங்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் உயர் விருதான 'ஆளுநர் விருது', 'கமுகஞ்சோலை', 'வன்னியர் திலகம்' ஆகிய நாவல்களுக்கு வழங்கப்பட்டது.

மத்திய அரசினால் 'கலாபூசணம்', வவுனியா கலை இலக்கிய வட்டத்தினால் 'இலக்கியச் செல்வர்', இந்துகலாசார அமைச்சினால் 'தமிழ்மணி', முல்லைத்தீவு பாரதி இலக்கிய மன்றத்தினால் 'கலைஞர் திலகம்' மற்றும் 'அகில இலங்கை சமாதான நீதிவான்' ஆகிய கௌரவப் பட்டங்கள் எனக்கு வழங்கப்பட்டன.

அத்துடன், கொழும்பு 'ஞானம்' சஞ்சிகையினால் கடந்த மாதம் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் 'கொக்கிளாய் மாமி' என்ற எனது சிறுகதைக்கு முதற் பரிசு கிடைத்தது. கொக்கிளாய்ப் பகுதியில் எமது தமிழ் மக்கள் இராணுவத்தினரால் விரட்டியடிக்கப்பட்டமை தொடர்பாக எழுதப்பட்ட சிறுகதை அது.

❖ முல்லைமணி என்று உங்களுக்கு பெயர் வரக் காரணம்...?

✱ முல்லை மணி என்பது எனது புனைபெயர். பட்டப்பெயர் அல்ல. எனக்கு நானாக சூட்டிக்கொண்டது. சுப்பிரமணியம் என்றால் ஆயிரம் சுப்பிரமணியங்கள் உள்ளனர். இது என்னை அடையாளம் காணவைக்கிறது (சிரிக்கிறார்). ஒருமுறை 'முல்லைமணி', வவுனியா என்று முகவரியிடப் பட்டு ஒரு கடிதம் எனக்கு அனுப்பப்பட்டது. அக்கடிதம் எனக்குக் கிடைத்தது. ஆச்சரியம் தான். அப்போதுதான் எனது 'முல்லைமணி' எனும் பெயரின் மகிமையை உணர்ந்தேன்.

❖ உள்நாட்டை விட ஏனைய நாடுகளிலும் உங்கள் படைப்புகள் வெளிவந்துள்ளனவா?

✱ கனடாவில் வெளியாகும் 'உதயன்' பத்திரிகை மற்றும் 'கொம்பறை' எனும் சஞ்சிகை ஆகியவற்றில் எனது ஆக்கங்கள் தொடர்ந்து வெளியாகி வருகின்றன.

'கொம்பறை' என்பதைப் பற்றி இங்கு குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும். 'கொம்பறை' என்பது அந்தக்காலத்தில் நெல்லை நீண்ட காலத்துக்குப் பேணுவதற்கு வீட்டின் முற்றத்தில் மண்ணினால் சுவர் அமைத்து கூரை போடப்பட்டு அமைக்கப்படும் ஒரு களஞ்சிய அறை ஆகும். இதனுள் வைக்கப்படும் நெல் எவ்வளவு காலத்துக்கும் பழுதடையாமல் இருக்கும். எமது பாரம்பரியத்தை நினைவு கூரும் முகமாகவே கனடா தமிழ் நெஞ்சங்கள் தமது சஞ்சிகைக்கு 'கொம்பறை' எனப் பெயரிட்டுள்ளனர். அத்துடன், பிரான்ஸ் நாட்டில் வெளியாகும் 'எரிமலை' லண்டனில் வெளியிடப்படும் 'விடுதலை' ஆகிய பத்திரிகைகளிலும் எனது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இந்தியாவில் கலைஞர் மு.கருணாநிதி 'பண்டாரவன்னியன்' எனும் எனது நூலை அடிப்படையாக வைத்து 'பாயும்புலி பண்டாரவன்னியன்' என்ற தலைப்பில் நூல்வெளியிட்டுள்ளார். ஆனால், எனது பெயர் எதையும் குறிப்பிடவில்லை. என்னிடம் அனுமதி பெறவும் இல்லை.

❖ உங்களுக்குக் கிடைத்த கௌரவ கலாநிதிப்பட்டம் பற்றி...?

✱ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டங்களுக்கு எப்போதும் உயர்ந்த மதிப்பு உள்ளது. பலபேராசிரியர்கள் இணைந்து எடுத்த முடிவுதான் எனக்குக் கிடைக்கப் பெற்ற கௌரவம். இதனால் நான் மகிழ்வடைகின்றேன்.

❖ எமது தமிழ் சமூகத்துக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?

✱ நாம் எதற்காகப் போராடுகின்றோமோ அந்தத் தமிழைத் திருத்தமாக பேசும், எழுதும் சந்ததி அருகிச் செல்கின்றது. அனைவரும் தமிழில் நிறைய வாசிக்க வேண்டும். நிறையப் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. ஆனால், அவற்றை வெளியிடுபவர்கள் பலர் அவசரக் குடுக்கைகளாய் எழுத்துப்பிழைகள், கருத்துப் பிழைகளுடன் வெளியிடுகின்றமை மிகவும் வேதனைக்குரிய விடயம். இவ்வாறானவர்கள் ஆழமாகச் சிந்தித்து, நன்கு வாசித்து, தெளிந்து புத்தகங்களை வெளியிட முன்வர வேண்டும். எமது அடையாளம் மொழியும் பண்பாடுமாகும். அதனை முதலில் மேலோங்கச் செய்ய வேண்டும். கலைகளைப் போற்றவேண்டும்.

# கடல் ஒருபோதும் வற்றுவதில்லை!

பொதுவாக ஏரிகள், குளங்கள் போன்ற நீர்நிலைகள் வேனிற்காலத்தில் வறண்டு போகின்றன. இவற்றிலுள்ள தண்ணீர் நீராவியாகிப் பறந்துபோவதே இதற்குக் காரணம். கடல் நீரும் நீராவியாவதுண்டு. ஆனால், கடல் வற்றுவதில்லை. இதன் காரணம் என்ன என்பது தெரியுமா?

உலகிலேயே மிகப்பெரிய நீர்த்தேக்கங்கள் கடல்கள் தான். கடல்களிலிருந்து ஆண்டுதோறும் லட்சணக்கான கன மீற்றர் தண் ணீர் நீராவியாக எழும்பி வாயு மண்டலத்தில் கலக்கின்றது. இந்த நீர் மேகமாக உருக் கொண்டு மழையாக மாறி நிலத்திலே பொழிகிறது. மழைநீர் ஆறுகள், கால்வாய்கள் வழியாக மீண்டும் கடலுக்கு வந்து சேருகிறது. ஆகவேதான் நீராவியாகும் செயற்பாங்கு தொடர்ந்து நிகழ்ந்த போதிலும் கடலில் நீர் மட்டம் எப்பொழுதுமே குறையாமல் இருக்கிறது. இடைவிடாது நடக்கும் இச்சூழல் நிகழ்ச்சி கடலில் நீரை வற்றாமலிருக்க உதவுகிறது. ஏரிகளிலும், குளங்களிலும் உள்ள நீரின் அளவு கடலுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவு. எனவே, பல நீர்நிலைகள் வேனிற் காலத்தில் அறவே வற்றிவிடுகின்றன. நீராவியாதல் மூலம் எந்த அளவுக்குக் கடல்நீர் வற்றுகிறதோ அந்த அளவுக்கு மழைநீரும், பனி உருகிய தண்ணீரும் ஆறுகள் மூலம் கடலில் வந்து விடுகிறது.



நீரின் சுழற்சி தொடர்ந்து நடைபெறுவது மனித குலத்துக்கு ஒரு வரப்பிரசாதம். மண்ணின் அடியில் உறையும் மழைநீரின் ஈரத்தினால் தாவரங்கள் வளருகின்றன. மழை நீர்பாசனத்துக்கும் பயன்படுகிறது. நீர்சக்கரம் மட்டும் சுழலாமல் இருந்தால் மண் மீது உயிர் வாழ்க்கை அரிதாகிவிடும்.

- கவிதா

# கொக்கின் ஆசை

இரவு நேரம் கொக்கு ஒன்று வானில் பறந்து நிலவின் இனிமையை அனுபவித்துக் கொண்டிருந்தது. 'இந்த நிலவு எவ்வளவு அழகாய் இருக்கிறது. குளிர்ச்சியான நல்ல ஒளியைத் தருகிறது. ஆனாலும், அதன் ஒரு பகுதியில் இருளாகத் தெரிகிறது' என்று சிந்தித்துக் கொண்டது.



சரி, இந்த நிலவிடம் சென்று கேட்டு விடுவோம் என்று எண்ணியபடி நிலவை நோக்கிப் பறக்கத் தொடங்கியது. என்ன ஆச்சரியம். நிலவை நெருங்க முடியவில்லை. தூரத்தூரப்போய்க் கொண்டி ருந்தது. மேகங்கள் கொக்கை வியப்புடன் பார்த்தன. 'மேகமே ஏன் நிலவின் ஒரு பகுதியில் கறுப்பாகக் கறை படிந்துள்ளது. இந்த நிலவு ஏன் அதை நீக்கிக் கொள்ள முயவில்லை, என்று கொக்கு அதனிடம் கேட்டது.

உயர்ந்தவர்கள் தம்மிடம் உள்ள உயர் குணங்களால் கீழான குணங்களை மறந்து விடுவார்கள். அதுபோன்றே நிலவும் உலகத்திற்கு ஒளி கொடுத்துக் கொண்டிருக்கிறது. இதனால், அதன் கறை கூட அதற்கு அழகுதான்' என்றது.

இதனைக் கேட்ட கொக்கு நிலவை வாழ்த்திக் கொண்டு தன் வழியே பறந்து போனது.

அப்பம்மா.

# தெரிந்து கொள்ளுங்கள்

- உலகிலேயே முதன் முதலில் சீனாவில் தான் பல் துலக்கும் பிரஷைத் (Brush) தயாரித்தார்கள்.
- கருணைக் கொலை செய்ய முதன்முதலில் அனுமதி வழங்கிய நாடு நெதர்லாந்து ஆகும்.
- சுரங்க ரயில்ப் பாதை முதன்முதலில் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.
- உலகிலேயே ரோமானியர்கள்தான் முதன் முதலில் பூட்டுக்களையும் சாவிகளையும் கண்டுபிடித்தனர்.
- உலகிலேயே எகிப்தியர்கள் தான் முதன் முதலில் ரொட்டியை அறிமுகப்படுத்தினார்கள்.
- உலகில் முதன்முதலில் ஐஸ்கிறீமை சாப்பிட்டவர்கள் ரோமியர்கள்.
- சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைப்பீடம் ஜெனிவாவில் உள்ளது.
- உலகிலேயே அதிகமான படையினரைக் கொண்ட நாடு சீனா ஆகும்.
- உலகிலேயே முதன்முதலாக இசைத்தட்டுகள் (C.D) 1985 ஆம் ஆண்டில் வெளிவந்தன.
- உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் தலைமையகம் ரோமில் (இத்தாலி) உள்ளது
- சீபிளேனை (Sea Plane) முதன்முதலாக சீனாவே தயாரித்தது

ஜீவன், தரம் - 9சி, யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி.

# விடுகதைகள்

- இரவு வந்தால் தோட்டத்தில் எத்தனையோ பூ பூக்கும். பொழுது விடிந்ததுமே பூவெல்லாம் மறைந்து விடும். அது என்ன?
- ஆடச் சொல்லி சட்டை போடுவார். ஆடும் முன்பே கழற்றி விடுவார். அவர் யார்?
- அப்பா வீட்டுக் குதிரை அற்புதமான குதிரை. காதைப் பிடித்தால் வாயால் கடிக்கும் அது என்ன?
- வேகமாகப் போகின்ற அம்மணிக்கு விழுந்த கைக்குட்டையை எடுக்க நேரமில்லை. அது என்ன?
- மஞ்சள் புடைடவை கட்டி வரிசையாய்ப் பத்துப் பெண்கள் கயிற்றைப் பிடித்துக் கொண்டு கடையிலே தொங்குகின்றனர். அவர் யார்?
- என் பெயரைக் கேட்பவர் அநேகர், என்னைப் போட்டு மிதிப்பவரும் அநேகர். நான் யார் பெயரையும் கேட்பதில்லை. நான் எவரையும் போட்டு மிதிப்பதும் இல்லை. நான் யார்?

விடைகள் : நட்சத்திரம் 2. பம்பரம் 3. கத்தரிக்கோல் 4. பறவை இறகு 5. வாழைக்குலை 6. தெரு

சு.நிரோஜினி, தரம் - 4ஏ, யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

# பறந்து வா

குருவி குருவி பறந்து வா
கொஞ்சிப் பேசப் பறந்து வா

அறுகம் புல்லைத் தூக்க வா
அழகாய்க் கூடு கட்ட வா

பறவைகளோடு சேர்ந்து வா
பழம் தின்னலாம் பறந்து வா

கூடிக் குலாவலாம் பறந்து வா
துள்ளிக் குதித்துப் பறந்து வா

ம.கிரிஸ்லின் கஜானா
தரம் - 5 ஏ,
யா.கொக்குவில் இந்து
ஆரம்ப பாடசாலை.

# கோபம் பொல்லாதது

கரடி ஒன்று பசியினாலே - காடு
முழுவதும் சென்றது
மரத்தின் மீது தொங்கி நின்ற - தேனீக்
கூட்டைக் கண்டது.

கிட்டச் சென்று தேனைப் பருக - மிக்க
ஆசை கொண்டது.
தட்ட அருகிற் சென்றபோது - தேனீ
ஒன்று கண்டது

கூட்டைக்கலைக்க வந்ததென்று -
குழம்பி நின்ற தேனீயும்
வேட்டையாடும் வேடன் வீச்சில் -
மூக்கில் தாக்கிச் சென்றது

நோவைத் தாங்கா கரடி அங்கு -
கோபம் மிக்கக் கொண்டது
நாவைக் கடித்துத் தொங்கும் கூட்டின் -
நல்ல கொம்பைத் தொட்டது

கொம்பர் செய்த ஆட்டத்தாலே -
கூட்டுத் தேனீக்கள் குழம்பின
வம்பு செய்த கரடியாரை - வளைத்துச்
சுற்றிக் கொட்டின

தேனீ ஒன்றால் கோபம் கொண்டேன் -
தீரா நோவும் வந்தது
பாவி கொண்ட கோபத்தாலே - பட்ட
துன்பம் போதுமே

என்று சொல்லி அழுத கரடி - எங்கோ
சென்று மறைந்தது
நன்று பிள்ளை பாடம் சொன்னேன்
கோபம் கொள்ளல் பாவமே.

சிவசுப்பிரமணியம் வாமதீபன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

# வழி காட்டுங்கள் பார்ப்போம்!



தம்பி, தங்கைகளே!

குருவிக்குஞ்சு கூட்டுக்குள் புகுந்து மறுபுறம் தாய்க்குருவியுடன் சேர்ந்து பறக்க விரும்புகிறது.

இந்தக் குருவிக் குஞ்சுக்கு வழி காட்டுங்கள் பார்ப்போம்.


# உங்களின் கைவண்ணங்கள்



தி.அருள்வாகினி,
தரம் - 8டி,
யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.



சு.புவிதரன்,
தரம் - 8ஈ,
யாழ்.மத்திய கல்லூரி.



கு.பிரசாந்தி,
தரம் - 6சி, யா.கொக்குவில் இந்துக்கல்லூரி.

# செங்காந்தள் மலர் என்ன, எங்களுக்குக் கிட்டாத ஒன்று என நினைத்தாயா?

*செங்களம் படக்கொன்று அவுணர்த் தேய்த்த*
*செங்கோல் அம்பின் செங்கோட்டு யானைக்*
*கழல்தொடிச் சேஎய் குன்றம்*
*குருதிப் பூவின் குலைக்காந் தட்டே.*



இப்பாட்டைப் பாடியவர் திப்புத்தோளார் என்பவர். இது தோழி தலைவனைப் பார்த்துச் சொல்லும் முறையில் அமைந்திருக்கின்றது; குறுந்தொகையில் வரும் குறிஞ்சித் திணைப் பாடல்களில் இதுவும் ஒன்று.

காந்தள் மலர் எனக்குக் கிடைக்காத அரும்பொருள் அன்று. கிடைத்தற்கரிய பொருளைக் கொடுப்பதே ஒருவரை மகிழ்வூட்டும் வழி. ஒருவர் அன்பைப் பெறுவதற்காக அவர்களுக்கு கொண்டு போய்க் கொடுக்கும் பொருளுக்குக் கையுறை என்பது பெயர். தலைவன் தந்த கையுறையைத் தோழி மறுத்த செய்தியைக் கூறிற்று இப்பாட்டு. பட - தோன்ற, உண்டாக. தேய்த்தல் - அடியோடு அழித்தல். யானையின் தந்தம் வெண்ணிறமுள்ளது. இங்கு செங்கோடு என்று குறிப்பிட்டுள்ளது. போர்க்களத்திலே பகைவர்களைக் குத்திச் செந்நிறம் பொருந்தியிருப்பதனால் வெண்கோட்டைச்

## தலைவனைப் பார்த்துக் கிண்டலடிக்கிறாள் தோழி

செங்கோடு என்றார்.

பண்டைக்காலத்திலே போர் வீரர்கள் புயத்திலே வளை அணிந்திருப்பர். அதற்கே வாகு வளையம் அல்லது தோல்வளை என்பது பெயர். குறிஞ்சி நிலத்தின் தெய்வம் முருகன் என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. பாட்டின் பொருள் மேற்சொன்னவாறு அமையும்.

கவிதையை விரித்துப் பொருள் கொள்ளும் போது:- தலைவன் தன் காதலியைத் தனியாகக் காண இயலவில்லை. அவளைச் சுற்றி எப்பொழுதும் தோழிமார் சூழ்ந்திருக்கின்றனர். வெளியில் வந்தால் இந்த நிலை; வீட்டில் இருந்தால், பெற்றோர் அவளைக் கண்காணித்து வருகின்றனர். ஆதலால், தன் காதலியைக் காணமுடியாமல் தவிக்கிறான் தலைவன் என்பது பாட்டின் சுருக்கமான பொருள்.

நாமே அவளைக் காணமுடியாது; பிறர் உதவியைக் கொண்டுதான் அவளைப் பார்க்கவேண்டும். அவளுடைய உயிர்த்தோழியின் உதவி கிடைத்தால்தான் அவளைக் கண்டு கூடி இன்புறலாம். ஆதலால், அவளைக் காண்போம் என்று புறப்பட்டான் தலைவன்.

ஒருவரைக் காணப்போகும்போது அவரை மகிழச் செய்வதற்காக ஏதேனும் ஒருபொருளைக் கொண்டு போவது பண்டைக்கால வழக்கம். அவ்வழக்கம் இன்றும் நம்மை விட்டுப் பிரிந்துவிடவில்லை. சிறியவர்களுக்குத் தின்பண்டம் வாங்கிக் கொண்டுபோகின்றோம். பெரியவர்களானால் அவர்களிடம் ஏதேனும் காரியத்தை நாடிச்சென்றால், பழங்களோ, வேறு பண்டங்களோ வாங்கிக்கொண்டு செல்கின்றோம். அவற்றைக் கொடுத்து மாலையிட்டு மதிப்புச் செய்து நாம் நாடி வந்த காரியத்தை நவில்கின்றோம்.

தலைமகளின் கூட்டத்தைப் பெறுவதற்காக தோழியின் தயவை நாடிச்சென்ற தலைவன் வெறுங்கையுடன் செல்லவில்லை. பெண்டிர்க்கு மலர்மீது விருப்பம். மலரால் அவர்களை மகிழ்வித்து விடலாம். ஆதலால், தலைவன் அழகான செங்காந்தள் மலரைக் கையிலே கொண்டு போனான். தோழியைக் கண்டான். அவள் கையிலே அந்த மலரைக்கொடுத்தான்.

'தோழியே! நான் என் உயிர் அனைய தலைவியைக் காண இயலாமல் தவிக்கின்றேன்! நீதான் அவளை நான் சந்திக்கும்படி செய்யவேண்டும். இது உன்னைத்

## இலக்கியப் பூங்கா

தவிர வேறு யாராலும் இயலாத செயல்' என்று கூறிக் கெஞ்சினான். அதற்குத் தோழி கூறிய பதிலாக அமைகிறது பாட்டு.

'தலைவனே! நீ கொடுத்த இம்மலர் எங்களுக்குப் பொருள் அன்று. போர்க்களம் ஒரே இரத்த வெள்ளமாகும்படி அசுரர்களைக் கொன்று அழித்தவன், இரத்தக்கறை படிந்த சிவந்த நீளமான அம்பையுடையவன், சிவந்த கொம்புள்ள யானையை உடையவன், கழலும்படி அணிந்திருக்கின்ற வீர வளையல் என்னும் போர் வளையலைப் புயத்திலே அணிந்தவன், இத்தகைய கோலத்தையுடைய முருகன் வாழ்கின்ற எங்கள் மலையில் காந்தள் மலருக்குப் பஞ்சமேயில்லை. இரத்தம் போல சிவந்த நிறமுள்ள இந்தக் காந்தள் மலர் கொத்துக் கொத்தாய் மலர்ந்துள்ளன. ஆதலால் எங்களுக்கு எளிதில் கிடைக்கும் இந்தச் சிறிய காந்தள் மலரைக் கொடுத்து பெரிய காரியத்தை முடித்துக் கொள்ளவா நினைக்கின்றாய். நீ மிகவும் கெட்டிக்காரன்! இந்த மலர் எமக்கு வேண்டா. நீயே இந்த மலரை எடுத்துக் கொண்டு வந்த வழியைப் பார்த்துக்கொண்டு போ - என்பதாகும் அது.

இலக்கியன்

---

# என்ன சமூகமடா...!

கூற்றம் நல்லது செய்கிறதோ இல்லையோ சில நேரங்களில் தீமைக்கு அடிகோலாய் மாறிவிடுகின்றதென்பது நானறிந்த உண்மை. வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு அவல் கிடைத்தால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இதுவும்.

அவனது எண்ணங்கள் நன்மையானவை; பிரயோசமானவை. அனைவருக்கும் நன்மையையே நினைப்பவன். இருந்தாலும் சமூகம் அவனது குறைகளையே தேடிக்கொண்டிருந்தது. அவனும் சோர்ந்து போகிறவனுமல்ல. அடிமேல் அடி அடித்தால்....என்பார்களே. அப்படியேதான் அவனுக்கும் நடந்தது.

ஒரு நாள் அவன் என்னிடம் வந்தான். அவனது முகம் மாறியிருந்தது. முகமெல்லாம் வீங்கி நீண்ட நேரம் அழுதவன்போலக் காட்சியளித்தான். அவனைப் பார்த்த எனக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. எதற்குமே கலங்காதவன், அடிபணியாதவன் என்றெல்லாம் என் நினைப்பில் இருந்த அவனுக்கா இந்த நிலை? அவனது நிலை கண்டு நான் பதறியவனாகக் கேட்டேன்.

ஏன் என்ன பிரச்சினை?

நான் கேட்டதும்தான் தாமதம் ஓவென்று அவன் அழத்தொடங்கினான்.

நல்லவனின் இரத்தத் துளிகள் நிலத்தில் சிந்தக்கூடாது என்பார்கள். ஆனால், எனக்கோ அவனது கண்களிலிருந்து வெளிப்பட்ட கண்ணீர் திவலைகள் இரத்தத் துளிகளுக்கு ஒப்பானதாக இருந்தது. அவனது அழுகை தணிந்ததும் அவனே கேட்டான்.

அன்பை ஏன் கொச்சைப்படுத்துகிறார்கள்......?

அவனது பிரச்சினை என்னவென்றே தெரியாமல் எனக்குச் சொல்லத் தெரியவில்லை.

என்ன பிரச்சினை என்று சொல்ல முடியுமா.... என்று பரிவாகக் கேட்டேன்.

என்னுடையது தூய அன்பு, ஆழமான அன்பு, அதில் காதலும் இல்லை காமமும் இல்லையென்றான்.

அவன் கூறிய வார்த்தைகள் எனக்கோ புரியக் கஷ்ரமாக இருந்தது. ஆயினும், பின்னர் அவனது நிலையுணர்ந்ததால் எனக்குத் தெளிவாகப் புலப்பட்டது.

இது எல்லோருக்கும் புரிய வாய்ப்பில்லை. புரிந்தவர்கள் அவனை உயரத்தில் வைப்பார்கள். புரியாதவர்கள் அவனுக்கு பட்டம் சூட்டுவார்கள். இதுதான் நடந்தது.

புரியாதவர்களுக்கு அன்பு, காதல், காமம் இவைகளுக்கு அர்த்தம் தெரிவதில்லை. சொல்லப்போனால் தூய்மையான அன்பையே அறியாதவர்களாய் இருக்கிறார்கள் என்பதே உண்மை. அப்படியிருப்பவர்கள்தான் தமது இயலாமையின் காரணமாக பழி சுமத்துவதை வழக்கமாகக் கொள்ளுகின்றார்கள்.



கடுகுக்கதை


பரஸ்பரம் சண்டைகள், விட்டுக்கொடுப்புகள், ஊடல்கள் எல்லோமே தூய அன்புள்ளவர்களுக்கு ஏற்படக்கூடிய நடத்தைகள். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு இருவரும் எதிர்ப் பாலுடையவர்கள் என்றுமட்டுமே புரியும். ஆயினும், ஆயினும், உள்ளே இருக்கின்ற ஆழமான அன்பு புரிவதேயில்லை.

நான் அவனுக்குப் புரியவைத்தேன். அவன் தெளிவடைந்தான். இது என்ன சமூகமப்பா....வெளியேறினான். இப்பொழுது அவனது முகம் பழைய பிரகாசத்திற்கு வந்திருந்தது. நடந்தான். நடந்துகொண்டேயிருந்தான்

ஆக்கம்- சூரியவேந்தன், ஊறணி

---

# சமாதானம்



ஒரு 'ஜீவநடை' என்னும்
பாவ படலமாய
இயங்கியலற்ற ஒரு மானுட விலங்காக
அலங்காமல் தொலைகின்ற (து) வாழ்க்கை.

அப்போது
சீழுக்குள் சிதைந்த சமாதானம்
இப்போது
குருதியைக் கொப்பளிக்கின்றது.

ஒப்பந்தங்களால்
நிர்ப்பந்திக்கப்படும்
சந்தர்ப்பவாத சமாதானத்தால்
வாழ்வியல் வளம் அழகாகுமா?

....... தோல்விகளிலிருந்து மீள - வெறும்
வேள்விகள் மட்டும் வேண்டியதில்லை.
எஜமான எடுப்புக்களை எடுத்தெறிந்து
உனக்கு நானும்
எனக்கு நீயும்
உள்ளதை உள்ளபடி
உள்ளார்ந்தமாய் உணர்ந்தால்
பூலோகம் ஒரு புதுக்கோலமாகும்.
அதுவரை,
ஆயிரம் அதீத வலிகளை
உள்ளடக்கிய
அகோரச் சொல்லொன்றை
எங்கள் அகராதியில்
புதிதாக இணையுங்கள்
அதன் எதிர்ச் சொல்லும், செயலும்
'சமாதானம்' என்றிருந்தால்
சந்தோஷிப்பேன் நான்....!

மானிப்பூர் ரட்ணேஷ்.

# சுடலை ஞானம்

ராஜா, சேகர், நான்,
நாங்கள் மூவரும் ஒரே வயதினர். ஒரே ஊரவர். ஒன்றாய்ப் படித்தவர்கள். இணை பிரியா நண்பர்கள். இத்தனைக்கும் மேலாக, ஒருவரை மற்றவர் விஞ்சும் வகையில் படிப்பில் திறமை காட்டி மூவருமே உயர் பதவி - அரச பதவி - வகித்து ஓய்வு பெற்றவர்கள்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் ஓய்வு பெற்று விட்ட எங்களது பிற்கால வாழ்க்கை முறை ஆளுக்கு ஆள் வித்தியாசமான வகையில் அமைத்து விட்டிருந்தது.

இத்தனைக்கும் நாங்கள் பிறந்து வளர்ந்து ஆரம்பக் கல்வி கற்ற எங்கள் கிராமம் இன்னமும் அடிப்படைத் தேவைகள் அத்தனையையும் பெற்றுப் பூரணத்துவம் பெற்று விட்டதாய் சொல்லிக் கொள்ள முடியவில்லை. கிராமத்தின் அத்தியாவசியத் தேவைகள் இன்னமும் நிறையவே இருக்கின்றன.

கால ஓட்டத்தில் நாம் பிறந்த கிராமம் மாறிப் போயுள்ளது உண்மையே ஆயினும், நவீன கால வசதிகள் பல இன்னமும் கிராமத்தை வந்தடைய வில்லை. கடந்த இரு தசாப்த கால யுத்தச் சூழல் ஏற்கனவே கிட்டியிருந்த வசதிகள் ஒரு சிலவற்றையும் அற்றுப்போகச் செய்து விட்டிருந்தது.

ஆனாலும், கிராமத்து மக்களின் கடும் உழைப்பும், உற்சாகமும் கொஞ்சமேனும் குறைந்து போய் விடவில்லை. சிரமங்களும் வசதி வாய்ப்பின்மையும் அவர்களுக்குப் பழக்கமானதொன்று.
மொத்தத்தில் எனது கிராம மக்கள் வாழ்க்கைப் பேராற்றில் எதிர் நீச்சல் போடத் தெரிந்தவர்கள்.

சரி, விஷயத்துக்கு வருவோமே;

ராஜா, சேகர், நான், எங்களில் ராஜா சற்று வித்தியாசமான போக்குடையவன். அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், தலை நகரில் நிரந்தரமாகத் தங்கிவிட்ட பிள்ளைகள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்ட போதிலும், பிடிவாதமாக எங்கள் கிராமத்திலேயே, கிராமத்து உற்றார், உறவினர்கள் மத்தியில் தனது வயதான மனைவியுடன் வாழ்வதில் திருப்தியும் மகிழ்வும் கொண்டான்.

ஊராரின் நன்மை தீமைகளில் தானும் பங்குகொண்டு, ஊராரின் பிரச்சினைகளைத் தானும் எதிர்கொண்டு, ஊர் மக்களின் அபிமானத்துக்கும் அன்புக்கும் பாத்திரமான ஒருவனாய்- அவர்களில் தானும் ஒருவனாய் வாழ்வதில் மன நிறைவு கண்டான். பொதுவில் சமூகம் என்ற மரத்தின் விழுதுகளில் அவனும் ஒருவனாய் பூரண வாழ்வு வாழ்ந்தான் எனக் கூறுவது எந்த வகையிலும் தவறாகாது.

சேகரின் வாழ்க்கை பிறிதொரு பாணியில் அமைய நேர்ந்தது.

அரச சேவையில் இருந்த வேளையிலும் சரி, இளைப்பாறிய பின்னரும் சரி சேகரால் எமது ஊருடன் ஒட்டி உறவாடி வாழச் சந்தர்ப்பம் கிட்டியதில்லை. அதற்காக அவன் அக்கறை காட்டியதாயும் இல்லை. வெளிநாட்டில் வாழும் பிள்ளைகள் பெற்றவர்களை வசதியாக வைத்துக் கொள்ளும் விருப்பில் மேற்கொண்ட ஒழுங்குகளை சேகரால் மறுத்துவிட முடியவில்லை. பிறந்து வளர்ந்த கிராமத்தில் சொந்தமாய் வீடு இருக்க, நகரத்தில் அவர்கள் வாடகைக்கு எடுத்துக் கொடுத்த வீட்டில் சேகர் தனது பிற்காலத்தை கழிக்க நேர்ந்தது. அரசசேவையில் பல ஆண்டுகாலமாய் ஊரார், உறவுகள் என்ற பிணைப்புகளை விட்டுத் தூர விலகிப் பற்பல நகரங்களில் வெளியார்கள் மத்தியில் வாழ்ந்த பழக்கத்தால் சேகருக்கு நகரத்தில் வெளியார்கள் மத்தியில் தானும் தன் மனைவியும் என்ற குறுவட்டத்துள் தனது கடைசிக்காலத்தைப் போக்குவது சிரமமானதாய்த் தோன்றியதில்லை.

ஊரில் சொந்த பந்தங்கள் மத்தியில் திருப்தியான வாழ்வு வாழ்ந்து வந்த ராஜா கடந்த ஆண்டில் ஒரு நாள் - ஒரு சில நாள்கள் சுகவீனம் என்ற சாட்டில் - காலமாக நேர்ந்தது.

அவனது மறைவுச் செய்திகேட்டு ஊரே திரண்டது; உண்மையாய் அழுதது. அவனது மறைவு ஊரிலிருக்கும் ஒவ்வொருத்தரையும் எவ்வளவு தூரம் கவலையுற வைத்ததென்பதை நேரில் கண்டேன்.

தமது குடும்பத்து உறவினனொருவரின் இழப்புப்போல் கருதி அத்தனை ஊரவர்களும் நான் நீ எனப் போட்டி போட்டு ராஜாவின் இறுதிக் கருமங்களில் பங்கேற்றனர்.

கடந்த மாதம் ஊருக்குச் சென்றிருந்த வேளையிலும் ராஜா இன்னமும் ஊரவர்களின் மனதில் நிலைபெற்றிருப்பதை என்னால் ஊகிக்க முடிந்தது.

சென்ற வாரம் நகரத்தில் தங்கி வாழ்ந்த சேகர் திடீரெனச் சுகவீனமுற்றதால் அருகிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டும் வைத்தியர்களால் அவனைக் காப்பாற்ற முடியவில்லை.

செய்தியைக் கேள்விப்பட்டபோது 'காவோலைகள் மரத்திலிருந்து வீழ்ந்துதானே ஆகவேண்டும்'' என எண்ணிக்கொண்டேன்.

செய்தி வெளிநாட்டிலிருந்த பிள்ளைகளுக்குத் தெரிந்து அடுத்த நாளே அவர்கள் வந்து சேர்ந்து விட்டனர். நகரத்தில் சேகருக்கு வீட்டை வாடகைக்குக் கொடுத்திருந்த வீட்டு உரிமையாளர் அந்த வீட்டில் சேகரின் இறுதிக் கிரியைகள் நடத்தப்படுவதை விரும்பாதது மட்டுமல்ல, அந்த வாடகை வீட்டில் இறுதிகிரியைகள் நடத்தப்பட்டால் ஒப்புக்காக நண்பர்கள், பழகியோர் வந்து செல்வர்களேயொழிய ஊரவர், உற்றார், உறவினர் என அதிகம் எதிர்பார்க்க இயலாதென்பதைச் சேகரின் பிள்ளைகள் உணர்ந்து கொண்டனர். எனவே, சேகரின் மரணச்சடங்கை அவர் பிறந்து வளர்ந்த ஊரில், அவர் பிறந்து வளர்ந்த வீட்டில் நடத்த முடிவு செய்யப்பட்டது. என்ன இருந்ததுமென்ன, தம்முடன் கூடி வாழ்ந்து தங்களது சுகதுக்கங்களில் பங்கு கொள்ளாத சேகரின் மரணச் சடங்கில் ஊர் மக்கள், உற்றார், உறவினர் வெறும் ஒப்புக்காகக் கலந்து கொண்டதோடு சரி. ஆனால், நகரத்தில் வாழ்ந்தவேளை சேகருடன் பழகிய மேல்தட்டுப் பிரமுகர்கள் வசதி படைத்த புள்ளிகள் எல்லோரும் புத்தம் புதுக் கார்களில் வந்திறங்கி சேகரின் உடலுக்கு மரியாதை செலுத்திய கையோடு, பிள்ளைகளுக்கு நாலு அனுதாப வார்த்தைகள் கூறிவிட்டு நாகரிகமாகவே திரும்பிச் சென்று விட்டனர். இத்தனை நாள்களும் தமது உறவினர்கள் யார்? ஊரவர் யார்? எனத் தெரிந்து கொண்டிராத சேகரின் பிள்ளைகள் ஊர் மக்களை ஒருவாறு கெஞ்சிக் கேட்டு அவர்களின் உதவியுடன் தகப்பனின் மரணச் சடங்குகளை நிறைவேற்றி முடித்ததை நேரில் கண்டேன்.

இத்தனை நாளும் நான் உணரத் தவறிய உண்மையொன்றை எனது நண்பர்களின் மரணத்தின் மூலம் நான் உணர்ந்து கொண்டேன். ராஜாவின் நினைவு இந்த ஊரவர்களின் மனங்களில் என்றும் நிலைத்திருக்கப் போகிறது. சேகரின் நினைவு அவர்களைப் பொறுத்த வரை இந்த ஒரு வாரத்துக்குள்ளாகவே மறக்கப்பட்ட பழைய சம்பவமாகிவிட்டது.

இப்பொழுது தான் எனக்கு, எனது தவறு புரிகிறது. நான் கூட எனது பிள்ளைகள் உள்நாட்டிலேயே வெவ்வேறு நகரங்களில் வாழ நேர்ந்ததால் அவர்களுடனேயே எனது ஓய்வுக்காலத்தைக் கழித்துவிட்டேன். ஆனால், நான் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் எனது பழைய சொந்த பந்தங்கள் மத்தியில் அவர்களை அனுசரித்து - அவர்களது சுகதுக்கங்களில் பங்கு கொண்டு வாழ முயன்றால் நிச்சயமாக எனது இறுதிச்சடங்கு இத்தனை உறவினர்களின் மனக்கவலைகள் கண்ணீர் மத்தியில் நடந்தேறும் என்பது யதார்த்த உண்மை. ஆனாலும், நான் கடைசி பஸ்ஸையும் தவறவிடாது விழித்துக் கொள்ள வைத்தது எனது நண்பர்களின் மரண நிகழ்வுகளே!

பொன்வேளன்

வாராந்தம் வெளியாகும் இப்பத்தியில் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் எவையும், தனிப்பட்ட முறையில் எவரையும் சுட்டுவதில்லை. (ஆ-ர்)

## பறந்துவரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலநிலை மாற்றத்துக்கமைய வேற்று நாடுகளிலிருந்து குறிப்பிட்டதொரு காலப் பகுதிக்கு இலங்கையின் குறிப்பிட்ட பகுதிகளுக்குப் பெருந்தொகையில் இடம்பெயர்ந்து வாழும் - வலசை போகும் - பறவைக் கூட்டங்களாலும் இந்தத் தொற்றுநோய் இலங்கைக்குள் எடுத்து வந்து பரப்பப்படும் அபாயம் பெருமளவில் சாத்தியப்படத்தக்க நிலை காணப்படுவதாகவும் டாக்டர் ஸ்ரீதரன் சுட்டிக் காட்டியுள்ளார். பெரும்பாலும் மழை காலமான ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் இவ்விதம் இடம் பெயர்ந்து இலங்கையின் பல பாகங்களுக்கும் வரும் இப் பறவைக் கூட்டங்கள் மார்ச், ஏப்ரல் மாதம் வரை இங்கேயே தங்கியிருப்பதை யாழ்ப்பாணத்தின் ஒரு சில பகுதிகளில் கூட அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அப்பறவைகள் பெருமளவில் வந்து தங்கும் பகுதிகள் சுகாதாரத் திணைக்களத்தினால் கண்டறியப் பட்டுள்ளன. இவ்விதம் வந்து தங்கும் பறவைகள் உயிரிழக்கும் சமயம் அவற்றை அவதானித்து உரியவர்களுக்குத் தெரிவிக்குமாறு மிருக வைத்தியத் துறையினருக்கும் பொது மக்களுக்கும் அறிவுறுத்தும் நடவடிக்கையும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி, மேலெழுந்தவாரியான இரத்தப் பரிசோதனை முறையும் இறந்த கோழிகள், பறவைகள் விடயத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன், கோழி வளர்ப்பில் ஈடுபடுவோர் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்விடயத்தில் வெவ்வேறு பகுதிகளிலிருந்து பெறப்பட்ட வளர்ப்பு மிருகங்கள், பறவைகள் என்பவற்றின் இரத்த மாதிரிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்தி பறவைக்காய்ச்சலை ஏற்படுத்தும் தொற்றுக்கிருமி காணப்படுகிறதா? எனக் கண்டறியும் முயற்சியில் களனிப் பல்கலைக்கழகம் ஈடுபட்டு வருகின்றது. இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் சுகாதாரத் திணைக்களத்தின் பணியை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமானால் நாட்டின் சகல பொதுமக்களும் இந்தப் பறவைக்காய்ச்சல் நோய் குறித்து அவதானமும் எச்சரிக்கை உணர்வும் கொண்டு செயற்படுதல் அவசியமாகும்.

பொதுவாகவே, அரச இயந்திரம் எந்தவொரு திட்டத்திலும் மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நடந்து கொள்வதும், இந்த நாட்டின் தமிழ் மக்களைப் புறக்கணிப்புடன் நடத்தி வருவதும் ஆச்சரியமான தொன்றல்ல. ஆனால், தொற்று நோய்க்கு இனமத வேறுபாடு எதுவும் கிடையாது என்பதை நாம் கவனத்தில் கொள்ளல் வேண்டும். அந்த வகையில் 'தன் கையே தனக்குதவி' என்ற பாங்கில் 'வருமுன் காப்போம்' என்ற எச்சரிக்கை உணர்வுடன் - இப் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தவல்ல பறவைக்காய்ச்சல்நோய் குறித்த விவரங்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்து தெரிந்து வைத்து அவதானத்துடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.







# பட்டறிவுப் பகிர்வு

எம்.பிக்களுக்கு, வரிவிலக்கு அளிக்கப்பட்ட வாகன உரிமம் என்ற சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஜே.வி.பிக்குள் புகைச்சல் என்று தகவல். இந்த உரிமத்தைப் பெற்று வாகனம் ஒன்றை இறக்கி, பின்னர் கைமாற்றினால் சுமார் 35 லட்சம் ரூபா வரை தேறும் என்கிறார் விடயமறிந்த ஓர் அன்பர்.

'மக்கள் சேவையாளர்கள்' என்று தங்களைக் கூறிக் கொள்ளும் ஜே.வி.பியினர், இந்த உரிமத்தைப் பெற்றால் அதை வைத்தே அவர்களுக்கு எதிராகப் பெரும் பிரசாரப் படத்தை நடத்திவிடுவார்கள் ஐ.தே.கட்சியினர் என்று அஞ்சுகின்றது ஜே.வி.பி. தலைமை. இதனால் உரிமம் பெறுவதற்கு எதிராகத் தடைவிதித்து 'அன்புக் கட்டளை' வழங்கப்பட்டுள்ளதாம்.

ஆனாலும், சுமார் 35 லட்சம் ரூபா 'சுளை'யாக உழைக்கக் கூடிய வாய்ப்பு, 'கைக்கெட்டியும் வாய்க்கெட்டாமல் போகும் நிலையால்' ஜே.வி.பியின் பல எம்.பிக்களுக்கு குமைச்சல்.

திடீரென நாடாளுமன்று கலைக்கப்பட்டால், அதன் பின் இந்த உரிமத்தைப் பெறமுடியாது என்பதால் அவசரம், அந்தரத்தோடு அங்கலாய்க்கின்றார்கள் அவர்கள்.






ஏனைய செல்லிடப்பேசிகள் இயங்காத இடங்களிலும்
அல்கடெல் இயங்கும்.
எனவே நீங்கள் ஒருபோதும் மேலும் கீழும் விழிக்கவேண்டியதில்லை.







LOWE LDB

THE cbe GROUP OF COMPANIES

காட்சியறைகள்

| | |
|---|---|
| வன் ஸ்டொப் ஷொப் | 237 0370 |
| யூனியன் ப்ளேஸ் | 267 9679 |
| திருகோணமலை | 026-2225280 |
| யாழ்ப்பாணம் | 021-2227283 |
| மாத்தறை | 041-2232633 |
| களுத்துறை | 0777-237878 |
| குருனாகல் | 0777-265566 |
| கண்டி | 077-3055305 |

Dialog ARCADE

| | |
|---|---|
| கொழும்பு | 0777-592592 |
| நுகேகொடை | 0777-363666 |
| கண்டி | 0777-306878 |
| காலி | 0777-707474 |
| வென்னப்புவை | 0777-584348 |
| குருனாகல் | 0777-508408 |

ALCATEL

அபூர்வத்தின் ஆளுமை

ஐரோப்பிய சங்கத்தின் தராதரத்திற்கு அமைய சுகாதாரத்திற்கு தீங்கு ஏற்படாதிருக்க கதிர்வீச்சு விகிதம் 2.0 W/Kg இற்கும் குறைவானதாக இருப்பது அவசியம். அல்கடெல் கையடக்கத் தொலைபேசிகளின் கதிர்வீச்சு விகிதம் 0.40 W/Kg – 0.82 W/Kg இடைப்பட்டதாகும்.